# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# 2022

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# 2022

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2022

## செலவினத் தலைப்பு 193

*அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை*

மே 2023

வெளியீடு

**தொழில் அமைச்சு**
7 ஆவது தளம், "மெஹெவர பியெச"
நாரஹேன்பிட்டி
கொழும்பு-05

**தொலைபேசி:**
011 2581991



# கௌரவ தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரின் செய்தி

தொழில் அமைச்சு, 2022 ஆம் ஆண்டில் அடைந்துள்ள முன்னேற்றத்தை எடுத்தியம்புகின்ற இந்த செயலாற்றுகை அறிக்கைக்கு செய்தியொன்றை வழங்குவது எனக்கு மனமகிழ்வைத் தருகின்றது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தைகளுக்கு தேர்ச்சியுள்ள மனித வளங்களை வழங்குவதனை இனங்காணும் பொறுப்பு, தொழில்துறை அமைதியையும், ஒத்துழைப்பினையும் மற்றும் சமூகப் பாதுகாப்பினையும், தொழில் உரிமைகளையும் நிலைநிறுத்துதல் அத்துடன், விசேட முன்னுரிமை களாக உற்பத்தித்திறனை மேம்படுத்துவதனூடாக சமூக பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்தல் ஆகியவை தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சிற்கும், அதனுடன் இணைந்துள்ள நிறுவனங்களான தொழில் திணைக்களம், மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம், தேசிய உற்பத்தித்திறன் செயலகம், சிரம வாசனா நிதியம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரகம் ஆகியவற்றுக்கும் குறித்தொதுக்கப்பட்டுள்ளன.

புலம்பெயர் வேலையாளர்கள் இலங்கைக்குள் அந்நிய செலாவணியை சேமிப்பதற்கும், முதலீடு செய்வதற்கும் விசேட ஏற்பாடுகளை கிடைக்கப்பெறச் செய்து, அவர்களது வருமானத்தை சட்டப்பூர்வமான வழிகளில் இலங்கைக்கு அனுப்புவதனை ஊக்குவித்து புலம்பெயர் வேலையாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் செயன்முறையை அறுமுகப்படுத்தி, அந்நிய செலாவணி உழைப்பை அதிகரிப்பதனையும், தற்போதைய பொருளாதார சவால்களின் தோற்றத்துடன் தேசிய பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதை நோக்காகக் கொண்டு வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்காக, ஊக்குவிப்பதற்காக மற்றும் அத்தகைய தொழில்களுக்குத் தேவையான ஆற்றல்களை மேம்படுத்துவதற்காக விரிவானதொரு நிகழ்ச்சித்திட்டத்தை இந்த அமைச்சு ஆரம்பித்துள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டம், தொடர்புபடுகின்ற கடந்த ஆண்டுக்கெதிராக 82% அதிகரிப்பினைக் காட்டி, வெளிநாட்டுப் பணம் அனுப்புகை 2023 பெப்ரவரி மாதத்தில் 407 அமெரிக்க டொலர் மில்லியனாக அதிகரித்தமையை சான்றாக விளக்கி உயர் வெகுமதிகளைக் கொண்டு வந்துள்ளது.

முதலீடுகள் உள்வருவதற்கு ஏற்பாடு செய்வதற்கு சாதகமான சூழலை உருவாக்கி, தொழில் சமூகத்தினால் அனுபவிக்கப்படுகின்ற அனுகூலங்களுக்கு எந்த வகையிலும் பாதிப்பின்றி அனைவருக்குமான அனுகூலங் களை உறுதிப்படுத்தி, அவற்றின் நிலைத்த தன்மையைப் பேணும் வகையில் தற்போதிருக்கின்ற தொழில் சட்டங்களில் காணப்படுகின்ற சிக்கல்களை நீக்கி, அவற்றை எளிதாக்குவதன் மூலம் அனைத்து அக்கறைதாரர்களுக்கும் பயனளிக்கும் வகையில் தொழில் சட்டத்தை திருத்துவதற்கு தேவையான நடவடிக்கை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவிப்பதில் நான் மனமகிழ்வடைகின்றேன்.

அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற தொழில் திணைக்களம் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஆகியவை வழங்குகின்ற சேவைகளை பொது மக்களுக்கு இலகுவாக அடையக்கூடிய வகையில் அத்தகைய சேவைகளை டிஜிட்டல் மயமாக்கும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. அவர்களின் தொழில்சார் கௌரவத்தை நிலைநிறுத்தும் வகையில் சமூகத்தில் 'உடல் உழைப்பு' வேலைகள் எனப்படும் தொழில்களின் தரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படும். அதேபோன்று, தற்போதைய வேலை உலகத்திற்கு அவசியமான தொழில் சந்தை தகவல் தரவுத்தளத்தை நிறுவுவதற்கான அடித்தளமும் அமைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு சனாதிபதி அவர்களின் கொள்கைகளுடன் இணைந்து, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை அறிமுகப்படுத்தி தொழிலின்மையைக் குறைப்பதற்கும், உழைக்கும் வர்க்கம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் முன்னெடுக்கப் படுகின்ற நடவடிக்கையினூடாக, பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான வழிமுறையாயொன்றாக, மாவட்ட மட்டத்தில் தொடர் நடமாடும் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கான ஆயத்தப் பணிகள் 2022 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2022 ஆம் ஆண்டில் சிறந்த செயலாற்றுகையை அடைவதற்கான அவர்களின் முயற்சிகளுக்காக, வெளிநாட்டு வேலைவாய்ப்பு இராஜாங்க அமைச்சர் கௌரவ ஜகத் புஸ்பகுமார மற்றும் அமைச்சின் செயலாளர் திரு.ஆர்.பி.ஏ.விமலவீர அவர்களுக்கும்,ஒட்டுமொத்தப் பதவியினர்களுக்கும் மற்றும் அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற அனைத்து நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அவர்களின் பதவியினர்கள் அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மனுஷ நாணாயக்கார (பா.உ.)**
தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர்



## கௌரவ வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சரின் செய்தி

வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையிலிருந்து இலங்கைப் பொருளாதாரம் பெற்றுள்ள நன்மைகள் இரட்டை முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இது, ஒருவகையில், நாட்டிற்குத் தேவையான அந்நியச் செலாவணியைக் கொண்டுவருகின்ற அதேவேளையில், நாட்டின் தொழிலின்மைக்குத் தீர்வையும் வழங்குகின்றது. சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் கணிப்புகளின்படி, 20 முதல் 30 வயதிலுள்ள மக்கள் தொகையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்படவுள்ளது. உள்நாட்டில் தொழில் அணியில் புதிதாக நுழைகின்ற அத்தகைய பாரிய குழுவிற்கு வேலை வாய்ப்புகளைக் கிடைக்கச் செய்வது பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடும். மேலும், தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் தோற்றுவிக்கப்பட்ட பொருளாதாரச் சுருக்கம் காரணமாக, உள்நாட்டு வேலைவாய்ப்புச் சந்தையில் அதிகரித்துள்ள தொழில் அணிக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குவது மிகவும் சவாலான தாக காணப்படும்.

நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பை உயர்த்துவதன் மூலம், நாட்டின் வங்கி முறை மூலம் தமது வருமானத்தை செலுத்தும் புலம்பெயர் வேலையாளர்களுக்கு சலுகைகளை வழங்குவதற்கு அரசாங்கம் பல நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்துள்ளது. மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிகள், ஓய்வூதியத் திட்டம் மற்றும் ஏனைய சலுகைகள் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையில் மக்கள் மத்தியில் அதிகரித்துவரும் ஆர்வத்தை உருவாக்கியுள்ளது. 249 மில்லியன் அமெரிக்க டொடலர்கள் என்ற குறைந்த அளவில் இருந்த வெளிநாட்டுப் பணம், மேற்கூறிய திட்டங்களின் பின்னணியில் 2022 செப்டெம்பர் மாதமளவில் 454 மில்லியன் அமெரிக்க டொலராக உயர்ந்திருந்தது.

2022 ஆம் ஆண்டில், 57% வீட்டு மற்றும் தேர்ச்சியற்ற பணியாளர்களாக சுமார் 311,161 பேர் தொழிலுக்காக புலம்பெயர்ந்துள்ளனர், அவர்களில் பெரும்பாலோர் குறைவான சேவைகளைப் பெறுகின்ற கிராமப் புறங்களைச் சேர்ந்தவர்கள். முறையான பயிற்சி இல்லாததால் அவர்கள் பல பிரச்சனைகளை எதிர்கொள் வதாக தெரிவிக்கப்படுகின்றது. இது பிரதானமாக சாத்தியமுள்ள புலம்பெயர் வேலையாளர் களுக்காக அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களைப் பற்றிய அவர்களின் அறிவு குறைவு காரணத்தினாலாகும். புலம்பெயர் வேலையாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குவதற்கு அமைச்சின் பிரதேசம்சார் நிருவாகக் கட்டமைப்பை பணியிலீடுபடுத்த முடியும். இந்த நோக்கத்திற்காக, ஏற்கனவே நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள கூட்டுத் திட்டங்களை செயற்படுத்துவதற்கான முன்னேற்றம் உரிய அலுவலர்களின் மாவட்ட அளவிலான கூட்டங்கள் மூலம் பின்பற்றப்படுதல் வேண்டும்.

**ஏ.பி. ஜகத் புஸ்பகுமார (பா.உ.)**
வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்



## தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுச் செயலாளரின் செய்தி

உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளைப் பாதுகாத்தல், அவர்களின் வேலைப் பாதுகாப்பை உறுதி செய்தல், நாட்டில் தொழில்துறை அமைதியை ஏற்படுத்துதல், வெளிநாட்டு தொழில்வாய்ப்பு சந்தைக்கு தேர்ச்சியுள்ள வேலையாட்களை அனுப்புதல் மற்றும் 2023 ஆம் ஆண்டில் செயற்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ள திட்டங்கள் தொடர்பில் 2022 ஆம் ஆண்டில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சு ஆற்றியுள்ள ஆக்கத்திறன்மிக்க வகிபாகத்தைக் தொகுத்து எடுத்தியம்புகின்ற இந்த செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பிப்பதில் நான் மகிழ்வடைகின்றேன்.

தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து அந்நிய செலாவணி வருமானத்தை அதிகரிப்பது மிகவும் முக்கியமானதாகும். அதே போன்று, நாட்டில் தொழில்துறை அமைதியைப் பேணி, முதலீட்டாளர்களுக்கு உகந்த சூழலை உருவாக்கி, உள்நாட்டு உற்பத்திகளை அதிகரிப்பது தற்போதைய பொருளாதார வீழ்ச்சியை மேம்படுத்து வதற்கு உதவியாக இருக்குமாகையால், இந்த அமைச்சு புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

தற்போதைய மற்றும் எதிர்கால சவால்களை எதிர்கொள்ளும் வகையில் தொழில் சட்டங்களை திருத்து வதற்கும், உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், அதேபோன்று, சட்டங்களிலுள்ள சிக்கல்களை நீக்கி, சட்டங்களை எளிதாக்குவதன் மூலம் அனைத்து அக்கறைதாரர்களுக்கும் நன்மைகளை உறுதி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோன்று, முன்னணி சேவையை வினைத்திறனுடன் வழங்குவதை குறிக்கோளாகக் கொண்டு, தனியார் மற்றும் பகுதியளவிலான அரச துறை பணியாளர் களுக்கு, பணிக்கமர்த்தப்பட்ட நாள் முதல் அவர்கள் ஓய்வு பெறும் நாள் வரை, தொழில் திணைக்களத்தின் அனைத்து சேவைகளையும் வழங்குவதற்காக, திணைக்களத்தின் டிஜிட்டல் மயமாக்கல் செயன்முறை துரிதப்படுத்தப்படும். டிஜிட்டல் மயமாக்கல் செயன்முறையின் ஆரம்ப நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நாட்டிற்கு அதிக அந்நியச் செலாவணியைக் கொண்டுவரும், அனுமதிப்பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரகங்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை கிடைக்கச்செய்யும் நோக்கத்துடன், 2022 ஆம் ஆண்டில் 300,000 இலங்கையர்களை வெளிநாட்டு வேலைக்கு அனுப்புவது ஊக்குவிக்கப்பட வுள்ளதுடன், புலம்பெயர் வேலையாளர்கள் வெளிநாட்டு தொழிலிலிருந்து உழைத்த அவர்களின் வருமானத்தை நாட்டிற்குள் சட்ட வழிகள் மூலம் அனுப்புவதனை ஊக்குவிப்பதற்காக முழு அளவிலான மின்சார வாகனத்தை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளதுடன், புலம்பெயர் வேலையாளர்களுக்கு உதவுதொகை ஓய்வூதியத் திட்டம் மற்றும் ஏனைய நலன்புரித்திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கான செயற்பாட்டினை

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஆரம்பித்துள்ளது.

தொழில் தொடர்பான விபத்துக்கள் மற்றும் நோய்களைத் தடுப்பதன் மூலம் பாதுகாப்பான வேலைத் தளத்தையும், ஆரோக்கியமான தொழிலணியையும் உருவாக்கும் செயற்பாட்டை மேலும் விரிவுபடுத்தி இலங்கை பணியாளர்களின் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல், 2023 ஆம் ஆண்டிலிருந்து திறைசேரி நிதியில் தங்கியிராத, சுய நிதியுடனான அமைப்பாக தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் உறுதியாக பராமரிக்கப்படுவதற்கும் மற்றும் நிறுவனத்தை தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் குறித்த சர்வதேச அளவிலான நிறுவனமாக மாற்றுவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டில் அச்சுறுத்துகின்ற பொருளாதார நிலைமை இருந்தபோதிலும், தொழில் அணியின் உரிமைகளை நிலைநிறுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதுடன், நிலவுகின்ற நிதி சவால்களால் கௌரவ தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரின் வழிகாட்டுதல் மற்றும் பணிப்புரையின் கீழ் பொருளாதாரத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் மாவட்ட மட்டத்தில் தொடர் நடமாடும் சேவைகளை ஏற்பாடு செய்வதற்கான அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது.

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களமானது, நாட்டின் அபிவிருத்திக்கு இட்டுச்செல்லக்கூடிய தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகள் மூலம் ஆக்கத்திறன் கொண்ட மனித வளத்தை உருவாக்குவதற்கு விலைமதிப்பற்ற பங்களிப்பை வழங்குகின்றது. அதேபோன்று, அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற நிறுவனங்களான, வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம், தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்,தேசிய உற்பத்தித்திறன் செயலகம், சிரம வாசனா நிதியம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரகம் ஆகியவை பணியாளர்களின் நலன்புரிக்காக, தொழில் சட்டவாக்கங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல், அரசு மற்றும் தனியார் துறைகளில் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் போன்ற பல திட்டங்களை செயற்படுத்துடன், வெளிநாட்டு வேலைவாய்ப்பை நோக்கி மக்களை வழிநடத்துகின்றன.
மேற்கூறிய பணிகளை ஆற்றுவதற்கு தலைமைத்துவம், வழிகாட்டல் மற்றும் அனுசரணையை ˆயவசழயெபந வழங்கியமைக்காக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் கௌரவ மனுஷ நாணாயக்கார அவர்களுக்கும், மற்றும் இராஜாங்க அமைச்சர் கௌரவ ஜகத் புஷ்பகுமார அவர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதற்கு விரும்புகின்றேன்.

அமைச்சின் உதவிச் செயலாளர்கள் மற்றும் அமைச்சின் ஒட்டுமொத்த பதவியினர்களுக்கும், தொழில் ஆணையாளர் அதிபதி, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதி, வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் மற்றும் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதிகள், தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் பணிப்பாளர், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினதும், சிரம வாசனா நிதியத்தினதும் பொது முகாமையாளர்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரகம் அத்துடன், 2022 ஆம் ஆண்டில் மேலுள்ள செயலாற்றுகையை அடைவதில் உறுதியான அர்ப்பணிப்புடன் பணிபுரிந்த அனைத்து மட்டங்களிலுமுள்ள அலுவலர்கள், அமைச்சின் அதிகாரத்திற்குட்பட்ட அனைத்து நிறுவனங் களின் தலைவர்கள் மற்றும் அலுவலர்கள் ஆகியோருக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

**திரு.ஆர்.பி.ஏ.விமலவீர**
செயலாளர்

# பொருளடக்கம்

- கௌரவ தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரின் செய்தி iii
- கௌரவ வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சரின் செய்தி v
- தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுச் செயலாளரின் செய்தி vi

**பொருளடக்கம்** ix
அட்டவணைகளின் பட்டியல் x
வரைபடங்களின் பட்டியல் xi
விளக்கப்படங்களின் பட்டியல் xi
புகைப்படங்களின் பட்டியல் xii

**அத்தியாயம் ஒன்று**
நிறுவனம்சார் விபரம் / நடைமுறைப்படுத்தல் பற்றிய சுருக்கம் 1
தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு 3
1.1 அறிமுகம் 3
1.2 தொலைநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள் 3
1.3 அமைச்சின் பிரதான தொழிற்பாடுகள் 3
1.4 நிறுவகக் கட்டமைப்பு 5
1.5 அமைச்சின் கீழுள்ள பிரிவுகள் 6
1.6 அமைச்சின் அதிகாரத்தின் கீழுள்ள நிறுவனங்கள் 8
1.6.1 தொழில் திணைக்களம் 8
1.6.2 இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் 10
1.6.3 மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் 11
1.6.4 தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் 11
1.6.5 தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் 12
1.6.6 வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம் 12
1.6.7 தேசிய உற்பத்தித்திறன் செயலகம் 13
1.6.8 சிரம வாசனா நிதியம் 14
1.6.9 வரையறுக்கப்பட்ட தனியார் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் 14
1.7 அமைச்சுப் பதவியினரின் தொகுப்பு 16

**அத்தியாயம் இரண்டு**
முன்னேற்றமும் எதிர்கால நோக்கும் 17
2.1 விசேட சாதனைகள், சவால்கள் மற்றும் எதிர்கால நோக்கு 19
2.2 அமைச்சின் முன்னேற்றம் 28

**அத்தியாயம் மூன்று**
2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை 87
3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று 89
3.2 2022.12.31 இலுள்ளவாறு நிதி நிலைமைக் கூற்று 91
3.3 2022.12.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பண ஓட்டக் கூற்று 92
3.4 நிதி கூற்றுக்களுக்கான குறிப்புகள் 93
3.5 வருவாய் சேகரிப்பின் செயலாற்றுகை 94
3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை 94
3.7 நிதி சாரா சொத்துக்களை அறிக்கையிடுவதில் செயலாற்றுகை 94
3.8 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை 95
3.9 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை 96

**அத்தியாயம் நான்கு**
செயலாற்றுகை குறிகாட்டிகள் 105
4.1 நிறுவகத்தின் செயலாற்றுகை குறிகாட்டிகள் (செயற்றிட்டத்தின் அடிப்படையில்) 107

**அத்தியாயம் ஐந்து**
நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் செயலாற்றுகை (SDG) 111
5.1 இனங்காணப்பட்ட நிலையான அபிவிருத்தி இலக்குகளை 113
5.2 நிலையான அபிவிருத்தி இலக்குகளின் சாதனைகள் மற்றும் சவால்கள் 117

**அத்தியாயம் ஆறு**
மனித வள விபரங்கள் 119
6.1 பதவியணி முகாமைத்துவம் 121
6.2 மனித வளத்திலுள்ள பற்றாக்குறை அல்லது மிகை நிறுவனத்தின் செயலாற்றுகையை எவ்வாறு பாதித்துள்ளது 121
6.3 மனித வள அபிவிருத்தி 121

**அத்தியாயம் ஏழு**
இணக்க அறிக்கை 139

# அட்டவணைகளின் பட்டியல்


| | | |
|---|---|---|
| அட்டவணை 1.1 | அமைச்சுப் பதவியினரின் தொகுப்பு | 16 |
| அட்டவணை 2.1 | புலம்பெயர் வேலையாளர்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள்- இ.வெ.வே. | 39 |
| அட்டவணை 2.2 | புலம்பெயர் வேலையாளர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்களை வழங்குதல் - இ.வெ.வே.ப. | 40 |
| அட்டவணை 2.3 | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்-இ.வெ.வே.ப. | 40 |
| அட்டவணை 2.4 | அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள தொழில் முகவரகங்களுக்கு அனுமதிப்ப்திரங்களை வழங்குதல், வெளிநாட்டு வேலைவாய்ப்புக் கட்டளைகள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான பதிவு | 41 |
| அட்டவணை 2.5 | அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள தொழில் முகவரகங்கள் / அனுமதிப்பத்திரம் அற்ற ஏனைய தரப்புகளுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல் | 42 |
| அட்டவணை 2.6 | தொழில் வங்கியூடாக வேலைவாய்ப்பு ஆர்வலர்களைப் பதிவுசெய்தல் - இ.வெ.வே.ப. | 42 |
| அட்டவணை 2.7 | 2022.01.01 இலிருந்து 2022.12.31 வரை நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் - தொழில் திணைக்களம் | 43 |
| அட்டவணை 2.8 | சம்பளச் சபைகளின் குறைந்தபட்ச வேதனங்களை இற்றைப்படுத்துதல் | 47 |
| அட்டவணை 2.9 | பொருளாதார சிரமங்கள் காணப்படுகின்ற தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களின் சிறுவர்களுக்கு அனுகூலங்களை வழங்குதல் | 53 |
| அட்டவணை் 2.10 | 2022.01.01 முதல் 2022.09.30 வரை அறிவித்தல்கள் அனுப்பப்பட்டது பற்றிய விபரம் | 56 |
| அட்டவணை 2.11 | நீதிமன்றங்களால் நீதிசார் நடவடிக்கைமுறைச் செயலாற்றுகை - 2022.01.01 முதல் 2022.1231 | 57 |
| அட்டவணை 2.12 | தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்- மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் | 61 |
| அட்டவணை 2.13 | நிதி ஏற்பாடுகளின்றி நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் - மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் | 63 |
| அட்டவணை 2.14 | தொழிலாளர் சந்தை தகவல் வெளியீடு | 63 |
| அட்டவணை 2.15 | மனித வளங்கள் முகாமைத்துவம் மற்றும் சர்வதேச உறவுகள்-மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் | 64 |
| அட்டவணை 2.16 | தொழில் சந்தை நிகழ்ச்சித்திட்டம்- மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு | 68 |
| அட்டவணை 2.17 | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் - தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் | 70 |
| அட்டவணை 2.18 | 2022 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட பரீட்சைகளின் விபரங்கள் | 71 |
| அட்டவணை 2.19 | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தைச் செம்மைப்படுத்துவதற்காக நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்- தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் | 72 |
| அட்டவணை 2.20 | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை செம்மைப்படுத்துவதற்காக நடத்தப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்- தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் | 72 |
| அட்டவணை 2.21 | அபாயகரமான மற்றும் உயிரிழக்காத விபத்துகளின் தன்மை பதிவாகியுள்ளது | 74 |
| அட்டவணை 2.22 | மரணத்தை ஏற்படுத்தும் விபத்துக்களின் மற்றும் மரணத்தை ஏற்படுத்தாத விபத்துக்களின் தன்மை | 74 |
| அட்டவணை 2.23 | இழப்பீடு நடவடிக்கைகளின் முன்னேற்றம் | 75 |
| அட்டவணை 2.24 | ஆசிய உற்பத்தித்திறன் தாபனத்தின் பங்களிப்புடன் நடைமுறைப்படுத்துதல் கருதிட்டங்கள் | 77 |
| அட்டவணை 2.25 | சிரம வாசனா நிதியத்தால் வழங்கப்பட்ட சட்ட உதவி | 79 |
| அட்டவணை 2.26 | தொழில் துறை காரணமாக புலம்பெயர்ந்த வேலையாளர்களின் எண்ணிக்கை | 81 |
| அட்டவணை 2.27 | சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் - 2022 | 82 |
| அட்டவணை 2-28 | தாபனச் செயற்பாடுகளின் முன்னேற்றம | 85 |
| அட்டவணை 2.29 | திறைசேரி ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல் | 85 |
| அட்டவணை 3.1 | வருவாய் சேகரிப்பில் செயலாற்றுகை | 94 |
| அட்டவணை 3.2 | ஒதுக்கப்பட்டுள்ள நிதிகளைப் பயன்படுத்துவதிலுள்ள செயலாற்றுகை | 94 |
| அட்டணை 3.3 | ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் முகவராக இந்த அமைச்சிற்கு வழங்கப்பட் டுள்ள ஏற்பாடுகள் | 94 |
| அட்டவணை 3.4 | நிதி சாரா ஆதனங்களை அறிக்கையிடுவதில் செயலாற்றுகை | 95 |
| அட்டவணை 4.1 | அமைச்சின் செயலாற்றுகைக் குறிகாட்டிகள் | 107 |
| அட்டவணை 5-1 | அமைச்சுக்கு ஏற்புடைய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் | 113 |
| அட்டவணை 6-1 | 2022.12.31 இலுள்ளவாறு அமைச்சின் பதவியணி | 121 |
| அட்டவணை 6-2 | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் அமைச்சு அலுவலர்களின் பங்குபற்றுதல் | 122 |
| இலங்கை 6.3 | வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 133 |
| அட்டவணை 7-1 | இணக்க அறிக்கை | 141 |

# வரைபடங்களின் பட்டியல்

# விளக்கப்படங்களின் பட்டியல்


| | | |
|---|---|---|
| வரைபடம் 2.1 | "ஷ்ரமிக சுரகும" வின் கீழ் பதிவுசெய்தல் | 36 |
| வரைபடம் 2.2 | அபிவிருத்தி அலுவலர்களால் தயாரிக்கப்பட்ட குடும்ப மேம்பாடு மற்றும் பாதுகாப்புத் திட்டம் | 37 |
| வரைபடம் 2.3 | தொழில் பிணக்குகள் மற்றும் நியதிச்சட்ட சட்டங்களை மீறுதல் மீதான முறைப்பாடு களைப் பெற்றுக்கொள்ளுதலும் 2018 முதல் 2022 வரையில் அவற்றுக்கான தீர்வுகளும் | 45 |
| வரைபடம் 2.4 | தொழில் பிணக்குகள் மற்றும் நியதிச்சட்ட சட்டங்களை மீறுதல் மீதான மேன்முறையீடு களைப் பெற்றுக்கொள்ளுதலும், 2018 முதல் 2022 வரையில் அவற்றுக்கான தீர்வுகளும் | 46 |
| வரைபடம் 2.5 | இணையவழி சந்திப்பு முறைமையினூடாக ஊ.சே.நி விண்ணப்பங்களை கையளிப்பதற் கான சந்திப்புகளை முன்பதிவு செய்த நபர்களின் எண்ணிக்கை - செப்டெம்பர் மாதத்திலிருந்து | 55 |
| வரைபடம் 2.6 | 2022.01.01 முதல் 2022.12.31 வரை ஊ.சே. நிதியத்தின் அனுகூலங்களைப் பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை | 55 |
| வரைபடம் 2.7 | ஊ.சே.நிதியத்தின் அனுகூலங்களை வழங்குவதற்கு எடுத்த நேரம் - 2017 முதல் 2022 வரை | 56 |
| வரைபடம் 2.8 | நீதவான் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகள் | 57 |
| வரைபடம் 2.9 | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் பயிற்சி நடவடிக்கைகளிலிருந்தான வருமானம் | 70 |
| வரைபடம் 2.10 | அறிக்கையிடப்பட்ட மரணத்தை ஏற்படுத்தும் விபத்துக்களின் எண்ணிக்கை | 73 |
| வரைபடம் 2.11 | அறிக்கையிடப்பட்ட மரணத்தை ஏற்படுத்தும் மற்றும் மரணத்தை ஏற்படுத்தாத விபத்துக் களின் எண்ணிக்கை | 74 |
| வரைபடம் 2.12 | சுற்று நீதிமன்றங்களால் அறிவிக்கப்பட்ட விபத்துகளின் எண்ணிக்கை | 75 |
| வரைபடம் 2.13 | சிரம வாசனா நிதியத்தின் வளர்ச்சி | 80 |
| வரைபடம் 2.14 | வரையறுக்கப்பட்ட தனியார் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரகம் மூலம் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக புலம்பெயர்ந்த ஆட்களின் எண்ணிக்கை | 81 |
| வரைபடம் 2.15 | உள் தணிக்கை நடவடிக்கைகளின் முன்னேற்றம் | 86 |


## விளக்கப்படங்களின் பட்டியல்


| | | |
|---|---|---|
| விளக்கப்படம் 1.1 | தொழில் திணைக்களத்தின் கட்டமைப்பு | 5 |
| விளக்கப்படம் 1.2 | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கட்டமைப்பு | 9 |
| விளக்கப்படம் 1.3 | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கட்டமைப்பு | 10 |
| விளக்கப்படம் 2.1 | 2022 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட தொழில் ஆய்வுகள் | 44 |
| விளக்கப்படம் 2.2 | 2022 ஆம் ஆண்டில் பதிவான வேலைநிறுத்தங்கள் பற்றிய தகவல்கள் | 46 |
| விளக்கப்படம் 2.3 | பணியாளரின் தொழில்சார் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் | 51 |
| விளக்கப்படம் 2.4 | சிறுவர் தொழில் பற்றிய முறைப்பாடுகள் மீதான விசாரணைகள் | 62 |
| விளக்கப்படம் 2.5 | இரவில் பெண்களை வேலைக்கு அமர்த்துவதிலுள்ள நிபந்தனைகளை மீறுவது குறித்த முறைப்பாடுகள் மீதான விசாரணைகள் | 62 |

# புகைப்படங்களின் பட்டியல்


புகைப்படங்களின் 2.1 சவுதி அரேபியாவின் தூதருடன் சந்திப்பு 34
புகைப்படங்களின் 2.2 சர்வதேச தொழிலாளர் அமைப்பின் டுநுநுனூ திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையை வெளியிடுதல் 35
புகைப்படங்களின் 2.3 நீகு நியமன மேலாண்மை அமைப்பு தொடங்குதல் 60
புகைப்படங்களின் 2.4 கொரிய மனிதவள அமைச்சகத்தின் அதிகாரிகளுடன் கலந்துரையாடல் 64
புகைப்படங்களின் 2.5 ஐக்கிய இராச்சியத்தின் தொழிற்சங்க உறுப்பினர்களுடன் சந்திப்பு 69
புகைப்படங்களின் 2.6 தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார மாநாடு 71
புகைப்படங்களின் 2.7 தேசிய பட்டியலில் விருது விழா தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் 76
புகைப்படங்களின் 2.8 குறைந்த வருமானலாபீ தொழிலாளர் குடும்பங்களுக்கு பள்ளி உபகரணங்கள் வழங்கப்படுகின்றன 78
புகைப்படங்களின் 2.9 பதிவு செய்யப்பட்ட வேலை தேடுபவர்களை வெளிநாட்டு வேலைகளுக்கு அனுப்புதல் 80
புகைப்படங்களின் 3.1 புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவி வழங்குதல் 95
புகைப்படங்களின் 5.1 புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் 117

# 01

## அத்தியாயம் ஒன்று

நிறுவனம்சார் விபரம் / நடைமுறைப்படுத்தல் பற்றிய சுருக்கம்

# தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

## 1.1 அறிமுகம்

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் பிரதான செயற்பணியானது, வேலையாளர்களின் தொழில் உரிமைகளைப் பாதுகாத்து, தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்தி தேர்ச்சியுள்ள வேலையாளர்களை உள்ளூர் மற்றும் சர்வதேச தொழில் சந்தைக்கு அனுப்புதல் மற்றும் நாட்டில் தொழிற்றுறை அமைதியைத் தாபிப்பதன் மூலம் பொருத்தமான பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்வதாகும். இந்தச் செயற்பணியை நிறைவேற்றுவதில், குறிப்பிட்ட செயற்பாடுகளின் மூலம் வேலையாளர்களுக்கு உச்ச சேவையை வழங்குகின்ற பொறுப்பை இந்த அமைச்சு கொண்டுள்ளது. அமைச்சின் இந்த வகிபாகத்தை ஆற்றுவதில், 2022.07.22 ஆம் திகதியிடப்பட்ட 2289/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் நிலையான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் இலங்கையால் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச சமவாயங்கள் ஆகியவற்றுடன் அமைச்சு தன்னை இணைத்துக் கொண்டுள்ளது.

## 1.2 தொலைநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள்

**தொலைநோக்கு,**

திருப்திமிகு உற்பத்திசார் தொழிலணி

**செயற்பணி**

தொழிற்றுறை அமைதி, சமூகப் பாதுகாப்பு, வேலையாட்களின் உரிமைகள் மற்றும் ஆக்கத்திறனை மேம்படுத்துவதனூடாக சமூகப் பொருளாதார அபிவிருத்தியை நோக்கிய பங்களிப்பு

## 1.3 அமைச்சின் பிரதான தொழிற்பாடுகள்

1. அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு விடயங்கள் தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வகுத்தமைத்தல், நடைமுறைப்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

2. வேலைவாய்ப்புக்கான புலம்பெயர்வு தொடர்பான இலங்கையின் தேசியக் கொள்கையை அத்துடன் மனிதவலு மற்றும் வேலவாய்ப்பு மீதான தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்துதல்.

3. சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப தொழில் உறவுகள் நியமங்கள், பணியாளர் நிருவாகம், நலன்புரி மற்றும் சுகாதாரத்திற்கான கொள்கைகளை வகுத்தமைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.

4. சர்வதேச தொழில் தாபனம் மற்றும் சர்வதேச சமூகப் பாதுகாப்பு ஒன்றியங்களுடன் கூட்டுறவினைப் பேணுதல்.

5. ஊழியர் சேமலாப நிதியம், தனியார் சேமலாப நிதியம் மற்றும் தனியார் ஓய்வூதியத் திட்டங்களின் நிருவாகமும் ஒழுங்குபடுத்துதலும்.

6. தொழிற்றுறை உறவுகள் மற்றும் தொழில் பிணக்குகளின் நடுத்தீர்ப்பு.

7. தொழில் உறவுகள் மற்றும் அவற்றை ஒழுங்குபடுத்துதலுடன் தொடர்புபட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை வகுத்தமைப்பதுடன் தொடர்புபட்ட விடயங்கள்.

8. தொழிற்சங்கங்களைப் பதிவு செய்தல் மற்றும் நாட்டின் அபிவிருத்திக்காக பொது மற்றும் தனியார் துறைகளில் உள்ள அனைத்து தொழிற்சங்கங்களின் செயற்பாடுகளையும் பயன்படுத்துவதற்கான நேர்மறையான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.

9. தேசிய உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்து, நடைமுறைப்படுத்துதல்.

10. அத்தகைய வேலைவாய்ப்புகளுக்குத் தேவையான திறன்களை மேம்படுத்துவதற்கு உரிய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை விரிவுபடுத்துதல், மேம்படுத்துதல் மற்றும் நடவடிக்கைகளை கைக்கொள்ளுதல்.

11. புலம்பெயர் வேலையாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துதல்.

12. இலங்கையில் அந்நிய செலாவணியைச் சேமிப்பதற்கும் முதலீடு செய்வதற்கும் புலம்பெயர் வேலையாளர்கள் மற்றும் வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கு விசேட வசதிகளை வழங்குதல்.

13. வெளிநாட்டு தொழிலின் பின்னர் இலங்கைக்குத் திரும்புபவர்கள் தொழில்களை ஆரம்பிப்பதற்கு ஏதுவாக விசேட கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

14. வேலையாளர்களின் தொழில் பிரச்சனைகளுக்கான தீர்வுகளை வழங்குதல் மற்றும் நலன்புரியினைப் பேணுதல்.

15. வெளிநாடுகளில் விபத்துக்குள்ளான உரித்துள்ள நபர்கள் நட்டஈட்டினைப் பெறுகின்ற செயல்முறையை வலுப்படுத்துவதற்கு சட்ட சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துதல்.

16. வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவரகங்களை ஒழுங்குபடுத்துதல்.


17. அமைச்சின் கீழுள்ள பொதுச் சேவைகளை பயனுள்ளதாகவும், மக்கள் சார்ந்ததாகவும் வழங்குதல்.

18. அமைச்சின் அதிகாரத்தின் கீழுள்ள நிறுவனங்களுக்கு, அதாவது தொழில் திணைக்களம், மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்,தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம், தேசிய உற்பத்தித்திறன் செயலகம், வரையறுக்கப்பட்ட தனியார் இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரகம் மற்றும் சிரம வாசனா நிதியம் ஆகியவற்றுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள ஏனைய அனைத்து விடயங்களையும் மேற்பார்வை செய்தல்.

# 1.4 நிறுவனத்தின் கட்டமைப்பு

**நிறுவனத்தின் கட்டமைப்பு**

**தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு**




**விளக்கப்படம் 1.1** தொழில் திணைக்களத்தின் கட்டமைப்பு

## 1.5 அமைச்சின் பிரிவுகள்

### I. நிருவாகம் மற்றும் தாபனங்கள் பிரிவு

இந்தப் பிரிவினால், இந்த அமைச்சின் நிருவாகம், முகாமைத்துவம், பொதுவான பராமரிப்பு, பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், மற்றும் அமைச்சினையும், அமைச்சின் கீழ் வருகின்ற நிறுவனங்களையும் ஒருங்கிணைத்தல் மனித வளங்கள் முகாமைத்துவம் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட கடமைகள் ஆற்றப்படுகின்றன. இதன்படி, பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- அமைச்சுக்கு இணைக்கப்பட்டுள்ள அரச அலுவலர்களினதும், கௌரவ அமைச்சரது துணைப் பதவியினரின் தனிநபர் கோவைகளையும் மற்றும் அவர்களுடன் தொடர்புபட்டுள்ள தாபனங்களின் செயற்பாடுகளையும் பேணுதல் அத்துடன் பதவியினர் பற்றிய தரவுகளை நாளந்தம்வரைப்படுத்துதல்.

- அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களில் சேவையாற்றுகின்ற அமைச்சு அலுவலர்கள் தொடர்பிலான செயற்பாடுகளை உருவாக்குதல்.

- அமைச்சரவை விஞ்ஞாபனத்தைத் தயாரித்தல் மற்றும் அமைச்சரவை தீர்மானங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்.

- தொழில் சட்டங்களை நாளந்தம் வரைப்படுத்துதல், புதிய சட்டவாக்கங்களை சட்டமாக்குதல் மூலம் தொழிற்றுறை ஒத்துழைப்பினை ஏற்படுத்துவதற்கும், வெளிநாட்டு வேலைவாய்ப்பினை மேம்படுத்துவதற்கும் கொள்கையளவிலான பங்களிப்பினை வழங்குதல்.

- ஆலோசனைக் குழுவினால், அரச முறையீட்டு ஆணைக்குழுவினால் கேட்கப்பட்ட அதேபோன்று பாராளுமன்ற கேள்விகளுக்கான பதில்களை வழங்குதல் மற்றும் சனாதிபதி செயலகத்திற்கு, பிரதம அமைச்சரின் அலுவலகத்திற்கு நேரடியாக மேற்கொள்ளப்பட்டு, அவர்களால் அனுப்பப்பட்ட பொது மக்களின் முறைப்பாடுகளுக்கும் அதேபோன்று உரிய நிறுவனங்களால் பொது மக்களிடமிருந்து நேரடியாகப்பெறப்பட்ட மனக்குறைகளுக்கும் பதில்களை வழங்குதல்.

- அமைச்சினது வாகனத்தை நிருவகித்தல், தேவையான கட்டமைப்பு வசதிகளுக்கான ஏற்பாடுகள், பயிற்சிச் செயற்பாடுகள், மூலதன பொருட்களினதும், உபகரணங்களினதும் முகாமைத்துவம், மேலதிக நேர, விடுமுறைக் கொடுப்பனவு, அக்கிரகார காப்புறுதி மற்றும் இடர் கடன்களுக்கான அனுமதி ஆகியவற்றுடன் தொடர்புடைய செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.

### II. அபிவிருத்திப் பிரிவு

சர்வதேச தொழில் தாபனத்தினது உறுப்பு நாடுகளில் ஒன்றாக இலங்கையின் கடமைகளை நிறைவேற்றுதல், சர்வதேசரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சமவாயங்கள் மற்றும் பரிந்துரைகளுக்கு இணங்க, நாட்டின் தொழில் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் தொழில் துறையில் உள்ள பிணக்குகளைத் தீர்த்தல், இந்த அமைச்சிடம் காணப்படுகின்ற தொழில் புலம்பெயர்வுடன் தொடர்புபட்ட சர்வதேச சமவாயங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் சட்டவாக்கங்களை, ஒழுங்குவிதிகளை மற்றும் வழிகாட்டுநெறிகளை உருவாக்குதல்.

- இலங்கையால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தொழில் தாபனத்தின் உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தை குறிப்பிட்ட காலத்திற்குள் சர்வதேச தொழில் தாபனத்திற்கு சமர்ப்பித்தல்.

- தொழில் துறையாக இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து சர்வதேச சமூகத்திற்கு விளக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- தொழில் துறை தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக சர்வதேச தொழில் தாபனத்தின் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளைப் பெறுவதற்கு நடவடிக்கைகளை எடுத்தல்.

- புதிய சட்டங்களை வரைவதற்கும், தற்போதிருக்கின்ற தொழில் சட்டங்களை தற்காலத்திற்கு ஏற்றவாறு திருத்துவதற்கும் தேவையான நடவடிக்கை எடுத்தல் மற்றும் உதவிகளை வழங்குதல்.

- வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, ஐக்கிய நாடுகள் சபை மற்றும் புலம்பெயர் வேலையாளர்களுடன் தொடர்புடைய ஏனைய அமைப்புகளால் கோரப்பட்ட அறிக்கைகளை பரிந்துரைகளுடன் சமர்ப்பித்தல்.

- வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் / உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுதல், ஏற்கனவே உள்ள ஒப்பந்தங்களைப் இற்றைப்படுத்தல் மற்றும் ஒப்பந்தங்களின் செயற்பாட்டைப் பின்தொடர்தல்.

- கூட்டுக் குழு கூட்டங்களுடன் தொடர்புடைய செயல்பாடுகள் மற்றும் பிராந்திய / உலகளாவிய கலந்துரையாடல்களுடன் தொடர்புபட்ட அனைத்து செயற்பாடுகளும்.

- களப் பணிகளை மேற்கொள்கின்ற அபிவிருத்தி அலுவலர்களுக்கு (வெளிநாட்டு வேலைவாய்ப்பு) பயிற்சியளிப்பது மற்றும் பயிற்றுவிப்பாளர்களின் பயிற்சிக் குழுவைப் பராமரித்தல் ஆகியவை தொடர்பான விடயம்

- அபிவிருத்தி அலுவலர்களினூடாக மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையுடன் தொடர்புபட்ட நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப் படுத்துதல்.

- புலம்பெயர்ந்த பெண் வேலையாளர்களின் குடும்பப் பின்னணி அறிக்கைகள் தொடர்பாக மேன்முறையீட்டுக் குழுக் கூட்டங்களை நடத்தி, குழுவின் முடிபுகளைத் தெரிவித்தல் மற்றும் பின்தொடர்தல்.

- தொழில் துறையில் நிலவுகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கும் நோக்கில் வேலையாட்கள் செறிந்து வாழ்கின்ற பகுதிகளில் நடமாடும் சேவைகளை ஒழுங்கமைத்தல்.

- அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் அலுவலர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சி வழங்குவதற்கான நடவடிக்கையைத் ஆரம்பித்தல்.

### III. திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பிரிவு

நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நோக்கி அபிவிருத்தித் திட்டங்களை வழிநடத்துவதற்குத் தேவையான அமைச்சு மற்றும் அதன் அதிகாரத்திற்குட்பட்ட அனைத்து நிறுவனங்களின் திட்டங்களை வகுத்தல், மற்றும் செயல்படுத்துதல், முன்னேற்ற மீளாய்வு மற்றும் பின்தொடர்தல் ஆகியவை இந்தப் பிரிவின் முக்கிய தொழிற்பாடுகளாகும். இதற்கு மேலும், இப்பிரிவு பின்வரும் கடமைகளையும் ஆற்றியுள்ளது.

- அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திப் பணிகளை உள்ளடக்கிய வருடாந்த செயற்திட்டத்தை தயாரித்தல் மற்றும் அதனை உரிய தரப்பினருக்கு அனுப்புதல். பூஜ்ஜிய அடிப்படையிலான வரவசெலவுத் திட்டத்திற்கு அமைவாக வருடாந்த செயற்றிட்டத்தைத் தயாரித்தல், அதனை நடைமுறைப்படுத்துதல் மற்றும் ஒவ்வொரு மாதத்தின் முன்னேற்றத்தையும் மதிப்பிடுவதன் மூலம் இலக்குகளை அடைவதை கண்காணித்தல்.

- தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் நியதிகளில் சனாதிபதி அலுவலகம், நிதி அமைச்சு, கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களம் அத்துடன் தேசிய திட்டமிடல் திணைக்களம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைதல் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளை மாதாந்த, காலாண்டு அடிப்படையில் சமர்ப்பித்தல்.

- இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் இணைந்து மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி அலுவலர்கள் ஊடாக மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு துறையுடன் தொடர்புபட்ட நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடுதல், கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடுதல்.

- தொழில் துறையின் காலத்துடன்கூடிய பல்வேறு கருப்பொருள்களின் அடிப்படையில் ஆண்டுதோறும் சஞ்சிகையொன்றினை வெளியிடுதல்.

- இலங்கை தொழில் செய்திமடலை வெளியிடுவதுடன் தொடர்புபட்ட அனைத்து செயற்பாடு களையும் கையாளுதல்.

- வரவு செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்திற்கு அமைச்சினால் அடையப்பெற்ற முன்னேற்றம் மற்றும் முன்னேற்ற அறிக்கை ஆகியவற்றை விபரிக்கும் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை தயாரித்தல்.

### IV. நிதிப் பிரிவு

அரசாங்கத்தின் கொள்கைகளுடன் இணங்கும் வகையில் உரிய குறிக்கோள்களை அடைவதற்கு இந்த அமைச்சுக்கு வரவுசெலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி வளங்களை வினைத் திறனுடன், ஆக்கத் திறனுள்ள வகையில், பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் நிதிப் பிரிவின் பிரதான பொறுப்பாகும்.

- 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கைக்கமைவாக வருடாந்த பொருட் கணக்கெடுப்பினை நடத்துதல்.
- நிதி அதிகார முகர்கள் தொடர்பான அறிக்கைகளையும், நிதி அதிகாரிகார தூ துக்குழு தொடர்பான செயற்பாடுகளை தயாரித்தல்.
- வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளை தயாரித்தல்.
- ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல்.
- அரச கணக்குகள் கழுவுக்கான அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் பொது திறைசேரிக்கும் ஏனைய உரிய நிறுவனங்களுக்கும் மாதாந்த மற்றும் காலாந்தர நிதி அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.
- கணக்காய்வு விசாரணை அறிக்கைகளை இற்றைப்படுத்திப் பராமரித்தலும், உரிய கணக்காய்வு விசாரணைக்கான பதுலை கணக்காய்வாளர் அதிபதிக்கு அனுப்புதல்.

### V. அகக் கணக்காய்வுப் பிரிவு

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 (ஆ) மற்றும் (எ) பிரிவில் தரப்பட்டவாறும் கணக்காய்வு முகாமைத்துவ திணைக்களத்தின் 2019.01.12 ஆம் திகதியிடப்பட்ட 01/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் தேவைப்பாடுகள் மற்றும் நிதி ஒழுங்கு 133 மற்றும் 134 நியதிகளின்படி அகக் கணக்காய்வுப் பிரிவுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின்படி பிரதம கணக்காய்வு அலுவலரின் பொறுப்பு ஆற்றப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கு தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 ஆம் பிரிவு நியதிகளின்படி மேற்கொள்ளப்பட்ட நியமனங்களின்படி தொழில் அமைச்சின் அகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் ஆற்றப்படுகின்றன.

இந்தப் பிரிவின் ஆரம்பத் தொழிற்பாடு தொழில் அமைச்சுக்கும், அதன் கீழ் வருகின்ற நிறுவனங்களுக்கும் அவர்களின் குறிக்கோள்களை அடைவதற்கு அகக் கட்டுப்பாடுகள் தொடர்பிலான குறைபாடுகளைத் தெரிவிப்பதற்கும், அத்தகைய நிறுவனங்களுக்கு தாபனங்கள் விதிக்கோவை, நிதி ஒழுங்கு விதிகள், பெறுகை வழிகாட்டல்நெறிகள் மற்றும் அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள அனைத்து சுற்றறிக்கைகளுடனும் இணங்குமாறு வழிநடத்துவதற்கான வழிகாட்டலையும் அறிவுறுத்தல்களையும் வழங்குவதாகும்.

இந்தப் பிரிவானது, அகக் கட்டுப்பாடுகளை வலுப்படுத்துதல் மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக முறையான நேர்மையான சேவைக்கு தொடர்ச்சியான ஆதரவை வழங்குதல், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடத்துதல் (காலாண்டு), வருடாந்த கணக்காய்வுத் திட்டங் களை வரைதல், அகக் கணக்காய்வு பரிசோதனைகள், சிறப்பு விசாரணைகள் மற்றும் களப் பரிசோதனைகளை நடத்துதலும், அதற்கான அறிக்கைகளைச் சமர்ப்பித்தலும் மற்றும் கணக்காய்வுத் திட்டங்களை நடத்துதல் ஆகியவற்றின் மூலம் தொழில் அமைச்சின் கீழ் வருகின்ற நிறுவனங்களிலுள்ள பிரச்சினைகளைக் குறைப்பதற்கு பங்களிப்புச் செய்கின்றது.,


## 1.6 இந்த அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற நிறுவனங்கள்

### 1.6.1 தொழில் திணைக்களம்

1923 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இந்திய குடிவரவு தொழில் கட்டளைச் சட்டம், இலங்கை பிரித்தானிய பேரரசின் காலனி கிரீடமாக இருந்தபோது, தேயிலை மற்றும் கோபி தோட்டங்களில் வணிகப் பயிர்ச்செய்கையின் கீழ் பிரித்தானிய காலனி ஆட்சியாளர்களால் நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட இந்திய குடிபெயர் தொழிலாளர்களுக்கு நலன்புரியினை வழங்கும் நோக்கத்துடன் இயற்றப்பட்டிருந்தது. மேற்படி கட்டளைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இந்தியக் குடிவரவுத் தொழில் திணைக்களக் கட்டுப்பாட்டாளரே தற்போதைய தொழில் திணைக்களத்தின் தோற்றம் ஆகும். தற்போது, தொழில் திணைக்களம், தொழில் வழங்குநர்கள், பணியாளர்கள் மற்றும் அரசாங்கம் அகிய முத்தரப்பு உறவுகளை வலுப்படுத்துவதன் மூலம் தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்தும் செயற்பாட்டைச் மேற்கொள்கின்றது.

தொழில் திணைக்களம் என்பது அரசு மற்றும் தனியார் துறைகளிலுள்ள வேலையாளர்களின் தொழில் உரிமைகளை நிலைநிறுத்துவதற்கும், சமூகப் பாதுகாப்பை நிறுவுவதற்கும் பொறுப்பான பொது நிறுவனமாகும். இதன்படி, தொழில் விடயத்துடன் தொடர்புபட்ட சட்டவாக்கங்களை அமுலாக்குவதற்கும் மேம்படுத்துவதற்கும் நாடளாவியரீதியில் தொழில் அலுவலகங்களின் வலையமைப்பைப் பேணுவதன் மூலம் திணைக்களம் தனது பொறுப்புகளை நிறைவேற்றுகின்றது.

## தொழில் திணைக்களத்தின் கட்டமைப்பு




**விளக்கப்படம் 1.2** தொழில் திணைக்களத்தின் கட்டமைப்பு

## பிரதான தொழிற்பாடுகள்

I. தொழில் சட்டவாக்கங்களை வலுப்படுத்துவதனூடாக தொழிற்றுறைப் பிணக்குகளைத் தடுத்தல் மற்றும் சமூகக் கலந்துரையாடலை மேம்படுத்துவதனூடாக எழுந்துள்ள பிணக்குகளைத் தீர்த்தல்.

II. நிறுவனம்சார் பரிசோதனைகளை நடத்துதல் மற்றும் தொழில் திணைக்களத்தின் அலுவலர்களால் தேவைப்படுத்தப்பட்ட அறிவினை கிரமமாக நாளது வரைப்படுத்துவதன் மூலம் வேலையாட்களின் நியதிச்சட்ட உரிமைகளை நிலை நிறுத்துதல்.

III. தொழில்தருநர்களுக்கும் பணியாளர்களுக்கும் தொழில் சட்டங்கள் பற்றிய அறிவினையும், புரிதலையும் விரிவுபடுத்துவதன் மூலம் தொழிற்றுறை அமைதியைத் தாபித்தல்.

IV. சர்வதேச தொழில் நியமங்களுடன் இணைந்து தேசிய பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றங்களுடன் ஒத்ததாக தொழில் சட்டங்களை வகுத்தமைத்தலும் நடைமுறைப்படுத்துதலும்.

V. ஊ.சே.நிதியத்தின் சிறந்த நிருவாகம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் சேமலாப நிதியங்களின் நிருவாகத்தினூடாக வேலையாட்களுக்கு அனுகூலங்கள் மற்றும் ஓய்வூதிய படிகள் உரிய வகையில் வழங்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுதல்.

VI. பெண்கள், இளைஞர் மற்றும் சிறுவர் தொழிலுக்கு ஏற்புடையதான சட்டங்கள் உள்ளடங்கலாக அனைத்து தொழில் சட்டங்களையும் முறையாக நடைமுறைப்படுத்துதல் மற்றும் சிறுவர் தொழிலையும், சிறுவர் தொழிலிலுள்ள ஆபத்தான வடிவங்களையும் இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

VII. சுகாதாரமான, விபத்துக்களற்ற வேலைத்தலங்கள் பற்றிய விழிப்புணர்வினை வேலையாட் களுக்கிடையில் உருவாக்குதல் மற்றும் வேலைத்தலங்களில்

விபத்துக்கள் ஏற்படாது என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுதல்.


VIII. மேலுள்ள தொழிற்பாடுகள் தொடர்பில் தீர்மானங்களை எடுப்பதற்குத் தேவைப்பட்ட புள்ளிவிபரங் களை சேகரித்தலும் பகுத்தாராய்தலும்.

IX. இலங்கையால் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தொழில் தாபனத்தின் சமவாயங்களுக்கு சட்ட வலு அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

### 1.6.2 இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமானது, இது 1994 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டம் மற்றும் 56 ஆம் இலக்க சட்டத்தால் வேலைக்காக இடம்பெயர்கின்ற இலங்கையர்களின் பாதுகாப்பு மற்றும் நலனுக்கு முன்னுரிமை அளிக்கின்ற 18 விசேட நோக்கங்களுடன் திருத்தப்பட்ட 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பிரதான நியதிச்சட்ட நிறுவனமாகும். பணியகத்தின் முக்கிய பொறுப்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு துறையை நிருவகித்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல், புலம்பெயர் வேலையாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் பாதுகாப்பு மற்றும் வலுவூட்டல் மற்றும் இலங்கையர்களுக்கு இலங்கைக்கு வெளியே தொழில் வாய்ப்புகளை மேம்படுத்துதல் மற்றும் விருத்தி செய்தலும் ஆகும். 1158 பணியாளர்களைக் கொண்ட தொழிலணியுடனான பணியகம் இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் தொழிற்றுறையை வலுப்படுத்துவதற்காக தொடர்ச்சியாகச் செயற்படுகின்றது.

### இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கட்டமைப்பு




**விளக்கப்படம் 1.3** இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கட்டமைப்பு

### இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பிரதான தொழிற்பாடுகள்

I. வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களை நடத்துவதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.

II. வெளிநாட்டு வேலைவாய்ப்பை எதிர்பார்க்கும் நபர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துதல்.

III. இலங்கை புலம்பெயர் வேலையாளர்களை பணியகத்தில் பதிவு செய்தல் / வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்கு இலங்கையர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்.

IV. புலம்பெயர் வேலையாளர்கள் அல்லது அவர்களது குடும்ப உறுப்பினர்களால் மேற்கொள்ளப் பட்ட முறைப்பாடுகளைத் தீர்த்தல்.

V. புலம்பெயர் வேலையாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு நலன்புரி வசதிகளை வழங்குதல்.

VI. வெளிநாட்டு வேலைவாய்ப்பு துறைக்கு பொருந்தும் சட்டங்களை அமுல்படுத்துதல்.

VII. இலங்கையர்களுக்கான வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை மேம்படுத்துதல்.

### 1.6.3 மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்

2010.02.12 ஆம் திகதியிடப்பட்ட 1640/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி 2010.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் கீழ் மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் நிறுவப்பட்டிருந்தது. தற்போது, இது தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கீழ் தொழிற்படுகின்றது என்பதுடன், அரச துறை வேலைவாய்ப்பு சேவைகளைப் பேணுகின்ற பொறுப்பு அத்துடன் தேசிய மனித வளங்கள் மற்றும் வேலைவாய்ப்பு கொள்கையின் விதிகளை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு இத்திணைக்களத்திடம் குறித்தொதுக்கப்பட்டுள்ளது.

#### பிரதான தொழிற்பாடுகள்

I. தொழில் வழிகாட்டல் செயற்பாடுகள்

II. சந்தைத் தகவல்களைச் சேகரித்தல், ஆராய்தல் மற்றும் வழங்குதல்.

III. அரச துறை வேலைவாய்ப்பு சேவைச் செயற்பாடுகள்

IV. சர்வதேச உறவுகள்

V. மனித வள அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகள்

### 1.6.4 தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் 2007 செப்ரெம்பர் 11 ஆம் திகதி அலுவலக ரீதியாகத் தாபிக்கப்பட்டிருந்ததுடன், 2010 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் நிறுவகச் சட்டத்தினால் பாராளுமன்றத்தினால் சட்டரீதியாக ஒன்றிணைக்கப்பட்டது. தொழிற்றுறையின் முத்தரப்பு அக்கறைதாரர்களை அதாவது தொழில்தருநர்கள், பணியாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தொழிற் சங்கங்கள் மற்றும் அரசஅலுவலர்களைக் கொண்டிருக்கின்ற ஆளுநர்கள் சபையொன்றினால் நிருவகிக்கப் படுகின்றது. இந்த நிறுவகத்தின் பிரதான தொழிற்பாடு, தொழில் சட்டவாக்கங்கள், ஒழுங்குவிதிகள் பற்றியும் அதேபோன்று பல்வேறு முகாமைத்துவ விடயப்பரப்புகள் தொடர்பிலும் அறிவைப் பெற்றுள்ள ஆக்கத்திறன் மிக்க, பலம்வாய்ந்த தொழில் அணியொன்றை உருவாக்குவதற்குத் தேவையான செயற்பாடு களை வடிவமைத்தல், நடைமுறைப்படுத்துதல், ஒழுங்கமைத்தல் போன்றவையாகும்.

நிறுவகத்தின் குறிக்கோள்களை அடையும் நோக்கில், தொழில் சட்டவாக்கமும் தொழிற்றுறை உறவுகளும், மனிதவள முகாமைத்துவம் மற்றும் வேலைத்தல உற்பத்தித்திறன் ஆகிய மூன்று பிரதான விடயப் பரப்புகளின் கீழ் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் கற்கைநெறிகளை நடத்துகின்றது. இந்த கற்கைநெறிகள், பயிற்சிகள், செயலமர்வுகள், குறுகிய கால கற்கைநெறிகள், சான்றிதழ் மற்றும் டிப்புளோமா கற்கைநெறிகள் போன்ற வடிவங்களில் வழங்கப்படுகின்றன.

#### பிரதான குறிக்கோள்கள்

I. உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைந்து தொழில் கற்கை நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் அபிவிருத்திச் செயன்முறையில் பணியாளர்களை துடிப்புடன் ஈடுபடுத்துவதற்காக அவர்களின் நலனை உறுதிப்படுத்துவதற்காக நடவடிக்கைகளை எடுத்தல்

II. தொழில் கல்வி பற்றிய கருத்தரங்குகள், செயலமர்வுகள், மாநாடுகள் மற்றும் கூட்டங்களை நடத்துதல் அத்துடன் அதனுடன் தொடர்புபட்ட சஞ்சிகைகள், நாளேடுகள், பருவ இதழ்கள் மற்றும் புத்தகங்களை வெளியிடுதல்

III. தொழில் கல்வியுடன் தொடர்புபட்டுள்ள ஆராய்ச்சிகள், ஆய்வுகளை நடத்துதல் மற்றும் கற்கைநெறிகளை வழங்குதல்

IV. நூலகம் மற்றும் தகவல் சேவைகளைத் தாபித்தலும் பராமரித்தலும்

V. ஒத்த குறிக்கோள்களுடனான தேசிய மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள், தாபனங்கள், ஒன்றியங்கள் மற்றும் சங்கங்களுடன் நெருங்கிய ஒத்துழைப்புடன் பணியாற்றுதல்

VI. பல்கலைக்கழகங்களினதும் மற்றும் ஒத்த நிறுவனங்களின் உதவியுடன் தொழில் கற்கைகளில் டிப்புளோமா கற்கை நெறிகள் உள்ளடங்கலான கற்கைநெறிகளை நடத்துதல் மற்றும் தேவைப்படும் போது சான்றிதழ்கள் மற்றும் டிப்புளோமாக்களை வழங்குதல் அத்துடன்

VII. தொழிற்றுறை அமைதியைப் பேணுவதனை இலக்குவைத்து செயற்பாடுகளில் ஈடுபடுதலும் மேம்புடுதுதலும்.

### 1.6.5 தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகச் சட்டத்தின் மூலம் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் ஒன்றிணைந்தவொரு நிறுவகமாக உருவாக்கப்பட்டது. இந்த நிறுவகம், சிறந்த சுகாதார, பாதுகாப்பு நடவடிக்கைகளினூடாக தொழில்சார் விபத்துக்களையும், நோய்களையும் தடுப்பதற்காகவும் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளையும், செய்முறைகளையும் திருத்துவதனை முன்னெடுப்பதனூடாக ஒவ்வொரு வேலையாளருக்கும் சீரிய வேலைச் சூழலொன்றை உறுதிப்படுத்தி பணிபுரிவதுடன், இந்நிறுவகம் பயிற்சிகளிலிலிருந்து நன்மைகளைப் பெறுவதற்கு விரும்புகின்ற பணியாளரின் தொழில்தருநருக்கு கல்வி மற்றும் பயிற்சிகளை வழங்குகின்றது.

**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் நடத்தப்பட்ட கற்கை நெறிகள்**

I. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மீதான டிப்புளோமா கற்கைநெறிகள்.

II. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மீதான சான்றிதழ் கற்கைநெறிகள்.

III. பெருந்தோட்டத் துறையில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மீதான உயர் சான்றிதழ் கற்கைநெறிகள்

IV. கொதிகலனை இயக்குபவர்களுக்கான பயிற்சி.

V. தொழிற்றுறைகள் மீதான வேலை ஆய்வு நிகழ்ச்சித்திட்டம்

VI. தொழில்சார்துறையில் தாதியர்களைப் பயிற்றுவித்தல்.

VII. மருத்துவமனைப் பணியாளர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்.

VIII. அலுவலகப் பதவியினர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்.

IX. ஆய்வுகூடங்களில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்.

X. இரசாயனப் பொருட்களைப் பாதுகாப்பாகக் கையாளுதல்.

XI. உணவினைக் கையாள்பவர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்.

XII. மன அழுத்த முகாமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.

### 1.6.6 வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம்

வேலைத்தலத்தில் ஏற்படுகின்ற விபத்துக்களுக்காக பணியாளர்களுக்கு நட்டஈட்டுக் கொடுப்பனவை வழங்குவதற்காக 1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வேலையாளர் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டம் இயற்றப்பட்டிருந்தது. மூலச் சட்டம் பல தடவைகள் திருத்தப்பட்டு, இறுதியாக 2022 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டுருந்தது. வேலையாளர் நட்டஈட்டு நீதிமன்றம், மாவட்ட நீதவானின் தத்துவம் மற்றும் நீதிவான் நீதிமன்ற தத்துவத்துடன் முழு நாட்டையும் உள்ளடக்கக்கூடிய வகையில் 14 சுற்றுலா நீதிமன்றங்கள் காணப்படுகின்றன. நீதிச் சேவைகள் ஆணைக் குழுவினால் நியமனம் செய்யப்படுகின்ற நீதிசார் அலுவலர்களான வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர், மேலதிக வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர்கள் மற்றும் வேலையாளர் நட்டஈட்டு உதவி ஆணையாளர்கள் ஆகிய 3 பதவிகள் உள்ளடங்கலாக, இலங்கை கணக்காளர் சேவையின் தரம் I இனைச் சேர்ந்த பதவி 1 இலங்கை நிருவாக சேவையின் பதவி 1 உள்ளடங்கலாக 43 பதவிகள் இதில் காணப்படுகின்றன.

இந்த அலுவலகத்தின் பிரதான குறிக்கோள், தொழில் புரிகையில் ஏற்பட்ட காயங்களால் துன்பப்படுகின்ற, தொழிலின் தன்மை காரணமாக நோய் வாய்ப்பட்டு வருத்துகின்ற வேலையாட்களுக்கு மற்றும் வேலைத் தலங்களில் விபத்து காரணமாக இறந்த வேலையாட்களில் தங்கியிருப்பவர்களுக்குச் செலுத்த வேண்டிய நாட்டஈட்டினைச் செலுத்துவதாகும். குற்றவியல் நடைமுறைக் கோவை, சிவில் நடைமுறைக் கோவை மற்றும் சாட்சிய கட்டளைச்சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகள் வேலையாளர் நட்டஈட்டு நீதிமன்ற நடைமுறைக்கு பொருந்தும், மேன்முறையீட்டு நடைமுறை மாவட்ட நீதிமன்றத்திற்குச் சமமானது.

**பிரதான தொழிற்பாடுகள்**

I. அரசதுறை மற்றும் தனியார் துறையில் தொழில் புரிகையில் ஏற்படுகின்ற விபத்துக்கள் மற்றும் தொழில்சார் நோய்களுக்காக தொழில்தருநர்களிடமிருந்து நட்டஈட்டினை அறவிடுவதுடன் தொடர்புட்ட செயற்பாடுகள் மற்றும் வேலையாளரொருவர் இறக்கின்ற போது அவரில் தங்கியிருப் பவர்களுக்கு தொழில்தருநரிடமிருந்து நட்ட ஈட்டை அறவிடுவது தொடர்பான செயற்பாடுகள். (இறுதித் திருத்தத்தின்படி, செலுத்தக்கூடிய ஆகக்கூடிய நட்டஈடு 2,000,000 ஷரூபா வழங்கப்படுகின்றது).

II. இறந்த பணியாளர்களில் தங்கியிருக்கின்ற பராயமடையாதவர்களது நட்ட ஈட்டை அவர்கள் முதிர்ச்சியடையும் வரையில் வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளரின் பாதுகாப்பின் கீழ் தேசிய சேமிப்பு வங்கியில் சேமிப்பிலிட்டு அதனை நிருவகித்தல்.

III. நட்டஈட்டுக் கொடுப்பனவை தொழில்தருநர்கள் செலுத்தாத சந்தர்ப்பங்களில், அத்தகைய தொழில் தருநர்களது அசையும், அசையாத சொத்துக்களைக் கைப்பற்றி, நட்டஈட்டினை அறவிடுவதற்காக அவற்றை பொது ஏலத்தில் விடுதல்.

IV. வேலையாளர் நட்டஈட்டுக் காப்புறுதி அனுமதிப் பத்திரத்தை வழங்குதல், புதுப்பித்தல் மற்றும் இரத்துச் செய்தல்.

V. பணியாளரொருவருக்கு விபத்தொன்று ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அந்த இடத்தில் பரிசோதனை களை நடத்துதல்.

VI. இலங்கையில் பதிவுசெய்து கப்பலில் மற்றும் விமானத்தில் பணியாற்றுகின்ற வேலையாளர்களுக்கு இலங்கைக்கு வெளியே விபத்துக்கள் ஏற்படுகின்ற விடத்து நட்டஈடு அறவிடுவதனை மேற்கொள்ளுதல்.

### 1.6.7 தேசிய உற்பத்தித்திறன் செயலகம்

1966 ஆம் ஆண்டு இலங்கை ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின் அங்கத்துவத்தைப் பெற்றதைத் தொடர்ந்து, தேசிய உற்பத்தித்திறன் தாபனம் (ரேழ) தாபிக்கப்பட்டதுடன், அதன் நோக்கத்தை மேலும் விரிவுபடுத்தும் வகையில் 1994 ஆம் ஆண்டில் தேசிய உற்பத்தித் திறன் செயலகம் தாபிக்கப்பட்டிருந்தது. இது, ஒருதொகுதி உற்பத்தித்திறன் எண்ணக்கருக்களை, கருவிகள் மற்றும் தொழில்நுட்பம் பல்வேறு கையில் அறிமுகப்படுத்தியிருந்தது. அரச, கல்வி, சேவை மற்றும் உற்பத்தி, சிறிய, நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் மற்றும் சமூகத் துறைகளை பேணுவதற்காக வருடாந்தம் நாடளாவியரீதியில் உற்பத்தித்திறன் எண்ணக்கருக்கள் ஊடாக ஆசிய உற்பத்தித்திறன் தாபனத்தின் நிலையான ஒத்துழைப்புடனும் பல நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டு, "அறிவை மையமாகக் கொண்ட சமூகம்" உருவாக்கப்படுவதற்குத் தேவையான சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**பிரதான தொழிற்பாடுகள்**

I. அரச நிறுவனங்கள், கல்விசார் மற்றும் சேவை துறைகள், சமூக அமைப்புகள் மற்றும் சிறிய, நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் ஆகியவற்றை இலக்கு வைத்து உற்பத்தித்திறனை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

II. உற்பத்தித்திறன் விடயங்கள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
   - உற்பத்தித்திறன் டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டங்கள்
   - உற்பத்தித்திறன் சான்றிதழ் கற்கைநெறிகள்
   - உற்பத்தித்திறன் பற்றிய குறுகிய கால கற்கைநெறிகள்
   - பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

III. நிறுவனங்களில் உற்பத்தித்திறனை அதிகரிப்பது பற்றிய ஆலோசனை சேவைகளை வழங்குதல்.

IV. ஆசிய உற்பத்தித்திறன் தாபனத்துடனான பங்களிப்புடன் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.
- பயிற்சி செயலமர்வுகளை நடத்துதல்.
- இ-கற்றல் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.
- தொழில்நுணுக்க நிபுணத்துவ சேவைகளைப் பாதுகாப்பதன் மூலம் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

V. "எஸ் 5" சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.

VI. ஊடக மற்றும் பிரசித்த நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளுதல்.

VII. தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் வைபவத்தை நடத்துதல்

### 1.6.8 சிரம வாசனா நிதியம்

1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதியச் சட்டம் (2019 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறு) மூலம் பணியாளர்களின் நலன்புரியினை மேம்படுத்துவதற்காக தாபிக்கப்பட்ட சிரம வாசனா நிதியமானது தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற நிறுவனம்மொன்றாகும். சட்டத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள 06 பரந்த குறிக்கோள்களின் கீழ், இந்த நிதியம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து பணியாளர்களின் முன்னேற்றத்திற்காக பல நலன்புரி நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

தேசிய லொத்தர் சபையின் ஜாதிக சம்பத லொத்தரின் வருமானமே சிரம வாசனா நிதியத்தின் பிரதான நிதி மூலமாகும். இதற்குமேலதிகமாக, நிதியமானது நிலையான வைப்புத் தொகைகளின் வட்டியிலிருந்து வருவாயை உருவாக்குகின்றது என்பதுடன், நிதியத்தால் ஆண்டுதோறும் திட்டமிடப்பட்ட குறிக்கோள்களுக்கு ஏற்ப வேலையாளர்களின் நலனுக்காக நாடளாவியரீதியில் பல்வேறு நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது.

#### நிதியத்தின் நோக்கங்கள்

I. பணியாளர்கள் மற்றும் அவர்களில் தங்கியிருப்பவர்களின் நலன்புரியை மேம்படுத்துதல்.

II. பணியாளர்கள் பணிபுரிந்த நிறுவனங்கள் முன்னறிவித்தலின்றி மூடப்படுகின்றபோது அவர்களுக்கு நிதி மற்றும் ஏனைய உதவிகளை வழங்குதல்.

III. அவசர காலங்களில் பணியாளர்களுக்கு மருத்துவம் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல்.

IV. பணியாளர்களுக்கு எதிராக விசாரணைகள் நடத்தப்படும்போது அவர்களுக்கு தற்காலிக உதவிகளை வழங்குதல்.

V. பணியாளர்களுக்கு அல்லது அவர்களில் தங்கியிருப்பவர்களுக்கு, இடர் காலங்களில் நிதி மற்றும் ஏனைய அனுகூலங்களை வழங்குதல்.

VI. பணியாளர் நலனுக்காக சிறந்த சேவை செய்த நபர்களுக்கு விருதுகள் வழங்குதல்.

VII. தொழில் ஆணையாளர் அதிபதி, தொழில் நியாயசபை, நடுவர் அல்லது கைத்தொழில் நீதிமன்றம் அல்லது பிற சட்ட நீதிமன்றத்தில் ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தின் விதிகளின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட அல்லது நிலுவையில் இருக்கும் போது பணியாளரின் பணிநீக்கம் அல்லது தொழிற்றுறைப் பிணக்கு தொடர்பான நடவடிக்கைகள் காணப்படு கின்றவிடத்து பணியாளர்களுக்கு சட்ட உதவியைப் பெறுவதற்கு நிதி நிவாரணம் வழங்குதல்.

### 1.6.9 வரையறுக்கப்பட்ட தனியார் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரகம் (ளுடுகுநுய), இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையின் தேசிய ஒழுங்குபடுத்துநரான "இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின்" துணை நிறுவனமாக 1996 ஆம் ஆண்டில் கூட்டிணைக்கப்பட்ட அரசுக்கு சொந்தமான ஒரேயொரு ஆட்சேர்ப்பு முகவரகமாகும் என்பதுடன் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்றது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரகத்துக்கு 2013 ஆம் ஆண்டில் ஐளுழு 9001:2008 தரச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இது, தற்போது வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு மற்றும் சந்தைப் பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் கீழ் தொழிற்படுகின்றது.

#### பிரதான தொழிற்பாடுகள்

I. தொழில் கட்டளைகளைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் தொழில் கட்டளைகளுக்கான பூர்வாங்க அனுமதியைப் பெறுதல்

II. தொழில் கட்டளைகள் தொடர்பான விளம்பரத்திற்கான அனுமதியைப் பெறுதல் மற்றும் பொருத்தமான விண்ணப்பதாரர்களைக் கண்டறிதல்.

III. தொழில்வழங்குநர்களைத் தெரிவுசெய்வதற்கான விண்ணப்பங்களைக் கோருதல் மற்றும் அவர்களை நேர்காணல்களுக்கு அழைத்தல் மற்றும் பொருத்தமான விண்ணப்பதாரர்களைத் தெரிவுசெய்வதற்கான தர பரிசேதனைகள்.

IV. ஆட்சேர்ப்பு தொடர்பான மருத்துவப் பரிசோதனைகள், உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுதல் மற்றும் தரப் பரிசோதனைகளை மேற்கொள்வது அத்துடன், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் இறுதி அனுமதியைப் பெறுதல் மற்றும் வேலைவாய்ப்பிற்காக வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்புதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வது.

## 1.7 அமைச்சுப் பதவியினரின் தொகுப்பு

| | நிறுவனம் | சிரேஷ்ட நிலை | | உயர் நிலை | | இரண்டாம் நிலை | | ஆரம்ப நிலை | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அனுமதிக்கப்பட்ட எண். | பணிக்கமர்த்தப்பட்டுள்ள எண். | அனுமதிக்கப்பட்ட எண். | பணிக்கமர்த்தப்பட்டுள்ள எண். | அனுமதிக்கப்பட்ட எண். | பணிக்கமர்த்தப்பட்டுள்ள எண். | அனுமதிக்கப்பட்ட எண். | பணிக்கமர்த்தப்பட்டுள்ள எண். | அனுமதிக்கப்பட்ட எண். | பணிக்கமர்த்தப்பட்டுள்ள எண். | வெற்றிடங்களின் விகிதம் |
| 1 | தொழில் பிரிவு | 24 | 17 | 04 | - | 75 | 55 | 35 | 16 | 138 | 88 | 36% |
| 2 | தொழில் திணைக்களம் | 211 | 133 | 668 | 478 | 1753 | 1718 | 489 | 401 | 3121 | 2730 | 13% |
| 3 | மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் | 20 | 14 | 5 | 0 | 627 | 604 | 15 | 10 | 667 | 628 | 6% |
| 4 | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் | 09 | 03 | 11 | 2 | 20 | 07 | 05 | 02 | 45 | 14 | 69% |
| 5 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் | 07 | 02 | 03 | 02 | 10 | 06 | 05 | 05 | 25 | 15 | 40] |
| 6 | வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம் | 05 | 03 | 02 | 01 | 31 | 30 | 05 | 02 | 43 | 36 | 16% |
| 7 | தேசிய உற்பத்தித்திறன் செயலகம் | 17 | 07 | 04 | 02 | 792 | 709 | 19 | 10 | 832 | 728 | 14% |
| 8 | சிரம வாசனா நிதியம் | 01 | 01 | 04 | 03 | 08 | 08 | 04 | 03 | 17 | 15 | 12% |
| 9 | வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறை | 14 | 11 | 01 | - | 1031 | 1003 | 23 | 15 | 1069 | 1029 | 4% |
| 10 | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் | 137 | 103 | 197 | 170 | 692 | 655 | 251 | 232 | 1277 | 1160 | 9% |
| 11 | வரையறுக்கப்பட்ட தனியார் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரகம் | 04 | 04 | 9 | 7 | 10 | 05 | 07 | 08 | 30 | 24 | 20 |
| | **மொத்தம்** | **449** | **298** | **908** | **665** | **5049** | **4800** | **858** | **704** | **7264** | **6467** | **11%** |

**அட்டவணை 1.1** அமைச்சுப் பதவியினரின் தொகுப்பு

# 02

## அத்தியாயம் இரண்டு

முன்னேற்றமும் எதிர்காலம் பற்றிய கண்ணோட்டமும்

# முன்னேற்றமும் எதிர்காலம் பற்றிய கண்ணோட்டமும்

இந்த அமைச்சானது, உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளைப் பாதுகாத்தல், அவர்களின் தொழில் பாதுகாப்பை உறுதி செய்தல், நாட்டில் தொழிற்றுறை அமைதியை நிலைநாட்டுதல் மற்றும் ஆற்றலுள்ள வேலையாளர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தைக்கு அனுப்புதல் ஆகிய துறைகளின் கீழ் தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான திட்டங்களை வகுத்துள்ளது.

நாட்டின் தொழில் அணி சுமார் 8.5 மில்லியனாகக் காணப்படுகையில் அதில் 8.1 மில்லியன் பேர் தொழில் புரிகின்றனர். இந்த வேலையாளர்களில், அரச துறையில் உள்ளவர்கள், சொந்த தொழில் மற்றும் குடும்பத் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் தவிர்த்து, நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்கின்ற தனியார் துறை மற்றும் பகுதியளவிலான அரச துறைகளில் பணிபுரிகின்ற 3.4 மில்லியன் வேலையாளர்களின் தொழில் உரிமைகள், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தைப் பாதுகாப்பதற் கான பொறிமுறையை நடைமுறைப்படுத்தி, நாட்டில் தொழில்துறை அமைதியைப் பேணுவது அமைச்சின் பொறுப்பாகும்.

அதேபோன்று, வேலைவாய்ப்பிற்காக புலம்பெயர்ந்து முக்கிய நன்மைகளைப் பெறுகின்ற நாடுகளிடையே இலங்கை முன்னணியில் உள்ளது. புலம்பெயர் வேலையாளர்கள் அனுப்பும் பணம் நாட்டின் ஒட்டுமொத்த அந்நியச் செலாவணி வருவாயில் பிரதான பங்கை வகிக்கின்றது. 2022 ஆம் ஆண்டில், வெளிநாட்டுப் பணம் 1,252 பில்லியன் ‘ரூபா இலங்கைக்குக் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், வேலைக்காக புலம்பெயர்ந்தவர் களின் எண்ணிக்கை 311,16195 காணப்பட்டிருந்துடன், அதில் 124,180 பேர் பெண்களாவர் மற்றும் 186,981 பேர் ஆண்களாவர். இந்த நிலைமையைக் கருத்தில்கொண்டு, நாட்டின் பொருளாதாரத்திற்கு புலம்பெயர் வேலையாளர்களின் பங்களிப்பினை ஏற்றுக்கொண்டு, வெளிநாட்டுப் பணம் அனுப்புவதை அதிகரிக்கவும், ஆற்றலற்ற வேலையாளர்களுக்குப் பதிலாக அதிக ஆற்றல்வாய்ந்த வேலையாளர்களை வெளிநாட்டு வேலைக்கு அனுப்பும் பொறிமுறைகள் மற்றும் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அத்தியாயமானது, 2022 ஆம் ஆண்டில் அமைச்சினாலும், அதனுடன் இணைந்த நிறுவனங்களாலும் அவற்றின் உரிய குறிக்கோள்களை உணர்ந்து ஆற்றப்பட்ட செயற்பாடுகளினூடாக அடையப்பெற்ற முன்னேற்றத்தின் பொழிப்பினைக் கொண்டிருக்கின்றது.

## 2.1 விசேட சாதனைகள், சவால்கள் மற்றும் கண்ணோட்டம்

இலங்கையில் முதலீட்டாளர் சார்ந்த சூழலொன்றை ஏற்படுத்தும் வகையில், அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச சமூகப் பொருளாதார நிலைமைகள் மற்றும் தொழில் சமவாயங்கள் மற்றும் நியமங்களுக்கு இணங்க சட்ட ஏற்பாடுகளை வகுத்தமைத்து, நாட்டின் எதிர்கால முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும் காலத்துடன் கூடிய பொறுப்பு அமைச்சிற்கு குறித்தொதுக்கப்பட்டுள்ளது. உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளைப் பாதுகாக்கின்ற அதேவேளை, தற்போதுள்ள சட்டவாக்கங்கள், விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளை எதிர்கால தொழில் உலகிற்கு ஏற்றவாறு திருத்துவதற்கான கடப்பாட்டினை அமைச்சு கொண்டுள்ளது.

அதேபோன்று, வெளிநாட்டு வேலை வாய்ப்புத் துறை தொடர்பான கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்தமைப்பதனூடாக அதிகதிகளவான வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி, அதிகரித்த அந்நிய செலாவணி வரவுகளுடன் தேசிய பொருளாதாரத்தை பலப்படுத்தும் பொறுப்பும் இந்த அமைச்சிற்கு உத்தளிக்கப்பட்டுள்ளது.

இதனை அடையும் வகையில், அதிக ஆற்றல் வாய்ந்த பணியாளர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கு அனுப்பவும், அவர்களுக்கான பயிற்சி வாய்ப்புகளை விரிவுபடுத்தவும், கிரமமான மற்றும் பாதுகாப்பான புலம்பெயர்வுக்கு வசதியேற்படுத்து வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, புலம்பெயர் வேலையாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் நலன், பாதுகாப்பு மற்றும் நலன்புரியினை மேம்படுத்துவதற்கு பல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

நாட்டில் பொருளாதார நெருக்கடி இருந்த போதிலும், அமைச்சினால் தொழிற்றுறை அமைதியைப் பேணுவதற்கும், உழைக்கும் வர்க்கத்திற்காக பல வெற்றிகளை அடைவதற்கும், வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை விரிவுபடுத்துவதன் மூலம் வெளிநாட்டுப் பணம் அனுப்புகையை அதிகரிப்பதற்கும் முடிந்திருந்தது. இவ்வாறு அடையப்பெற்ற வெற்றிகள் மற்றும் எதிர்கால இலக்குகள் கீழே கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

### 2.1.1 வேலையாளர்களது உரிமைகளை நிலைநாட்டும் நோக்கில் தொழில் சட்டங்களைப் பலப்படுத்துதல்

1923 ஆம் ஆண்டில் தொழில் அமைச்சு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட கட்டளைச் சட்டங்கள் உள்ளடங்கலாக சுமார் 50 சட்டவாக்கங்கள் மற்றும் அதனைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்ட சட்டங்கள் வேலையாளர்களது நலன்புரிக்காகவும், அவர்களது உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இந்த அமைச்சு, தொழிலணி எதிர் கொள்கின்ற அல்லது எதிர்கொள்ளவுள்ள தற்போதைய, எதிர்கால சவால்களை சமாளிக்கக்கூடிய அத்தகைய வகையில் தற்போதிருக்கின்ற தொழில் சட்டங்களைத் திருத்துவதற்கும், புதிய சட்டவாக்கங் களை வரைவதற்கும் நடவடிக்கைகள் எடுத்துள்ளது. தற்போது நடைமுறையிலுள்ள தொழில் சட்டத் திலுள்ள சிக்கல்களையும், நடைமுறையில் பிரயோகிப்பதில் எழுந்துள்ள பிரச்சினை களையும் இனங்காணுதல் மற்றும் தொழில்தருநர், பணியாளர்கள் மற்றும் அரசு ஆகிய முத்தரப்பு அக்கறை தாரர்களுக்கு சட்ட மேவுகையை வழங்கும் வகையில் தொழில் சட்டங்களைத் திருத்துதல் ஆகியவை பற்றி தற்போது அமைச்சு கவனம் செலுத்துகின்றது.

**1. தொழிலின் புரிகின்ற காலப்பகுதியில் காயமடைந்த பணியாளர்களுக்கு வேலையாளர் நட்டஈட்டுக் கட்டளைச்சட்டத்தின் கீழ் செலுத்தப்பட்ட ஆகக்கூடிய தொகையை 550,000 'ரூபாவிலிருந்து 2,000,000 'ரூபாவாக அதிகரித்தல்**

1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வேலையாளர் நட்டஈட்டுக் கட்டளைச்சட்டத்திற்கு கொண்டுவரப்பட்ட இறுதித் திருத்த நியதிகளில், வேலையாளரொருவர் தொழில்புரிகையில் காயமடைகின்றபோது, தொழில்சார் நோய்க்குள்ளாகின்றபோது பெறக்கூடிய ஆகக்கூடிய நட்டஈடு 550,000 ஷரூபாவாகும். ஆகக்கூடிய நட்டஈட்டு எல்லையை 2 மில்லியன் ஷரூபாவாகவும், அதற்கேற்ப ஏனைய காயங்களுக்கு நட்டஈடாக வழங்கப்படும் தொகையை அதிகரிப்பதற்குமாக 10 ஆம் இலக்க வேலையாளர் நட்டஈட்டுச் (திருத்தம்) சட்டம் 2022.03.10 ஆம் திகதி பாராளுமன்றத்தால் கைக்கொள்ளப் பட்டிருந்தது. வதிவிடத்திலிருந்து வேலைத் தலத்திற்கு வரும் வழியில் அல்லது வேலைத் தலத்திலிருந்து வதிவிடத்திற்கு திரும்பிச் செல்லும் வழியில் ஏற்பட்ட விபத்துக்கான நட்டஈட்டினை பணியாளர்கள் பெற்றுக்கொள்ளச் செய்யும் வகையிலான ஏற்பாடுகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**2. தொழில் வழக்குகளின் விசாரணைகளை விரைவுபடுத்துவதற்காக நீதவான் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நியாயசபைகளுக்கு ஒத்த நீதித்துறை தத்துவங்களை வழங்குதல்**

ஏதேனும் தொழில் சட்டத்தின் அல்லது ஊ.சே.நி சட்டத்தின் விதிகள் மீறப்படுகின்ற சந்தர்ப்பத்தில், நீதவான் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட வேண்டியிருக்கின்றது என்பதுடன், இச்செயன்முறை யிலுள்ள காலதாமதத்தின் விளைவாக, பணியாளர்கள், பணிக்கொடை, சேமலாப நிதியம் மற்றும் வேதன நிலுவைகள் போன்ற அத்தகைய அவர்களின் நியதிச்சட்ட உரித்துக்களை மீளப் பெற்றுக்கொள்வதற்கு 5 முதல் 6 ஆண்டுகள் வரையான நீண்ட காலம் காத்திருக்க வேண்டியிருந்தது. இதற்குத் தீர்வாக, தொழில் பிணக்குகளைத் தீர்ப்பதற்காக மாத்திரம் தொழில் நியாயசபைகளின் தலைவர்களுக்கு நீதவான் தத்துவங்களை வழங்குவதற்காக 2022 ஆம் ஆண்டின் 19

ஆம் இலக்க தொழில் பிணக்குகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டிருந்தது.

3. **தொழில் நியாயசபைகளில் ஆஜராவதற்கு வழக்கறிஞர் அல்லாத பிரதிநிதிகளுக்கு அதிகார மளித்தல் மற்றும் தொழில் நியாயசபைகளின் கட்டளைகளை அமுல்படுத்தும் தத்துவங்களை தொழில் நியாய சபைகளின் தலைவர்களுக்கு வழங்குதல்**

தொழில்வழங்குநர்களால் நியாயமற்ற முறையில் பணிநீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து வேலையாளர் கள் தாக்கல் செய்யும் வழக்குகளில், வழக்கறிஞர்கள் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகள் மட்டுமே தற்போது வேலையாளர்களுக்காக ஆஜராக அனுமதிக்கப்படுகின்றனர். சட்டத்தில் வழக்கறிஞர் களாக அல்லாத பிரதிநிதிகள் வேலையாளர்களுக்காக ஆஜராவதற்கான தத்துவங்களை வழங்குவதற்கு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் 46 ஆம் பிரிவினைத் திருத்தி, 2022 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தொழில் பிணக்குகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம், 2022.09.16 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டிருந்தது. அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், நடுத்தீர்ப்பாளர் கைத்தொழில் நிதிமன்றம் அல்லது தொழில் நியாயசபை அல்லது ஆணையாளர், வேலையாளர்களுக்காக ஆஜராவதற்கு சட்டத்தரணி அல்லது தரப்பின் பிரதிநிதியொருவரினூடாக செயற்படலாம்.

4. **தேவையற்ற மேன்முறையீடுகளைக் குறைக்கும் நோக்கில், நடுத்தீர்ப்பு தீர்ப்புகள் மற்றும் கைத்தொழில் நீதிமன்றங்களின் கட்டளைகளுக்கு எதிரான எழுத்தாணை விண்ணப்பங்களை நிரப்புவதில், மீளாய்வுகள் மற்றும் மேன்முறையீடுகளைச் செய்வதில் வைப்புத்தொகைகளைச் செலுத்துவதற்கான ஏற்பாடுகளைக் கொண்டுவருதல்.**

தொழில் ஆணையாளர் அதிபதியின் கட்டளைகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்படும் எழுத்தாணை விண்ணப்பங்கள் மற்றும் நீதவான் நீதிமன்றங்களின் தீர்ப்புகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்படும் மீளாய்வு விண்ணப்பங்கள் மற்றும் மேல்முறையீட்டு மனுக்கள் ஆகியவற்றுக்கு எதிரான நீதித்துறை செயன் முறையானது, தொழில் ஆணையாளர் அதிபதியிடம் பிணைப்பொறுப்பொன்று பணமாக வழங்கியதன் பின்னர் மட்டுமே ஆரம்பிக்க முடியும் என்ற வகையில், பணியாளர் தொழில் முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் திருத்தப்பட்டது. இதன்படி, 2022 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க பணியாளர் தொழில் முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம், பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

தொழில் நியாயசபை மற்றும் நீதவான் நீதிமன்றத்தின் தீர்ப்புகளுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மீளாய்வு விண்ணப்பங்கள் மற்றும் மேன்முறையீடுகள், தொழில் ஆணையாளர் அதிபதியிடம் பிணைப்பொறுப்பொன்று பணமாக வழங்கியதன் பின்னர் மட்டுமே ஆரம்பிக்க முடியும் என்ற வகையில், பணியாளர் தொழில் முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் திருத்தப்பட்டது. இந்தச் சட்ட ஏற்பாடு, கட்டளைகளை நிறைவேற்றுவதில் தேவையற்ற மேன்முறையீடுகளைக் குறைக்கும் நோக்கில் கொண்டுவரப்பட்டிருந்ததுடன், இதன்படி 24 ஆம் இலக்க பணியாளர் தொழில் முடிவுறுத்தல் (திருத்தம்) சட்டம் பாராளுமன்றத்தால் கைக்கொள்ளப்பட்டது.

5. **ஒழுக்காற்று விசாரணைக்கு இணங்க இறுதி ஒழுக்காற்றுக் கட்டளையொன்றை ஆக்குவதற்கான குறித்த காலப்பகுதியை விதித்துரைத்தல்**

1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டமானது, தவறான நடத்தை காரணமாக பணிநீக்கம் செய்யப்பட்ட தனியார் துறை பணியார்கள் தொடர்பில் எடுக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைமுறைகளை விரைவுபடுத்துவதற்கான இறுதி ஒழுக்காற்றுத் தீர்ப்பை வழங்குவதற்கான குறித்த காலப்பகுதியொன்றை விதித்துரைப்பதற்காக திருத்தப்பட்டது.

இறுதி ஒழுக்காற்றுத் தீர்ப்பை வழங்குவதற்கு நீண்ட கால அவகாசம் எடுத்துக் கொண்டதன் விளைவாக பணியாளர்களுக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் கடுமையான அநீதி இழைக்கப்படுகின்றது. எனவே ஒழுக்காற்று விசாரணையின் பின்னர் இறுதி ஒழுக்காற்றுத் தீர்ப்பு வழங்கப்பட

வேண்டிய கால அட்டவணையொன்று தீர்மானிக்கப்படுதல் வேண்டும். ஆகவே, அத்தகைய பணிநீக்கம் செய்யப்பட்ட திகதியிலுருந்து ஆறு (06) மாதங்களுக்குள் ஒழுக்காற்று விசாரணையைத் தொடர்ந்து ஒழுக்காற்று கட்டளையை வழங்குதல் வேண்டும் என்பதுடன், தவறான நடத்தையானது, நிதி மோசடி அல்லாத பட்சத்தில் வழங்கப்பட்ட ஊதியத்தில் அவைசியை வழங்குதல் வேண்டும் என்று கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தைத் திருத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இது தொடர்பான பூர்வாங்க வரைவு சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டு, அது, அமைச்சர்களால் அவதானிக்கப்பட்டுள்ளது. சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிட்டு, பாராளுமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிப்பதற்கு மீண்டும் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருக்கின்றது.

**6. வேலையாளர்களின் நலன்புரிக்காகவும், தற்போதைய தேவைப்பாடுகளுக்கு பொருந்தும் வகையில் 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் அலுவலக பணியாளர்கள் சட்டத்தைத் திருத்துதல்**

விசேட உத்தரவுகளின் பேரில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ள மற்றும் கடைகள் மற்றும் அலுவலக பணியாளர் சட்டத்தின் விடயப்பரப்பின் கீழ் வருகின்ற, விமான நிலையங்கள், குடியிருப்பு ஹோட்டல்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகள் (இரவு 10.00 மணி) போன்ற அத்தகைய வணிக நிறுவனங்களைத் தவிர்த்து, ஏனைய நிறுவனங்களின் தொழில்தருநர்களுக்கு இரவு 8.00 மணிக்குப் பின்னர் பெண்களை வேலைக்கு அமர்த்தும் உரிமை இல்லை. இருப்பினும், தகவல் தொழில்நுட்ப அறிவை அடிப்படையாகக் கொண்ட வணிக செயன்முறை வெளிவளமிடுகின்ற (பீ்பீஓ) நிறுவனங்கள் சர்வதேச நேரத்தின்படி தங்கள் வணிகங்களைச் செயற்படுத்துவதால், அத்தகைய கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிப்பது கடினம், சொல்லப் பட்ட துறையில் பணிபுரிகின்ற பணியாளர்களின் (குறிப்பாக பெண் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக) உரிமைகளை உறுதிப்படுத்தி, கடைகள் மற்றும் அலுவலக பணியாளர்கள் சட்டத்தைத் திருத்துவதன் மூலம் தொடர்புடைய சேவை நிபந்தனைகளைத் தளர்த்த வேண்டியிருக்கின்றது. அதேபோன்று, தொழில் அணிக்குள் பெண்களின் வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்காக நெகிழ்வான பணி மாற்று முறையை அறிமுகப்படுத்துவது போன்ற அத்தகைய நடைமுறைகள் கூட்டிணைக்கப்படுதல் வேண்டும். சட்ட வரைஞரால் உருவாக்கப்பட்ட இரண்டாவது வரைவுக்கு அவதானிப்புகள் சமர்ப்பிக்கப் பட்டுள்ளதுடன், இறுதி வரைவினையும், சட்டமா அதிபரின் சான்றிதழையும் பெற்றுக்கொண்டமையைத் தொடர்ந்து, வரைவினை வர்த்தமானியில் வெளியிடு வதற்கும், பாராளுமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிப்பதற்கும் மீண்டும் அமைச்சரவையின் அங்கீகாரத்தைக் கோரவேண்டியிருக்கின்றது.

**7. 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தை திருத்துதல்**

வேலையாளர்களின் மேம்பட்ட நலன்புரிக்காகவும் தற்போதைய சமூகப் பொருளாதாரப் போக்குகளுக்கு இணங்கவும் ஊ.சே.நிதியச் சட்டம் திருத்தப்படுதல் வேண்டும். ஆகவே, வேலையாளர்கள் விருப்ப ஓய்வுத் திட்டத்தின் கீழ் அல்லது 55 வயதை அடைவதற்கு முன்னர் ஓய்வுபெறும் சந்தர்ப்பத்தில் ஊ.சே. நிதியத்தின் வரப்பிரசாதங்களைக் கோருவதற்கு இயலச்செய்யும் வகையில் ஏற்பாடுகள் அறிமுகப் படுத்தப்படும். அமைச்சரவை விஞ்ஞாபனத்தினால் அனுமதி கோரப்பட்ட திருத்தங்களுக்காக இலங்கை மத்திய வங்கியின் அவதானிப்புகளைக் கூட்டிணைத்து உடன்படிக்கையை மீள வரைவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**8. 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச்சட்டத்தைத் திருத்துதல்**

வேலையாளர்களின் மேம்பட்ட நலன்புரிக்காகவும், தற்போதைய சமூகப் பொருளாதாரப் போக்குகளுக்கு இணங்கவும் பணிக்கொடைச் சட்டம் திருத்தப்பட வேண்டும். தொழில் திணைக்களத்தால் உருவாக்கப் பட்ட வரைவு, தேசிய தொழில் ஆலோசனைச் சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 2.1.2 வெளிநாட்டு வேலைவாய்ப்பினை ஊக்குவிப்பதற்குத் தேவையான சட்ட மற்றும் கொள்கை கட்டமைப்பை வலுப்படுத்துதல்

**1. தொழிலாளர் புலம்பெயர்வு தொடர்பான இலங்கையின் தேசிய கொள்கையின் விடயப் பரப்பை இற்றைப்படுத்துதல் மற்றும் விரிவுபடுத்துதல்**

தொழில் புலம்பெயர்வு தொடர்பான இலங்கையின் தேசிய கொள்கை மற்றும் செயற்றிட்டம், அனைத்து அக்கறைதாரர்களின் பங்கேற்புடன் தொழில் அமைச்சரால், அமைச்சரவைக்கு இற்றைப்படுத்தப் பட்டுள்ளமை பற்றி குறிப்பிட்டு, அது தொடர்பான அமைச்சரவை முடிபிலுள்ள அறிவுறுத்தல்களின்படி தேசிய கொள்கை மற்றும் செயற்றிட்டம் ஆகியவை மேலும் திருத்தப்பட்டு வருகின்றன.

**2. 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகச் சட்டத்தை திருத்துதல்**

இந்த அமைச்சு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் அலுவலர்களின் பங்கேற்புடன் தேவையான திருத்தங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன், உரிய திருத்தங்களை அமைச்சரவையின் அனுமதிக்காக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**2.1.3 புலம்பெயர் இலங்கை வேலையாளர்களின் வருமானத்தை சட்டப்பூர்வமான வழிகளில் இலங்கைக்கு அனுப்புவதை ஊக்குவித்தல்**

- இலங்கை புலம்பெயர் வேலையாளர்களுக்கு அவர்களின் வருமானத்தை சட்டபூர்வமான வழிகளில் அனுப்புவதற்கு ஊக்குவிப்பதற்காக முழு அளவிலான மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிகளை வழங்குதல். 2022.08.31 ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை நியதிகளின்படி, நாற்பத்தைந்து (45) மின்சார வாகனங்களுக்கான அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

- தொழிலுக்காக இடம்பெயர்வதற்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்துள்ள நபர்களிடமிருந்து, அவர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பில் இருந்து கிடைக்கும் வருமானத்தை சட்ட வழிகள் மூலம் இலங்கைக்கு அனுப்புவதாகத் தெரிவிக்கின்ற சுய – வெளிப்படுத்தல் படிவங்களைப் பெறுதல்.

- இலங்கை புலம்பெயர் வேலையாளர்களை வெளிநாடுகளில் உள்ள இலங்கை இராஜதந்திர தூதரகங்கள் ஊடாக அவர்களின் வருமானத்தை சட்டப்பூர்வமான வழிகளில் இலங்கைக்கு அனுப்புவதை ஊக்குவிக்கும் நோக்கில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.

- இலங்கை மத்திய வங்கியுடன் இணைந்து, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமானது, புலம்பெயர் வேலையாளர்கள் தமது பணத்தை சட்ட வழிகள் மூலம் இலங்கைக்கு அனுப்புவதனை இலகுபடுத்துவதற்காக 'டுயமெய சுநஅவை' என்ற 'மொபைல் அப்பினை' அறிமுகப்படுத்தியுள்ளது.

**2.1.4 உதவுதொகை ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்துதல்**

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவுசெய்து வெளிநாட்டு வேலையில் ஈடுபட்டுள்ள ஒரு தொழிலாளி 60 வயதை எட்டியதும் மாதாந்த ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு உதவும் வகையில் 'மனுசவி' என்ற பெயரில் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை முன்மொழிவதற்கு இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையுடன் இணைந்து நடவடிக்கையை ஆரம்பித்தல். இந்த உதவுதொகை ஓய்வூதியத் திட்டத்திற்கான உதவுதொகைகள் அந்நிய செலாவணியில் செலுத்தப்படுதல் வேண்டும்.

**2.1.5 இலங்கை புலம்பெயர் வேலையாளர்களுக்கு விமான நிலையத்தில் அதிக வசதிகளை வழங்கும் நோக்கத்துடன் "ர்ழிந புயவந" திறக்கப்பட்டது.**

**2.1.6 தேர்ச்சியுள்ள பணியாளர்களை வெளிநாடுகளுக்கு வேலைக்கு அனுப்புவதற்கான பயிற்சி கற்கைநெறிகளை ஆரம்பித்தல்**

- **பராமரிப்பாளர் பயிற்சி கற்கைநெறிக்கான வடமத்திய மாகாண சபையுடன் இணைந்து பயிற்சி கற்கைநெறிகளை ஆரம்பித்தல்**

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மற்றும் வடமத்திய மாகாண சபை ஆகியன 2022.12.29 ஆம் திகதி பராமரிப்பாளர் தொழில்சார் நிபுணர்களாக தொழிலுக்காக புலம்பெயர்வதற்கு ஆர்வமுள்ள இளைஞர் மற்றும் யுவதிகளுக்கு பராமரிப்பு பயிற்சி கற்கைநெறியினை இலவசமாக

நடத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தன. இதன்படி, வடமத்திய மாகாண சபையானது, மாகாண இளைஞர்களுக்கு தொழிற் பயிற்சிகளை வழங்குவதற்காக "ரன் மாவத்தை" என்ற கருத்திட்டத்தை ஆரம்பித்துள்ளதுடன், பராமரிப்பாளர் பயிற்சி கற்கைநெறியானது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் மேற்பார்வையின் கீழ் நடத்தப்படுகின்றது. இந்தக் கற்கைநெறிக்கான நிதிப் பங்களிப்பானது, மாகாண சபையுடன் இணைந்து சே.்.ப் பவுண்டேஷன்' அமைப்பினால் ஏற்கப்படுவதுடன், அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் மாகாண சபையால் வழங்கப்படுகின்றன.

- **ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் பங்குடமையில் பராமரிப்பாளர் பயிற்சி கற்கை நெறியொன்றை நடத்துவதற்கு ஆரம்பித்தல்**

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமும், ஸ்ரீ ஜயவர்தனபுர மருத்துவமனையும், பராமரிப்பாளர் தொழில்சார் நிபுணர்களாக தொழிலுக்காக புலம்பெயர்வதில் ஆர்வமுள்ள இளைஞர்கள் மற்றும் யுவதிகளுக்கான பராமரிப்பாளர் பயிற்சி கற்கைநெறியொன்றினை நடத்துவதற்கு 2022.09.08 ஆம் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டிருந்தன.

- **'கிரீன்வே' தனியார் பயிற்சி நிலையத்துடன் ஒருங்கிணைந்து உள்நாட்டு வீட்டு பராமரிப்பு உதவியாளர் பயிற்சி கற்கைநெறியினை ஆரம்பித்தல்**

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் மேற்பார்வையின் கீழ் உள்நாட்டு வீட்டு பராமரிப்புப் பயிற்சி கற்கை நெறியொன்றை நடத்துவதற்கு தனியார் பயிற்சி நிலையமொன்றை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை 'கிரீன்வே' ஆட்சேர்ப்பு முகவரகம் ஆரம்பித்துள்ளது.

### 2.1.7 ஐஊ.சே.நிதிய வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கும், தொழில் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கும் நேரத்தை முன்பதிவு செய்வதற்கான ஊ.சே.நிதியத்தின் சந்திப்பு நேரத்தினைக் கையாளும் முறைமையை அறிமுகப்படுத்துதல்

பணியாளர் பதிவுக்காக திணைக்களத்திற்கு வருகை தரும் வாடிக்கையாளர்களின் செயல்பாடுகளை எளிதாக்கும் வகையில், 2022.09.01 ஊ.சே.நி விண்ணப்பங்களை ஒப்படைப்பதற்கான நேரத்தை ஒதுக்கு வதற்காக ஊ.சே.நிதியத்தின் சந்திப்பு நேரத்தினைக் கையாளும் முறைமையை தொழில் திணைக்களம் அறிமுகப்படுத்தியிருந்தது. இதன்படி, 1958 என்ற இலக்கத்தில் தொடர்புகொள்வதன் மூலம் அல்லது யீழுவைெஅநவெ.டயடிழரசனநிவ. பழஎ.டம. என்ற இணைப்பின் ஊடாக தேவையான சேவைகளுக்காக உரிய தொழில் அலுவலகத்திலிருந்து திகதி மற்றும் நேரத்தை முன்பதிவு செய்துகொள்ள முடியும். இது எமது வாடிக்கையாளர்கள் நேரத்தை வீணாக்காது குறிப்பிட்ட நேரத்தில் தேவையான சேவைகளைப் பெறுவதற்கு இயலச்செய்கின்றது.

### 2.1.8 தொழில் திணைக்களத்தின் இணையத்தளத்திலிருந்து ஊசே.நி உறுப்பினர்களைப் பதிவு செய்வதற்குத் தேவையான யு, டீ மற்றும் ர் படிவங்களைப் பதிவிறக்கம் செய்வதற்கான வசதிகளை வழங்குதல்

அதேபோன்று, தொழில் திணைக்களத்தின் இணையத்தளத்திலிருந்து ஊசே.நி உறுப்பினர்களைப் பதிவு செய்வதற்குத் தேவையான A,B மற்றும் H படிவங்களைப் பதிவிறக்கம் செய்வதற்கான புதிய முறையை அறிமுகப்படுத்தி, தொழில் வழங்குநர்களுக்கு இலகுவாகவும், மிகவும் வசதியாகவும் அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செய்யமுடிகின்றது. ஆகவே, தொழில் திணைக்களத்தின் இணையத் தளத்திலிருந்து A,B மற்றும் H படிவங்களை பதிவிறக்கம் செய்து, அவற்றை நிரப்பி அனுப்புவதன் மூலம் தொழில்வழங்குநர்கள் தமது பணியாளர்களை பதிவு செய்ய முடியும்.

### 2.19 முறைப்பாட்டு முகாமைத்துவ முறைமையை உருவாக்குதல்

இலங்கை தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் ஒருங்கிணைப்புடன், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் அனுசரணையுடன் திணைக்களத்தினால் உருவாக்கப்பட்ட முறைப்பாட்டு முகாமைத்துவ முறைமையானது, 2022.03.15 ஆம் திகதியிலிருந்து பயனுக்குவரும் வகையில் நடை முறைப்படுத்தப்பட்டது. இது, தொழில் அலுவலகங்களுக்குச் செல்லாது,https://cms.labourdept.gov.lk என்ற இணைப்பைப் பயன்படுத்தி, தமது தொழில் தொடர்பாக தொழில் திணைக்களத்தில் முறைப்பாடு செய்ய விரும்பும் தனியார் அல்லது பகுதியளவிலான அரச துறை பணியாளர்களுக்கு கிடைக்கப்பெறச் செய்யப்படுகின்றது.

**தற்போதைய சவால்கள்**

நாட்டில் நிலவி வந்த கோவிட்-19 தொற்றுநோய்க்குப் பின்னரும் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் போதும் பொருளாதாரத்தில் கட்டமைப்புசார் மாற்றமொன்று இடம்பெற்றிருந்தது. அமைச்சின் செயற்பாடுகளின் போக்கு புதியதொரு பரிமாணத்தை நோக்கி மறுசீரமைக்கப்படுதல் வேண்டும். பணியாளர்களின் ஆட்குறைப்பு, வேலையின்மை மற்றும் தொழில் அணியில் பெண்களின் குறைந்த அளவிலான பங்கேற்பு உள்ளடங்கலாக பல்வேறு சவால்களை அமைச்சு எதிர்கொண்டுள்ளது. வேலையாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கின்ற அதேவேளை, சாதகமான வேலைச் சூழலை உருவாக்கும் வகையில் சிக்கலான தொழில் சட்டங்கள் எளிமையாக்கப்படுதல் வேண்டும்,

தொழில் அணியில் பெண்களின் குறைவான பிரதிநிதித்துவத்தை நிவர்த்தி செய்வதற்கு, இந்த சூழ்நிலையை சமாளிக்கவும், தொழில் அணியில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கவும் இரவு பணிப் முறைமாற்று முறையைத் தளர்த்துவது போன்ற அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். தொழில் அணியில் வயதான மக்கள் தொகையின் விரைவான அதிகரிப்பினால் உருவாகும் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக சமூகப் பாதுகாப்பு முறைமைகள் நிலைப்படுத்தப்பட வேண்டியிருக்கின்றது.

அதேபோன்று, அதிகளவிலான மக்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பை நோக்கி செலுத்துவதன் மூலம் தற்போது நிலவும் அந்நியச் செலாவணி நெருக்கடியைக் குறைப்பதற்கு இந்த அமைச்சு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். உலகில் வளர்ந்து வரும் போக்குகளுக்கு ஏற்ற வகையில் தேர்ச்சியுள்ள வேலையாளர்கள் இன்மை இலங்கை எதிர்கொள்ளும் முக்கிய சவால்களில் ஒன்றாகும். மேலும், தொழில்நுட்பப் பயிற்சித் துறையில் தொடர்ந்தேர்ச்சியாக வளர்ச்சியடைந்து வரும் முன்னேற்றத்தைக் கையாளத்தக்க வகையில் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் இல்லை. வெளிநாட்டு தொழில்வாய்ப்புச் சந்தையில் ஏனைய நாடுகளால் வழங்கப்படுகின்ற போட்டித்தன்மை கடுமையாக அதிகரித்து வருகின்றது.
அதேபோன்று, கிடைக்கக்கூடிய மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை சிக்கனமாக பயன்படுத்துவதன் மூலம் அமைச்சின் குறிக்கோள்களை அடைவதற்கான நடவடிக்கைகள் கைக்கொள்ளப்படுதல் வேண்டும். இந்தச் சவால்களை முறியடிப்பதற்கும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும், பல்லின வெளிநாட்டு தொழில்வாய்ப்புச் சந்தைக்கு தேர்ச்சியுள்ள பணியாளர்களை அனுப்புவதற்கும் தொழில் அமைதியை ஏற்படுத்துவதனுடன் தொடர்புடைய சட்ட மற்றும் கொள்கைக் கட்டமைப்பை இந்த அமைச்சு ஏற்படுத்துதல் வேண்டும்.

**எதிர்காலத் திட்டங்கள்**

1. தொழில் திணைக்களம் ஆரம்பித்ததிலிருந்து இயற்றப்பட்ட சட்டங்கள் உள்ளடங்கலாக சுமார் 50 சட்டவாக்கங்கள் தற்போது நடைமுறையிலுள்ளன. அனைத்து அக்கறைதாரர்களுக்கும் அனுகூலங் களையும் உறுதிப்படுத்தி, தற்போதுள்ள காலாவதியான தொழில் சட்டங்களைத் திருத்துவதுடன், தொழில் சட்டங்களில் நிலவும் சிக்கல்களையும் நீக்குவது மிகவும் அவசியமானது. இந்தத் தேவை, 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவு கள் மூலம் மாண்புமிகு சனாதிபதியினால் அழுத்தமாகத் தெரிவிக்கப்பட்டிருந்ததுடன், இந்தப் பொறுப்பு இந்த அமைச்சிற்கு உரித்தளிக்கப்பட்டுள்ளது. தற்போதைய சமூகப் பொருளாதார முன்னேற்றங்களுடன் இணைந்த புதிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை உள்ளடக்கிய புதிய தொழில் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான ஆரம்ப ஆய்வை தொழில் திணைக்களம் பொறுப் பேற்றுள்ளது.

2. வேலையாளர்களுக்கான புதிய சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. தற்போது, சுகாதாரம், தொழில்சார் அனுகூலங்கள், மகப்பேற்று அனுகூலங்கள், தொழிலின்மை அனுகூலங்கள், பணியாளர் நட்டஈட்டு அனுகூலங்கள் ஆகியவை தொழில் வழங்குநராலேயே உறப்படுதல் வேண்டும். தொழில் வழங்குநர்களுக்கு மேலதிக சுமையை ஏற்படுத்தாது, அத்தகைய அனுகூலங்களை வழங்குவதற்கு புதிய முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டும்.

3. தொழில் திணைக்களத்தின் செயற்பாடுகளை டிஜிட்டல் மயமாக்குதல் 2023 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படும் என்பதுடன், 2026 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில், தனியார் மற்றும் பகுதியளவிலான அரச துறைகளின் பணியாளர்கள் பணிக்கமர்த்தப்பட்ட நாள் முதல் ஓய்வு பெறும் நாள் வரையும்

தொழில் திணைக்களம் வழங்கும் அனைத்து சேவைகளும் டிஜிட்டல் மயமாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இது, திணைக்களத்திற்கு சேவைநாடுநர்களின் வருகையைக் குறைக்கும் என்பதுடன், இணையவழி மூலம் சேவைகளை வழங்குவதானது, வினைத்திறனை செம்மைப்படுத்துகின்ற அதேவேளை தேவையற்ற தாமதங்களையும் தடுக்கின்றது.

4. 2023 ஆம் ஆண்டிலிருந்து சமூக கலந்துரையாடல் தொடர்பான தரங்களைப் பேணுகின்ற நிறுவனங்களுக்கான தரத்திற்கான சமூக கலந்துரையாடல் சான்றிதழை வழங்குதல்:

   இந்த சான்றிதழைப் பெறுவதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பு தனியார் மற்றும் பகுதியளவிலான அரச நிறுவனங்களுக்கு வழங்கப்படும் என்பதுடன், குழுவொன்றினால் கள விஜயம் மேற்கொள்ளப்பட்டு, புள்ளிகள் வழங்கப்பட்டு, நிறுவனம் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில், சமூக கலந்துரையாடல் மற்றும் வேலைத்தள ஒத்துழைப்பு மட்டம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு சான்றிதழ் வழங்கப்படும்.

5. வெளிநாட்டில் தொழில்புரியும் காலப்பகுதியின் அடிப்படையில் இலங்கையின் சுங்கத்தீர்வை யற்ற கடைகளில் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக நாடு திரும்பும் இலங்கை புலம் பெயர் வேலையாளர்களுக்கு வழங்கப்படும் சுங்கத்தீர்வையற்ற கொடுப்பனவுக்கு மேலதிகமாக, வெளிநாட்டு தொழிலிலிருந்தான அவர்களின் வருமானத்தை சட்டரீதியான வழிமுறைகள் ஊடாக இலங்கைக்கு அனுப்புகின்ற இலங்கையர்களுக்கு மேலதிக சுங்கத்தீர்வையற்ற கொடுப்பனவை வழங்குதல்.

6. வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையை ஒழுங்கமைத்தல், தற்போதுள்ள சட்டக் கட்டமைப்பை வலுப்படுத்துதல் மற்றும் சர்வதேசக் கடப்பாடுகளுடன் இணங்குவதை உறுதி செய்வதற்கு உள்நாட்டில் சட்டங்களை அமுல்படுத்துவதற்கு வசதியாக பணியகச் சட்டத்தைத் திருத்துதல்.

7. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், 2023 ஆம் ஆண்டிலிருந்து திறைசேரியிடமிருந்து ஏற்பாடுகளைப் பெறாது, நிலையான சுயநிதி நிறுவனமாக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். வேலையாளர்களின் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மற்றும் தொழில்சார் விபத்துக்கள் மற்றும் நோய்களைத் தடுப்பதன் ஊடாக பாதுகாப்பான வேலைத்தல ஆரோக்கியமான தொழில் அணியொன்றை உருவாக்குவதற்கான தேசிய கடமை தொடர்பில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதேபோன்று, இந்த நிறுவகத்தை தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் சர்வதேச அளவிலான நிறுவகமாக மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் 2023 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படும்.

9. வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையின் முன்னேற்றத்திற்காக பின்வரும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

   - மத்திய கிழக்கு வலயத்தைச் சார்ந்திருப்பதற்குப் பதிலாக மாற்று நாடுகளைக் கண்டறிவதற்கு வேண்டிய தேவையுள்ளது. வயதான மக்கள்தொகை அதிகரிப்பு மற்றும் பெண் தொழில் அணியின் பங்கேற்பில் சரிவு ஆகியவை காரணமாக முன்னேறிய நாடுகளில் தாதியர் சேவை மற்றும் வயது வந்தோருக்கான பராமரிப்பாளர் சேவை போன்ற விசேட சேவைகளுக்கான அதிகரித்த தேவையொன்று உருவாகி வருகின்றது. இதன்படி, புதிய நாடுகளையும், புதிய தொழில் துறைகளையும் கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

   - வெளிநாட்டு வேலைவாய்ப்பை மேம்படுத்துவதில் கருத்தில்கொள்ள வேண்டிய அடிப்படை விடயங்களிலொன்று, வெளிநாட்டு தொழிலை நாடுபவர்களுக்கு அதிக ஆக்கத்திறனுள்ள வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளைக் கிடைக்கப்பெறச் செய்வதாகும். உலகளாவியரீதியில் கிடைக்கப்பெறும் தொழில் வாய்ப்புக்களுக்கு ஏற்ப இலங்கைக்கான போட்டித் திறனைப் பெறுவதற்கு இலங்கைக்கான வாய்ப்புகளை இனங்காண்பதற்கும், அத்தகைய தொழில் வாய்ப்புகளுக்குப் பொருந்தும் வகையில் பொருத்தமான தேர்ச்சி பயிற்சிகளினூடாக தேர்ச்சியுள்ள தொழில் புலம்பெயர்வுக்கு அதிக வாய்ப்புகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

- தொழிலுக்காக புலம்பெயரும் வேலையாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்புரிக்காக அமைச்சினால் தற்போது செயற்படுத்தப்படுகின்ற குடும்ப அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பராமரிப்புத் திட்டங்கள் போன்ற அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ந்தேர்ச்சியாக செயற்படுத்தல் மற்றும் மேலும் வலுப்படுத் துதல் அத்துடன், ஆக்கத்திறனுள்ள, பாதுகாப்பான புலம்பெயர்வு குறித்த பிராந்திய விழிப்புணர்வை விரிவுபடுத்துதல்.

- தொழிலுக்கான இடம்பெயர்வு தொடர்பான இலங்கையின் தேசிய கொள்கை மற்றும் செயற்றிட்டத்தை அமுல்படுத்துதல்.

- புலம்பெயர் வேலையாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் உரிமைகள் மற்றும் நலனைப் பாதுகாப்பதற்காக அபிவிருத்தித் தரப்புக்களுடன் இணைந்து நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல்.

  அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்புக்கான சுவிஸ் முகவரகம் மற்றும் சர்வதேச தொழில் தாபனம் ஆகியவற்றின் பங்களிப்புடன், பராமரிப்பு மற்றும் உபசரிப்பு துறைகளில் வேலை வாய்ப்பை அதிகரிப்பதற்காக தொழில் புலம்பெயர்வு உபாயங்களை உருவாக்குவதற்கான கருத்திட்டத்துடன் பாதுகாப்புள்ள பொறுப்புவாய்ந்த தொழில் புலம்பெயர்வு நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல்.

- பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு இணைந்து, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவின் ஒருங்கிணைப்புடன் அரச அலுவலர்கள் மற்றும் வேலைவாய்ப்பிற்காக புலம்பெயர்வதற்கு எதிர்பார்க்கின்ற ஏனைய வேலையாளர்களுக்கு பாதுகாப்பான வேலை வாய்ப்புகளை வழங்குவது தொடர்பில் உதவுவதற்காக விசேட கருத்திட்டமொன்றை நடைமுறைப் படுத் துவதற் கு திட்டமிடப்பட்டுள்ளது.

  இந்த நோக்கத்திற்காக, ஒருங்கிணைந்த வழிகாட்டுநெறி மற்றும் பரிந்துரை முறைமை (IGRS) தாபிக்கப்படும். முன்னோடிக் கருத்திட்டத்தின் தொழில்நுட்ப மற்றும் நிதி உதவியானது புலம் பெயர்வுக்கான சர்வதேச தாபனத்தினால் நீடிக்கப்படும்.

- நாடு திரும்பிய புலம்பெயர் வேலையாளர்களை, ஏனைய உரிய அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களின் உதவியுடன் உள்நாட்டு தொழில் சந்தையில் மீள ஒருங்கிணைப்பதற்காக தற்போதுள்ள பொறிமுறையை வலுப்படுத்துதல்.

9. கண்டி, நுவரெலியா, புத்தளம், மட்டக்களப்பு மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் 2023 ஆம் ஆண்டளவில் மற்றும் ஏனைய அனைத்து மாவட்டங்களில் 2025 ஆம் ஆண்டளவில் சிறுவர் தொழில் அற்ற வலயங்கள்' என்பதாக உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை களை எடுத்தல்.

10. சிறந்த நிருவாகம் மற்றும் தகவல்களின், சான்றுகளின் அடிப்படையிலான கொள்கை வகுத்தமைப்புக்காக உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கான தொழில் சந்தை தகவல் முறைமையைத் தாபித்தல்

11. தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம், சேவையின் தரத்தை மேம்படுத்துவதற்கும், பாதுகாப்பு சேவை மற்றும் சுத்திகரிப்பு சேவை போன்ற அத்தகைய நாளாந்த வாழ்க்கையுடன் தொடர்புடைய சேவைகளின் தரத்தை உயர்த்துவதற்கும் 2023 ஆம் ஆண்டில் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்குத் திட்டமிடப்படுகின்றது.

12. செலவுகளைக் குறைக்கின்ற அதேவேளையில், அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களால் வழங்கப்பட்ட சேவைகளின் செயற்றிறனை அதிகரிக்கும் நோக்கில் பணி செயன்முறைகளை ஆய்வு செய்வதன் ஊடாக செயன்முறைகளை இலகுபடுத்துவதன் மூலம் உள் மற்றும் வெளி செவைநாடுநர்களின் திருப்தியை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.



**ஆர்.பி.ஏ. விமலவீர**
செயலாளர்
தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

## 2.2 அமைச்சின் முன்னேற்றம்

### 2.2.1 தொழில் அணியைப் பலப்படுத்துதல் மற்றும் சர்வதேச தொழில் நியமங்களைப் பேணுதல்

சர்வதேச தொழில் தாபனத்தின் உறுப்பு நாடாக இலங்கையினால் மேற்கொள்ளப்படும் கடப்பாடுகள் மற்றும் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஏனைய சமவாயங்கள்கள் மற்றும் பரிந்துரைகளுக்கு அமைவாக உள்நாட்டு தொழில் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் தொழில் துறையில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவற்றைப் பயன்படுத்துதல் என்பன இந்த அமைச்சின் பிரதான பொறுப்பாகும்.

சர்வதேச தொழில் தாபனம் மற்றும் ஏனைய பல்தரப்பு முகவரகங்களுக்கு தொழில் துறை தொடர்பில் இலங்கை தனது கடப்பாடுகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றியிருப்பதை உறுதி செய்தல், தொழில் கொள்கைகளை வகுத்தமைத்தல், தேசிய மட்டத்திலான சமூக கலந்துரையாடல்களை உருவாக்குதல் மற்றும் மனித வள அபிவிருத்திக்காக சர்வதேச ஆதரவைப் பெறுதல் என்பன அமைச்சின் ஏனைய பணிகளாகும். இந்த இலக்குகளை அடைவதற்காக பின்வரும் நடவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டுள்ளன.

**1. தொழில் அணியினை வலுப்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல்**

I. முத்தரப்பு பிரதிநிதித்துவத்துடன் தேசிய தொழில் ஆலோசனைக் சபையின் (என்.எல்.ஏ.சி) அனுசரணையாளராக சேவையாற்றுதல். 2022 ஆம் ஆண்டில், 06 கூட்டங்களை நடத்தி பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- தொழில் அணியில் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்காக கடை மற்றும் அலுவலக பணியாளர்கள் சட்டத்தைத் திருத்துவதற்கு முடிபெடுக்கப்பட்டிருந்தது.

- ஊழியர் சேமலாப நிதியத்தின் 30% உரித்துகளைப் பெற்றுக்கொள்வதற்கு பின்பற்றப்பட்ட நிருவாக நடைமுறையை தளர்த்துவதற்காக முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுருந்தன.

- இரண்டு வரவு செலவுத் திட்ட நிவாரண கொடுப்பனவுகளுடன் சேர்த்து குறைந்தபட்ச சம்பளத்தை 21,000/-ஷரூபாவாக அதிகரிப்பதற்கு முன்மொழியப்பட்டிருந்தது.

- தொழிற்சங்கத் தலைவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட நாளாந்த சம்பளமான 1000/- ஷரூபாவை வழங்குவது தொடர்பான பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

II. தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியினால் தொழில் சந்தையில் ஏற்படும் பிரச்சினை களை இனங்கண்டு, அவற்றுக்குத் தீர்வு காண்பதற்காக முத்தரப்புப் பிரதிநிதித்துவத்துடன் குழு வொன்றை நியமித்தல், அது தொடர்பான நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல் மற்றும் கௌரவ அமைச்சரின் பங்களிப்புடன் ஒரு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடாத்துதல் அத்துடன், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு, பொது திறைசேரி, இலங்கை மத்திய வங்கி, சர்வதேச தொழில் தாபனம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியவற்றின் பிரதிநிதித்து வத்துடன் குழுவொன்றைத் தாபிக்குமாறு கௌரவ அமைச்சரினால் பணிப்புரை விடுக்கப்பட்டது.

III. சட்டங்கள் மற்றும் கொள்கைகளை மீளாய்வு செய்தல் மற்றும் தொழில் துறை தொடர்பான புதிய சட்டவாக்கங்களை அறிமுகப்படுத்துதல் தொடர்பான விடயங்கள், போக்குகள் மற்றும் தேவைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக அமைச்சுக் குழுக்களின் கூட்டங்களை நடத்துதல் மற்றும் அது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் ஒழுங்கமைத்தல்.

**அ. கடை மற்றும் அலுவலக பணியாளர் சட்டத்தைத் திருத்துவதற்காக இரண்டு கலந்துரையாடல் களை நடத்துதல்.**

- அறிவுசார் செயன்முறை வெளிவளமிடல் நிறுவனங்கள், வர்த்தக செயன்முறை வெளிவளமிடல் கம்பனிகள் மற்றும் ஏனைய நாட்டு கம்பனிகளின் வியாபார செயற்பாடுகளை, கணக்கியல் நிருவாக செயற்பாடுகளைக் கையாளும் அலுவலகங்கள் போன்றவற்றில் கடமையாற்றும் பெண் பணியாளர்களுக்கு வாய்ப்பளித்தல்.

- இரவு நேரங்களில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள

பெண்கள் ஆற்றும் வேலைகள் உள்ள இடங்களின் போக்குவரத்து வசதிகள், பாதுகாப்பு மற்றும் பொதுவான வசதிகளை வழங்குவது தொடர்பான கட்டகளை பிறப்பிக்கும் அதிகாரத்தை வழங்குதல்.

- சமமான வேலை அல்லது சேவைகளுக்கு பாலினத்தைப் பொருட்படுத்தாது சமமான வேதனத்தை செலுத்துமாறு தொழில்தருநர்களுக்கு உத்தரவிடுதல்.

**ஆ. தேசிய குறைந்தபட்ச சம்பளச் சட்டம் தொடர்பாக 03 கலந்துரையாடல்களை நடத்துதல்**

- தேசிய குறைந்தபட்ச சம்பளத்தை 21,000/- 'ரூபா வரை உயர்த்துவதற்கு தொழில் வழங்குநர்கள் இணங்கியுள்ளதால், இந்த முடிவை தேசிய தொழில் ஆலோசனைக் குழுவிற்கு அனுப்ப முடியும் என்பதுடன், அதன் பெறுபெற்றின் அடிப்படையில் எதிர்கால நடவடிக்கை அமையும்.

- தேசிய குறைந்தபட்ச சம்பளத்தை பயனுள்ளவகையில் செயற்படுத்துவதற்காக முன்மொழியப்பட்ட திருத்தங்களில் இரண்டு வரவு செலவுத் திட்ட நிவாரணக் கொடுப்பனவுச் சட்டங்களை கூட்டிணைப்பதற்கும் உபகுழு இணங்கியிருந்தது.

- சர்வதேச தொழில் தாபனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் தேசிய குறைந்தபட்ச சம்பளத்தை சீராக்குவதற்கான பொறிமுறையொன்றை உருவாக்குவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராயுமாறு துணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

IV. சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்கான தேசிய வழிகாட்டல் குழுவின் (NCSECL) கூட்டத்தை நடத்துதல் மற்றும் அது தொடர்பான அனைத்து செயற்பாடுகளையும் ஒருங்கிணைத்தல்.

இக்கூட்டத்தில், சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்காக செயற்படுத்தப்பட்டு வருகின்ற மற்றும் நிறைவுசெய்யப்பட்ட செயற்பாடுகள் குறித்த அறிக்கைகளையும், செயற்றிட்டத்தை வகுத்தமைப்பதற்கான முன்மொழிவுகளையும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், சொல்லப்பட்ட அறிக்கைகள் பெறப்பட்டதன்பேரில், செயற்றிட்டத்தை தொகுக்கும் செயன்முறையை ஆரம்பிப்பதற்கு தொழில் திணைக்களத்தின் பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரப் பிரிவு திட்டமிட்டுள்ளது. மேலும், தெரிவசெய்யப்பட்ட மாவட்டங்களில் சிறுவர் தொழிலற்ற வலய மாதிரிகளை மீண்டும் உருவாக்குவதற்காகவும், உரிய தரப்பினருடன் கலந்துரையாடியதன் பின்னர் செயற்றிட்டத்தை வரைவதற்கும் தொழில் திணைக்களம் முடிவு செய்தது.

**2. சர்வதேச தொழில் நியமங்களைப் பேணுதல்**

I. 2022 ஆம் ஆண்டிற்கான 06 மாநாடுகளுக்காக சர்வதேச தொழில் தாபனத்தின் 22 ஆம் உறுப்புரையின் கீழ் அறிக்கைகளைத் தயாரித்தல்.

II. ஏற்று அங்கீகரிக்கப்படாத சமவாயங்களுக்கு சர்வதேச தொழில் தாபனத்தின் 19 ஆம் உறுப்புரையின் கீழ் அறிக்கைகளைத் தயாரித்தல்.

III. ஐரோப்பிய யூனியனின் ஜீ.எஸ்.பி சலுகைகளை மீளப்பெறுதலுடன் இணைந்துள்ள பிரச்சினை களைத் தீர்ப்பதற்குரிய அறிக்கைகளைத் தொகுத்தல் மற்றும் ஜீ.எஸ்.பி சலுகையினைக் கண்காணிப்பதற்கு நியமிக்கப்பட்ட முத்தரப்பு குழுவுக்கான கூட்டத்தை நடத்துதலும். அதிலுள்ள அனைத்து செயற்பாடுகளையும் ஒழுங்குபடுத்துதலும் பங்கு பற்றுதலும்.

IV. ஜெனிவாவில் வருடாந்தம் நடத்தப்படுகின்ற சர்வதேச தொழில் தாபன மாநாட்டில் முத்தரப்பு பிரதிநிதிகள் இணைய வழி மூலமாக பங்குபற்றுவதற்கு தேவையான அனைத்து செயற்பாடுகளை ஒருங்கிணைத்தலும், பின்பற்றுதலும். எட்டு நாடுகளின் பிரதிநிதிகள், தொழில்வழங்குநர் பிரதிநிதியொருவர் மற்றும் ஏழு தொழில் சங்கப் பிரதிநிதிகள் 2022.05.27 ஆம் திகதி முதல் 2022.06.11 ஆம் திகதி வரை நடைபெற்ற இந்த இணையவழி நிகழ்வில் பங்குபற்றியிருந்தனர்.

V. இலங்கைக்கும் ஏனைய நாடுகளுக்கும் இடையில் தொழில் துறை தொடர்பான சமூகப் பாதுகாப்பு மற்றும் கல்வி ஆகிய துறைகளில் எதிர்காலத்தில் கைச்சாத்திடப்படவுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தொடர்பான செயற்பாடுகளையும், அதனை நிறைவேற்றுவதற்கான அனைத்து வேலைத்திட்டங்களையும் கையாளுதல்.

- இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான சமூகப் பாதுகாப்பு உடன்படிக்கை தொடர்பான அமைச்சரவை விஞ்ஞாபனத்தைத் தயாரித்தல் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடுவதனுடன் இணைந்துள்ள ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல்.

- யப்பானின் எஹிமி மாகாணத்திற்கும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவிற்கும் இடையில் முன்மொழியப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்துடன் தொடர்புபட்ட அமைச்சரவைப் பத்திரத்தை தயாரித்தல்.

VI. சர்வதேச தொழில் தாபனத்தின் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் நடத்தப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் பயிற்சிசெயலமர்வுகளின் அனைத்து ஒருங்கிணைப்பு செயற்பாடுகளையும் மேற்கொள்வது.

VII. சர்வதேச தொழில் தாபனத்திற்கு ஆண்டுதோறும் தெரிவிப்பதற்குத் தேவைப்படுத்தப்படுகின்ற தொழில் பற்றிய புள்ளிவிவரங்கள் குறித்த கேள்வித்தாளுக்குப் பதில்களை வழங்குதல்.

VIII. ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் மீறப்படுவதாக தொழிற்சங்கங்களால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு தொடர்பாகவும் மற்றும் சர்வதேச தொழில் தாபனத்தின் 87 ஆவது சமவாயத்துடன் ஆக்கபூர்வமான இணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் தவறியுள்ளதாக குற்றம் சாட்டி தொழிற்சங்கங்கள் செய்த முறைப்பாடு தொடர்பாகவு இரண்டு அறிக்கைகளைச் சமர்ப்பித்து உரிய நிறுவனங்களிடமிருந்து தகவல்களைப் பெறுதல்.

IX. அடிமைத்தனத்தின் சமகால வடிவங்கள், அதன் காரணங்கள் மற்றும் விளைவுகள் உள்ளடங்கலாக, இலங்கையின் தொழில் துறை தொடர்பான விடயங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு அறிக்கையாளர் திரு. டொமோயா ஒபோகாடாவுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல்கள் பற்றிய அறிக்கையை சமர்ப்பித்தல்.

X. சர்வதேச சமூக பாதுகாப்பு தாபனத்தின் வருடாந்த தகவலை இற்றைப்படுத்துதல்.

XI. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் ஏனைய அமைச்சுகளின் பயன்பாட்டிற்காக தொழில் துறையின் வளர்ந்து வரும் போக்குகள் பற்றிய அறிக்கைகளைத் தொகுத்தல்.

XII. சர்வதேச தொழில் தாபனத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சமவாயங்கள் மற்றும் பரிந்துரைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்தல்.

### 2.2.2 சர்வதேச கூட்டுத்தாபனம் ஊடாக புலம்பெயர் வேலையாளர்களை வலுப்படுத்துதல்

#### 1. புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் / உடன்படிக்கைகள்

மனிதவளத் துறையை மேம்படுத்துதல், மனித இயலுமையை விருத்திசெய்தல், சர்வதேச சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், சட்ட அலுவல்கள் மற்றும் நல்லிணக்க உறவுகள் உள்ளடங்கலாக பல்வேறு குறிக்கோள்களை அடைவதற்காக இலங்கை அரசாங்கம் பல ஒப்பந்தங்களில் ஈடுபட்டுள்ளது. அத்தகைய பத்தொன்பது (19) உடன்படிக்கைகள் / புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தற்போது நடைமுறையில் உள்ளன.

- புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் / உடன்படிக்கைகள்

  இலங்கை அரசாங்கத்திற்கும், பெரிய பிரித்தானியா மற்றும் வடக்கு அயர்லாந்து அரசாங்கத்திற்கும் இடையில் சுகாதார சேவை ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் 2022 சனவரி 18 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

- பின்வரும் நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் / உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவது தொடர்பான வரைவுகள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மூலம் பரிமாறிக்கொள்ளப் பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| மால்டா குடியரசு | - | மனிதவலுத் துறை |
| ருமேனியா | - | வேலைவாய்ப்பு மற்றும் மனிதவலுத் துறைகள் |
| லக்சம்பர்க் | - | வேலைவாய்ப்பு மற்றும் மனிதவலுத் துறைகள் |
| இத்தாலி | - | புலம்பெயர்வு மற்றும் இயக்கப் பங்குடமை |

- வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பாக இலக்கு நாடுகளுடன் ஏற்கனவே உள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் / இருதரப்பு உடன்படிக்கைகளை மதிப்பாய்வு செய்தல்

பின்வரும் உடன்படிக்கைகளை / புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மீளாய்வு செய்வது பற்றிய விபரங்கள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினூடாக உரிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| சீஷெல்ஸ் | - | மனிதவலுத் துறை |
| குவைத் | - | தொழில், வேலைவாய்ப்பு மற்றும் மனிதவலு மேம்பாடு |
| கொரிய குடியரசு | - | வேலைவாய்ப்பு அனுமதிப்பத்திர முறைமையின் கீழ் தொழிலாளர்களை அனுப்புதல் மற்றும் பெறுதல். |
| மலேசியா | - | ஆட்சேர்ப்பு, வேலை வாய்ப்பு மற்றும் தொழிலாளர்களை மீண்டும் அழைத்து வருதல். தற்போது, இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டு, எதிர்காலத்தில் கையெழுத்திடப்படு வதற்கு அது முன்மொழியப்பட்டுள்ளது. |

- இணைந்த குழு கூட்டங்கள்

இலங்கைக்கும் ஐக்கிய அரபு எமிரேட்சுக்கும் இடையிலான இலங்கை மனிதவலு வேலைவாய்ப்பை ஒழுங்குபடுத்துவதற்கான உடன்படிக்கையின் கீழ் முதலாவது இணைக் கூட்டம் 2022 ஏப்ரல் 06 ஆம் திகதி இணையவழி மூலம் நடைபெற்றிருந்தது.

இச்சந்திப்பில், ஐக்கிய அரபு எமிரேட்சில் தொழில்வாய்ப்பிற்கான ஆட்சேர்ப்பு மற்றும் வேலைவாய்ப்பு செயன்முறையில் இலங்கை புலம்பெயர் வேலையாளர்களால் எதிர்கொள்ளப்படுகின்ற பிரச்சினைகள், வேலையாளர்களின் உரிமைகளை, பிணக்குகளைத் தீர்ப்பதற்கான பாதுகாப்பதற்கான முறைகள், பொறி முறைகள் மற்றும் ஒவ்வொரு தரப்பினரின் பங்கு மற்றும் பொறுப்புகளை வரையறுக்கின்ற இரண்டு நாடுகளின் தனியார் நிறுவனங்களுக்கிடையில் ஆட்சேர்ப்பு உடன்படிக்கையை உருவாக்குவதற் கான கூட்டு நடவடிக்கைமுறைகள மற்றும் தொழில் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்காக ஐக்கிய அரபு எமிரேட்சில் பின்பற்றப்பட்ட முறை பற்றிய சுருக்கமான ஆய்வு ஆகியவை பற்றி கலந்துரையாடப்பட்டிருந்தன.

## 2. பூகோள / பிராந்திய மன்றங்கள்

- கொழும்பு செயன்முறை

இலங்கையால் தலைமை தாங்கப்பட்ட திறன்கள் மற்றும் தகைமை அங்கீகாரம் தொடர்பான செயன் முறைகள் தொடர்பான ஏழாவது கருப்பொருள் பகுதி செயற்குழுவின் (TAWG) கூட்டம் மற்றும் பாகிஸ்தானினால் தலைமை தாங்கப்பட்ட மலிவான, வேகமான மற்றும் பாதுகாப்பான பணப் பரிமாற்றத்தை ஊக்குவிப்பது தொடர்பான ஆறாவது கருப்பொருள் பகுதி செயற்குழுவின் கூட்டம் ஆகியன தாய்லாந்தில் 2022 யூன் 21 முதல் 23 ஆம் திகதி வரை நடைபெற்றிருந்தது.

புலம்பெயர் வேலையாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கின்ற, புலம்பெயர்ந்த வேலையாளர்களுக்கும், அவர்களின் குடும்பங்கள் மற்றும் பிறந்த நாடுகளுக்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தியின் தாக்கத்தை அதிகப்படுத்துகின்ற அதேவேளை, கூட்டங்களின் ஒட்டுமொத்த பெறுபேறு, ஆசியாவில் ஒழுங்கமைக்கப்பட்ட தொழில் புலம்பெயர்வின் நன்மைகளை உச்சளவிற்குக் கொண்டுசெல்வதனை நோக்கமாகக் கொண்டிருந்தது.

இலங்கை அரசாங்கம், இலங்கையால் தலைமை தாங்கப்பட்ட திறன்கள் மற்றும் தகைமை அங்கீகாரம் தொடர்பான செயன்முறைகள் பற்றிய வியுறுபு முதல் நாள் கூட்டத்தில், கொழும்பு செயன்முறை உறுப்பு நாடுகளில் இருந்து தமது நாடுகளுக்கு வெளியே தொழில் தேடுகின்ற வேலையாளர்களின் திறன் மட்டத்தை அதிகரிப்பதற்கான அதன் அர்ப்பணிப்புகளை ஏற்றுக்கொண்டிருந்தது.

இரண்டாவது நாள், பாகிஸ்தான் அரசாங்கத்தின் தலைமையில், மலிவான, வேகமான மற்றும் பாதுகாப்பான பணப்பரிமாற்றத்தை ஊக்குவிப்பது குறித்த TAWG, புலம்பெயர் வேலையாளர்களுக்கான முறையான பணம் அனுப்பும் வழிகளை அணுகுவதை மேம்படுத்துதல், நிதிச் சேவைகளுக்கான அணுகலை அதிகரித்தல் மற்றும் புலம்பெயர் வேலையாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு அனுப்பும் பணத்தை பயனுள்ளவகையில் பயன்படுத்துதலை வலுப்படுத்துதல் ஆகிய குழுவின் நோக்கத்தை மீண்டும் உறுதிப்படுத்தும் முக்கிய கலந்துரையாடல்களை உள்ளடக்கியிருந்தது. அதன் பின்னர், கொழும்பு செயன்முறை உறுப்பு நாடுகளின் (CPMS) பிரதிநிதிகளுக்காக தெரிவுசெய்யப்பட்ட வேலையாளர் புலம்பெயர்வு மற்றும் நிருவாகப் பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்திய இயலளவை வளர்க்கும் செயலமர்வொன்று நடத்தப்பட்டிருந்தது.

நெறிமுறை ஆட்சேர்ப்பு முறையை மேம்படுத்துவது தொடர்பான கொழும்பு செயன்முறையின் வயுறுபு ஒன்பதாவது கூட்டம் கடந்த 2022.08.24 & 25 ஆம் திகதிகளில் இரண்டு நாட்கள் பங்களாதேஷ் டாக்காவில் நடைபெற்றிருந்தது. இக்கூட்டத்தில், தெற்கு, கிழக்கு மற்றும் தென்கிழக்காசியா முழுவதும் சீரிய வேலை மற்றும் பாதுகாப்பான புலம்பெயர்வு ஆகியவற்றை உறுதிப்படுத்த உதவும் நியாயமான மற்றும் நெறிமுறையான ஆட்சேர்ப்புகளை மேம்படுத்துவதில் ஒத்துழைக்க வேண்டியதன் தேவை வலியுறுத்தப்பட்டிருந்தது. வயுறுபு கூட்டத்தின்போது, ஆட்சேர்ப்புத் தொழிலை பணியாளர்- ஊதிய மாதிரியிலிருந்து தொழில்வழங்குநர்- ஊதிய மாதிரியாக மாற்றுதல் முறைசாரா ஆட்சேர்ப்பு ஆளர்களை ஒழுங்குமுறை கட்டமைப்பின் கீழ் உள்ளடக்கப்படுவதை உறுதிசெய்தல் மற்றும் புலம்பெயர் வேலையாளர்களுக்கு நெறிமுறையான ஆட்சேர்ப்புக்குத் தேவையான தகவல்களை வழங்குதல் ஆகிய மேலதிக இலக்குகளுக்கான அவர்களது நான்கு ஆண்டு வேலைத் திட்டம் பற்றி உறுப்பு நாடுகள் கலந்துரையாடியிருந்தன.

- அபுதாபி உரையாடல்

அபுதாபி கலந்துரையாடல் ஆலோசனைக் குழுக் கூட்டம் 2022 ஏப்ரல் 05 ஆம் திகதி இணையவழி நிகழ்வாக நடைபெற்றிருந்ததுடன், இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி அலுவலர்கள் பங்கு பற்றியிருந்தனர். அபுதாபி கலந்துரையாடலின் தலைவராக செயற்படும் பாகிஸ்தானால் அங்கீகரிக்கப் பட்ட 2022-2023 ஆம் ஆண்டுகளுக்கான 6 ஆவது அமைச்சரவை கலந்தாலோசனையில் அங்கீகரிக் கப்பட்ட முன்னுரிமைகளை நிவர்த்தி செய்வதற்கான உத்தேச அபுதாபி கலந்துரையாடல் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டிருந்தது. செயற்றிட்டத்தை செயற்படுத்துவது குறித்து ஆலோசிப்பதற்கு குழுவுக்கு வாய்ப்பளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அபுதாபி கலந்துரையாடலின் இரண்டு நாள் சிரேஷ்ட பிரதிநிதிகள் கூட்டம் இணையவழி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி 2022.10.18 மற்றும் 19 ஆம் திகதிகளில் நடைபெற்றிருந்தது.

- பாதுகாப்பான, ஒழுங்கான மற்றும் கிரமமான புலம்பெயர்வுக்கான உலகளாவிய புலம்பெயர்வு ஒப்பந்தம் (GCM)

தொடர்புடைய அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையைச் சேர்ந்த அமைப்புகளின் பங்கேற்புடன், புலம்பெயர்வுக்கான உலகளாவிய ஒப்பந்தத்தை (GCM) செயற்படுத்து வதற்கான தேசியத் திட்டம் குறித்த தொழில்நுட்பக் குழுக் கூட்டம் 2022.02.24 ஆம் திகதி இந்த அமைச்சில் நடைபெற்றிருந்தது. புலம்பெயர்வுக்கான உலகளாவிய ஒப்பந்தத்தின் (GCM) ஆண்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள குறிக்கோள்களில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய குறிக்கோள் களை இனங்காண்பதே இந்தச் சந்திப்பின் முக்கிய நோக்கமாகும்

இரண்டாவது தொழில்நுட்பக் குழுக் கூட்டம், 2022.08.30 ஆம் திகதி நடைபெற்றிருந்ததுடன், இதன் முக்கிய குறிக்கோள், புலம்பெயர்வுக்கான உலகளாவிய ஒப்பந்த தேசியத் திட்டத்தை வரைவதற்காக தொடர்புடைய

நிறுவனங்களிடமிருந்து கோரப்பட்ட அவதானிப்புகளை மதிப்பிடுவதாகும்

புலம்பெயர்வுக்கான உலகளாவிய ஒப்பந்தம் (GCM) மற்றும் சர்வதேச புலம்பெயர்வு மீளாய்வு மன்றத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான இலங்கையின் தேசியத் திட்டம் குறித்த அறிக்கை 2022 மே மாதம் வெளிவிவகார அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. புலம்பெயர்வுக்கான உலகளாவிய ஒப்பந்தத்தை (GCM) நடைமுறைப்படுத்துவது தொடர்பான ஆசிய-வளைகுடா நாடுகளின் கலந்துரையாடல் கட்டார் டோகாவில் 2022 செப்ரெம்பர் 13 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை நடைபெற்றிருந்தது.

- இலங்கையர்களுக்கு பாதுகாப்பான மற்றும் கிரமமான தொழில் புலம்பெயர்வு - நிலை ஐஏதொழில் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்களின் வழிகாட்டுதலின் கீழ் இலங்கையில் உள்ள சுவிட்சர்லாந்து தூதரகத்துடன் இணைந்து "இலங்கையர்களுக்கான பாதுகாப்பான மற்றும் கிரமமான புலம்பெயர்வு" என்ற திட்டம் செயற்படுத்தப்பட்டது. இந்தத் திட்டம் தற்போது நான்காவது கட்டத்தில் உள்ளது. இலங்கை புலம்பெயர் வேலையாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் நலன்புரியை வலுப்படுத்துவதே இந்தத் திட்டத்தின் முதன்மையான நோக்கமாகும். அனுராதபுர மாவட்டத்தில் SAFE, புத்தளம் மாவட்டத்தில் VOCIE, வவுனியா மாவட்டத்தில் குஜசுஆ, கண்டி மாவட்டத்தில் SAMADANA மற்றும் குருநாகல் மாவட்டத்தில் ஊர்சுஊனு ஆகியன மாவட்ட பங்குதாரர்களாக காணப்படுகின்ற அதேவேளை, சர்வதேச தொழில் தாபனம் மற்றும் IESC ஆகியன இத்திட்டத்தின் தேசிய பங்குதாரர்களாக செயற்படுகின்றன. 2022 ஆம் ஆண்டில் இந்த மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் நிதி முன்னேற்றம் 126.12 மில்லியன் ஷரூபாவாகும்.

### 2.2.3 வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையினை மேம்படுத்துதல்

- வெளிநாட்டு வேலைவாய்ப்பை இலக்காகக் கொண்டு தேர்ச்சியுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொழில் அணியினை உருவாக்குதல்

புதிய தொழில்நுட்ப அறிவு மற்றும் தகுதிகளைக் கொண்ட தேரச்சியுள்ள பணியாளர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தைக்கு அனுப்பும் முக்கிய குறிக்கோளுடன், வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு விரும்புகின்ற இலங்கையர்களை, பாரம்பரிய வெளிநாட்டு தொழில் சந்தை உள்ள நாடுகளுக்கு மேலதிகமாக புதிய தொழில் சந்தைகளுக்கு அனுப்புவது மற்றும் இதுவரை இலங்கையர்களை ஆட்சேர்ப்பு செய்யாத நாடுகளுக்கு அனுப்புவது போன்றவை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பிரிவின் கீழ் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டன.

தற்போது கிடைக்கும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள், அந்த நோக்கத்திற்கான தகைமைகள் மற்றும் தொழில் பயிற்சித் தேவைப்பாடுகள் தொடர்புடைய அடிப்படை அறிவினையும், வழிகாட்டுதல் நெறி களையும் வழங்குவதற்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தி, அத்தகைய தேவைப்பாடுகளை நிறைவேற்றுதில் உதவியாகவுள்ள நிறுவனங்கள் மற்றும் கல்வி கற்கைநெறிகள் ஆண்டின் முதலாவது காலாண்டு காலப்பகுதியில் அத்தகைய தகவல்களின் அடிப்படையில் அவ்வாறு இனங்காணப்பட்ட ஆட்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதன்படி, 24 மாவட்டங்களைச் சேர்ந்த 3900 பயனாளிகளை இலக்காகக் கொண்டு, 719,260.00 ரூபா செலவில் 96 நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன.

அமைச்சுக்கு அனுப்பப்பட்ட தகவல்களின்படி, இந்த அடிப்படை விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியதன் பின்னர்,

- தொழில் பயிற்சி தேவைப்படும் வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெறத் தயாராக இருக்கும் நபர்களின் விபரங்கள்,பொருத்தமான தொழிலை

நோக்கி அவர்களை வழிநடத்துவதற்கு, அனுமதிப்பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரகங்களிடம் கையளிப்பதற்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

- தொழிற்பயிற்சி தேவைப்படும் நபர்களின் விபரங்கள், அத்தகைய அதிகாரசபைகளால் நடத்தப்பட்ட பயிற்சி கற்கைநெறிகளில் கொண்டிருக்கும் நோக்கில், கல்வி அமைச்சின் கீழ் உள்ள தொழிற்பயிற்சி அதிகாரசபை மற்றும் தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், தேசிய இளைஞர் பேரவை, தேசிய இளைஞர் படை மற்றும் தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை, இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை (தொழில் பயிற்சி நிலையங்கள் ஊடாக) அத்துடன் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் போன்ற அத்தகைய நிறுவனங்களின் மாவட்ட மற்றும் மாகாண அலுவலகங்களின் உதவியுடன் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப் பட்டிருந்தன. இதன்படி, 2022 ஆம் ஆண்டில் 36,093 பயனாளிகளை இலக்காகக் கொண்டு மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் 1,468 வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப் பட்டிருந்தன. இந்த நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றியவர்களில் 3,446 பேர் ஏற்கனவே வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக வெளியேறியுள்ளனர் என்பதுடன், 7,540 பேர் விரைவில் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பைப் பெறுவதற் காக நாட்டை விட்டு வெளியேறவுள்ளதுடன், 2,254 பேர் தொழில் பயிற்சிக்காக அனுப்பப்பட்டுள்ளனர்.



புகைப்படங்களின் 2.1 சவுதி அரேபியாவின் தூதருடன் சந்திப்பு



புகைப்படங்களின் 2.2 சர்வதேச தொழிலாளர் அமைப்பின் டுநுநுனு திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையை வெளியிடுதல்

### 2.2.4 புலம்பெயர் வேலையாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் பாதுகாப்பு, நலன்புரி மற்றும் வலுவளிப்பு

**1. அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள**


- **குடும்பப் பின்னணி அறிக்கைகளை வழங்குதல்**

புலம்பெயர் பெண் வேலையாளர்களின் பராயமடையாத சிறுவர்களுக்குப் பாதுகாப்பை வழங்கும் குறிக்கோளுடன், 2022.07.12 ஆம் திகதியிடப்பட்ட 01.∴2022 ஆம் இலக்க புதிய சுற்றறிக்கை, "தொழிலுக்காக புலம்பெயர்வதற்கு எதிர்பார்க்கும் பெண்களின் பராயமடையாத சிறுவர்களின் பாதுகாப்புத் திட்டம் குறித்த அறிக்கையைப் பெறுதல்" என்று தலைப்பிட்டுள்ளது. இதன்படி, 77,444 குடும்பப் பின்னணி அறிக்கைகளுக்கான குறுஞ்செய்திகளை அபிவிருத்தி அலுவலர்கள் அனுப்பியுள்ளனர். 2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 1,732 அறிக்கைகளுக்கான பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்ததுடன், 2022 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் 6,340 அறிக்கைகளுக்கான பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்தன அத்துடன் மூன்றாம் காலாண்டில் 46,199 பரிந்துரைகளும், நான்காவது காலாண்டில் சரியான ஆவணப் பெறுகைகள் 23,173 ஆக விருந்தன.

- **'ஷிரமிக சுரகும' நிகழ்ச்சித்திட்டம்**

புலம்பெயர் வேலையாளர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்புரியினை இலக்காகக் கொண்டு 2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் புலம்பெயர் வேலையாளர்களின் குடும்பங்கள் பிரதேச செயலக மட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. புலம்பெயர் வேலையாளர்களின் குடும்பங்களின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்கத்துடன் "குடும்ப மேம்பாட்டுத் திட்டங்கள்" தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு, இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட புலம்பெயர் வேலையாளர் குடும்பங்களில் சமூகரீதியாக பாதிக்கப்படக்கூடிய சிறுவர்களை இலக்காகக் கொண்டு "கவனிப்புத் திட்டங்கள்" வரையப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன. 'ஷிரமிக சுரகும' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், பதிவு செய்யப்பட்ட புலம்பெயர் வேலையாளர் குடும்பங்களின் எண்ணிக்கை 28,606 (23,537 பெண்கள் மற்றும் 5,069 ஆண்கள்) ஆகும்.

**”ஷிரமிக சுரகும” நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை**





**வரைபடம் 2.1** “ஷ்ரமிக சுரகும” நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான பதிவு

- குடும்ப அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பராமரிப்புத் திட்டங்களை தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்

  பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி அலுவலர்களின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டலின் கீழ், 4,462 குடும்ப அபிவிருத்தித் திட்டங்களும், 793 பராமரிப்புத் திட்டங்களும் ‘ஷ்ரமிக சுரகும’ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட புலம்பெயர் வேலையாளர் குடும்பங்களை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன.
  இதற்குமேலதிமாக, பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள அபிவிருத்தி அலுவலர்கள், புலம்பெயர் வேலையாளர் குடும்பங்களின் பிள்ளைகளை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் கல்விப் புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கு சுயதொழில் கடன் மற்றும் வீட்டுக்கடன் திட்டங்களுக்கும் அனுப்புகின்றனர். மேலும், புலம்பெயர் வேலையாளர் குடும்பங்களின் உறுப்பினர்களுக்கு தொழில் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் மருத்துவ கிளினிக்குகளுக்கு அனுப்பப்படுகின்றனர்.

குடும்ப அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பராமரிப்புத் திட்டங்கள்




**வரைபடம் 2.2** குடும்ப அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பராமரிப்புத் திட்டங்கள்

- **விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்**

இந்த அமைச்சுடன் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி அலுவலர்கள் புலம்பெயர் சமூகத்தை இலக்காகக் கொண்டு பிரதேச மட்டத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதுடன், பின்வரும் விடயப்பரப்புகளை உள்ளடக்கி நாடளாவியரீதியில் 5,340 விழிப்புணர்வு நிகழ்ச்சிதிட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

- பாதுகாப்பான புலம்பெயர்வு
- மறு ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித்திட்டம்
- சுய வேலைவாய்ப்பு திறன்கள் மற்றும் தொழில் வழிகாட்டுதல்களை விருத்திசெய்தல்
- சிறுவர் பாதுகாப்பு
- போதைப்பொருள் தடுப்பு
- பாலின அடிப்படையிலான வன்முறையைத் தடுப்பது குறித்த விழிப்புணர்வு
- மனித கடத்தலுக்கு ஆளாகாமல் இருப்பது பற்றிய விழிப்புணர்வு

- **வெளிநாட்டு தொழில் நிறைவுற்று அல்லது கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக நாடு திரும்பிய நபர்களின் சமூகப் பொருளாதார வலுவூட்டல்**

I. 2021 ஆம் ஆண்டில் வெளிநாட்டு வேலைவாய்ப்பை முடித்துவிட்டு நாடு திரும்பியவர்கள் மற்றும் சுயதொழில் அல்லது ஏனைய வருமானம் ஈட்டும் வடிவங்களில் ஈடுபடுவதற்கு எதிர்பார்த்துள்ள நபர்களை இனங்காணும் பணியானது மாவட்ட மற்றும் பிரதேசசெயலகங்களுடன் இணைக்கப்பட்ட அபிவிருத்தி அலுவலர்களால் (வெளிநாட்டு வேலைவாய்ப்பு) மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில், சுயதொழில் கருத்திட்டங்களை, தொழில் முனைவோர் அறிவை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான அறிவினை வழங்குவதற்காகவும், 228 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 1.55 மில்லியன் ரூபா உள்நாட்டு நிதித் தொகையைப் பயன்படுத்தி நடத்தப்பட்டிருந்தன.

இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றியிருந்த பயனாளிகளில் சுயதொழிலை மேற் கொள்வதற்கான உபகரணங்கள் தேவையிருந்த 730 பேர் இனங்காணப்பட்டு, அவர்களை சுயதொழில் வழங்குவதற்காக பணியகம் நடைமுறைப்படுத்துகின்ற நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்குவதற்காக அவர்களின் தகவல்கள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

II. கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக வேலையிழந்த அல்லது பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்ட புலம்பெயர் வேலையாளர்களுக்கு மூலோபாய தலையீட்டிற்கான தேவையை அங்கீகரித்து, சர்வதேச புலம்பெயர்வு அமைப்பு (IOM) மற்றும் சர்வதேச தொழில் தாபனத்துடன் இணைந்து தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு புலம்பெயர் வேலையாளர்களுக்காக கோவிட்-19 பதிலிறுப்புத் திட்டத்தை வகுத்தமைத்துள்ளது. இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு அமைச்சு பல பங்குதார்ரகளிடமிருந்து ஆதரவைக் கோரியிருந்தது.

இதனைத்தொடர்ந்து, சர்வதேச புலம்பெயர்வு அமைப்பு (ஐஓஆ) மற்றும் சர்வதேச தொழில் தாபனத்தின் தலையீடு மற்றும் யப்பான் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் 09 மாவட்டங்களில் 20 நிகழ்ச்சித்திட்டங்களைக் கொண்ட விசேட திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் 05 தையல் நிலையங்கள், 01 காளான் வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டம், 01 தச்சு நிகழ்ச்சித்திட்டம், 01 தும்பு கைத்தொழில் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் 01 சேதன உர உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம் என்பன பூர்த்தி செய்யப்பட்டு சமூகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. நிறைவுசெய்யப்பட்ட திட்டங்களின் மொத்தப் பெறுமதி 42.8 மில்லியன் ரூபா என்பதுடன், மீதமுள்ள கருத்திட்டங்களின் செயற்பாடுகள் இறுதிக் கட்டத்திலுள்ளன.

- **சுயதொழில் / வாழ்வாதாரக் கருத்திட்டங்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற புலம்பெயர் வேலையாளர் குடும்பங்களின் உறுப்பினர்களுக்கு சேவைகளை வழங்குதல்**

புலம்பெயர் வேலையாளர்கள் நாட்டிற்கு அனுப்பும் பணத்தைப் பயன்படுத்தி சுயதொழில்/வாழ்வாதாரத் திட்டங்களில் ஈடுபடத் தயாராக இருக்கின்ற "ஷிரமிக சுரகும" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட புலம்பெயர் வேலையாளர்களின் உறுப்பினர்களைக் கண்டறிந்த பின்னர், அவர்களை இலக்கு வைத்து விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன. புலம்பெயர் வேலையாளர்களின் குடும்பங்களைச் சேர்ந்த 1,170 உறுப்பினர்களின் விபரங்கள் பெறப்பட்டுள்ளன. அத்தகைய தகவல்களின் அடிப்படையில் மாவட்ட மட்டத்திலும், பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்திலும் பிரதேச செயலாளர் பிரிவுகளை ஒருங்கிணைத்து ஆண்டு காலப்பகுதியில் 1,442 பயனாளிகளுக்கு 460,294.00 ரூபா செலவில் 66 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன.

- **பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்துள்ள புலம்பெயர் வேலையாளர்களின் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு தொழில்நுட்ப அல்லது தொழில் பயிற்சி பெறுவதற்கான உதவிகளை விரிவுபடுத்துதல்**

உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ வேலைவாய்ப்பைக் கண்டறியும் நோக்கத்துடன் தொழில்நுட்ப அல்லது தொழிற்கல்வியைத் தொடர்வதற்கு விரும்புகின்ற பொருளாதாரச் சிரமங்களைக் கொண்ட புலம்பெயர் வேலையாளர்களின் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு உதவுவதற்காக பிரதேச செயலக மட்டத்தில் தரவுகளும் தகவல்களும் சேகரிக்கப்பட்டிருந்தன.

தற்போது, 05 மாவட்டங்களிலுள்ள (அம்பாந்தோட்டை, நுவரெலியா, புத்தளம், பொலனறுவை மற்றும் இரத்தினபுரி) 374 குழந்தைகளின் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அவ்வாறு பெறப்பட்ட தகவல்களை, அந்த நிறுவனங்களினால் நடத்தப்படுகின்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் அவர்களுக்கு இடமளிக்குமாறு கோரி, இந்த அமைச்சினது அதிகாரத்தின் கீழ் வருகின்ற வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவகங்கள் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு அனுப்பு வைக்கப் பட்டுள்ளதுடன், இதற்கு மேலதிகமாக, பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் தொழிற் பயிற்சிகளைப் பின்பற்றுவதற்கு ஆர்வமுள்ள பிள்ளைகளை இனங்கண்டு அத்தகைய தகவல்களை அமைச்சுக்கும் தெரிவிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**2. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் (SLBFE) மூலம் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள்**

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமானது, தொழில் புலம்பெயர்வு தொடர்பாக இலங்கை யிலுள்ள முதன்மையான ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையாகும். புலம்பெயர் இலங்கை வேலையாளர் களின் கௌரவம், பாதுகாப்பு மற்றும் சமத்துவத்தின் கீழ் புலம்பெயர்வுடம்பெறுவதை உறுதிப்படுத்தி, தொழில் புலம்பெயர்வு செயன்முறையை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டக் கட்டமைப்பின் கீழ் தாபிக்கப்பட்ட பரந்த நோக்கத்துடன் கூடியதொரு நிறுவனமாகும்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமானது, புலம்பெயர் வேலையாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களைப் பாதுகாப்பதற்காகவும், வலுவளிப்பதற்காகவும், வெளிநாட்டு வேலைவாய்ப்புச் செயன்முறையின் மூன்று நிலைகளிலும், அதாவது புலம்பெயர்விற்கு முன்னைய நிலை (முடிவுகளை எடுப்பது, புலம்பெயர்விற்கு முன்னைய பயிற்சி மற்றும் புறப்பாடு),தொழில் நிலை (வேலையில் ஈடுபட்டுள்ள வேலையாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களை உள்ளடக்கியது) மற்றும் திரும்புதல், மீண்டும் ஒருங்கிணைத்தல் (மறு ஒருங்கிணைப்பு, அங்கீகாரம் மற்றும் பாராட்டினை உள்ளடக்கியது) ஆகிய மூன்று நிலைகளிலும் தனது பணிப்பாணையை நடைமுறைப்படுத்துகின்றது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், அதன் தொழிற்பாட்டு செயன்முறை ஊடாக இந்த குறிக்கோள்களை அடைவதற்கு முயற்சிக்கின்றது.

- **புலம்பெயர் வேலையாளர்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள்**

**அட்டவணை 2.1** புலம்பெயர் வேலையாளர்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள்- இ.வெ.வே.

| | விபரம் | எண்ணிக்கை | தொகை ('ரூ.மில்.) |
|---|---|---|---|
| 01 | புலம்பெயர் வேலையாளர்களுக்கு காப்புறுதி தவணைக் கட்டணக் கொடுப்பனவு | 338,500 | 527.04 |
| 02 | புலம்பெயர் வேலையாளர்களுக்கு காப்புறுதி நட்டஈட்டுக் கொடுப்பனவு (திரும்ப அழைத்து வருவதற்கான செலவுகள், மருத்துவ செலவுகள் மற்றும் இறப்புகளுக்கான நட்டஈடு உள்ளடங்கலானது) | 551 | 111.69 |
| 03 | உதவி தேவைப்படும் புலம்பெயர் வேலையாளர்களுக்கு உணவு, போக்குவரத்து வசதிகள், தங்குமிடம் மற்றும் மருத்துவ சிகிச்சை ஆகியவற்றை வழங்குதல் | 2,983 | 2.53 |
| 04 | பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகியுள்ள புலம்பெயர் வேலையாளர்களை நாட்டுக்கு அழைத்து வருதல்.<br>பணியாளர் நலன்புரி நிதியத்தால்<br>காப்புறுதிக் காப்பீடு மூலம்<br>ஏனைய மூலங்கள் (அரச சார்பற்ற நிறுவனங்கள்) | 03<br>15<br>1,623 | 1.66 |
| 05 | பணியாளர் நலன்புரி நிதியத்தின் கீழ் நிவாரணம் வழங்குதல் | 66 | 14.02 |
| 06 | தற்போதுள்ள சுயவேலைவாய்ப்பை மேம்படுத்துவதற்கு வேலையாளர்களுக்கு தேவையான உபகரணங்கள் / பொருட்களை வழங்குதல் (அதிகபட்சம் ஒவ்வொருவருக்கும் 25,000 ரூபா) | 44 | 1.07 |
| 07 | புலம்பெயர் வேலையாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு மருத்துவ சிகிச்சைக்கான உதவி | 17 | 0.93 |
| 08 | புலம்பெயர் வேலையாளர்களின் பிள்ளைகளுக்கான பாடசாலை உபகரணங்களை விநியோகித்தமை | 1,604 | 7.68 |
| 09 | புலம்பெயர் வேலையாளர்களின் உதவிகள் தேவைப் படு கின்ற குழந்தைகளுக்கு தேவையான உதவிகளை வழங்குதல் | 11 | 0.63 |
| 10 | அங்கவீனமுற்ற புலம்பெயர் வேலையாளர்களின் இயலாமைக்கு ஏற்ப அவர்களின் வீடுகளை நிருமாணிப் பதற்கு / புதுப்பிப்பதற்கு நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவை வழங்குதல் | 06 | 2.24 |

| | | | |
|---|---|---|---|
| 11 | வெளிநாடுகளில் இறந்த புலம்பெயர் வேலையாளர்கள் சார்பாக நிவாரணம் வழங்குதல்<br>- பணியாளர் நலன்புரி நிதியத்தினூடாக உடல்களை நாட்டிற்குக் கொண்டுவருவதற்கு உதவுதல் | பணியகத்தின் செலவில் உடலங்கள் நாட்டிற்கு கொண்டு வரப்படவில்லை | |
| | - இறுதிச்சடங்கு செயற்பாடுகளுக்கான செலவுகளை ஏற்றுக்கொள்ளுதல் | 217 | 8.79 |
| 12 | புலம்பெயர் வேலையாளர்களுக்கு ஓய்வூதியக் கொடுப்பனவு<br>- ஓய்வூதிய பங்களிப்பைப் பெறுவதற்காக விண்ணப்பித்த புலம்பெயர் வேலையாளர்களின் எண்ணிக்கை<br>- ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதியான புலம்பெயர் வேலையாளர்களின் எண்ணிக்கை | 3,374<br>05 | |

மூலம்: நலன்புரிப் பிரிவு / மத்தியஸ்தப் பிரிவு / விமான நிலைய அலகு / மீள் ஒருங்கிணைப்புப் பிரிவு / வெளிநாட்டு உறவுகள் பிரிவு - இ.வெ.வே.ப.

- **புலம்பெயர் வேலையாளர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்களை வழங்குதல்**

**அட்டவணை 2.2** புலம்பெயர் வேலையாளர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்களை வழங்குதல் - இ.வெ.வே.ப.

| விபரம் | அனுகூலங்களைப் பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கை | செலவினம் ('ரூ.மில்.) |
|---|---|---|
| தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் | 21 | 0.42 |
| க.பொ.த (சா.த) சித்தியடைந்த மாணவர்கள் | 69 | 1.725 |
| க.பொ.த (உ.த) சித்தியடைந்த மாணவர்கள் | 32 | 1.12 |
| **மொத்தம்** | **122** | **3.265** |

மூலம்: நலன்புரிப் பிரிவு, இ.வெ.வே.ப.

- **பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்**

**அட்டவணை 2.3** பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்-இ.வெ.வே.ப.

| நிகழ்ச்சித்திட்டம் | நடைபெற்ற நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | ஆட்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| வீட்டுத் துறையின் வீட்டு பராமரிப்பு உதவியாளர் - மத்திய கிழக்கு | 556 | 27,923 |
| கிழக்கு ஆசிய மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான வீட்டுத் துறையின் வீட்டு பராமரிப்பு உதவியாளர் பயிற்சி | 37 | 1,426 |
| உதவியாளர் பயிற்சி (தேசிய தொழில் தகைமை நிலை III) | 74 | 4,497 |
| வீட்டுத் துறையில் வீட்டு பராமரிப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (IFE) | 57 | 1,398 |
| வீட்டு வேலை அல்லாதவற்றுக்கு செல்கின்ற வேலை யாளர்களுக்கான பயிற்சி | 1,621 | 46,051 |
| குடிபெயர்வுக்கு முன்னரான பயிற்சி - தென் கொரியா | 44 | 1,468 |

| | | |
|---|---|---|
| குடிபெயர்வுக்கு முன்னரான பயிற்சி - யப்பான் தொழில்நுட்ப அகப் பயிற்சி கற்கைநெறி | 6 | 50 |
| சிறப்பு மொழிப் பயிற்சி (யப்பான் மொழி) | 88 | 3,488 |
| விசேட மொழிப் பயிற்சி (ஆங்கிலம்) | 42 | 1,978 |

மூலம்: பயிற்றுவிக்கப்பட்ட (வீட்டு) பிரிவு / பயிற்றுவிக்கப்பட்ட (கைத்தொழில்சார் நிறுவனம்சார்) பிரிவு - இ.வெ.வே.ப.

- **புலம்பெயர் வேலையாளர்கள் தமது முறைப்பாடுகளை பணியகத்திற்கு சமர்ப்பிப்பதற்கும், அதன் முன்னேற்றத்தை ஆய்வு செய்வதற்கும் வசதியாக கையடக்கத் தொலைபேசி பயன்பாடொன்றின் அறிமுகம்.**

## 2.2.5 வெளிநாட்டு வேலைவாய்ப்பு துறையின் கட்டுப்பாடு மற்றும் கட்டுப்பாடு

**அட்டவணை 2.4** அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள தொழில் முகவரகங்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், வேலைவாய்ப்புக் கட்டளைகள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான பதிவு

| விபரம் | | உண்மையான எண். |
|---|---|---|
| வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களுக்கு அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் | வழங்கப்பட்ட புதிய அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை | 111 |
| | புதுப்பிக்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை (வருடாந்த புதுப்பித்தல்) | 1,269 |
| இலங்கையர்களை ஆட்சேர்ப்பு செய்கின்ற வெளிநாடுகளிலுள்ள தொழில் முகவரகங்கள் மற்றும் கம்பனிகளை பதிவுசெய்தல் / புதுப்பித்தல் | பதிவுசெய்யப்பட்ட/அனுமதிப் பத்திரம் புதுப்பிக்கப்பட்ட உபசரிக்கின்ற நாடுகளில் உள்ள தொழில் முகவரகங்கள் / கம்பனிகளின் எண்ணிக்கை | 1,324 |
| வெளிநாட்டு தொழில் முகவரகங்களால் சமர்ப்பிக்கப்பட்ட வெளி நாட்டு வேலை வாய்ப்புக் கட்டளைகள் மற்றும் அறிவித்தல்களுக்கு அங்கீகாரம் வழங்குதல் | அங்கீகரிக்கப்பட்ட தொழில் கட்டளைகளின் எண்ணிக்கை | 3,146 |
| | அங்கீகரிக்கப்பட்ட அறிவித்தல்களின் எண்ணிக்கை | 1,004 |
| வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான பதிவு | வெளிநாட்டு தொழில் வெற்றிடங்களுக்கு இலங்கையர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு, அவர்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கு அனுமதிப்பத்திரம் பெற்ற வெளிநாட்டு தொழில் முகவரகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிகளின் எண்ணிக்கை | 122,146 |
| | தனியான வழிமுறைகளினூடாக வெளிநாட்டு வேலைக்காக வெளியேறுவதற்கு பதிவு செய்துள்ள புலம்பெயர் வேலையாளர்களின் எண்ணிக்கை | 101,713 |
| | தென் கொரியா, யப்பான் மற்றும் இஸ்ரேலில் வேலைவாய்ப்புக்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் மூலம் பதிவு செய்து புலம்பெயர்ந்த வேலையாளர்களின் எண்ணிக்கை | 6,998 |
| | தனியான வழிமுறைகள் ஊடாக வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்கு செல்வதற்காக பதிவைப் புதுப்பித்துள்ள புலம்பெயர் வேலையாளர்களின் எண்ணிக்கை | 72,449 |
| | வெளிநாடுகளில் தூதரகப் பணியகங்கள் ஊடாக பதிவு செய்துள்ள புலம்பெயர் வேலையாளர்களின் எண்ணிக்கை | 3,470 |
| | வெளிநாடுகளில் தூதரகப் பணியகங்கள் ஊடாக பதிவைப் புதுப்பித்துள்ள புலம்பெயர் வேலையாளர்களின் எண்ணிக்கை | 6,068 |

| அட்டவணை 2.5 | அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள தொழில் முகவரகங்கள் / அனுமதிப்பத்திரம் அற்ற ஏனைய தரப்புகளுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல் |
|---|---|

| விடயம் | உண்மையான எண்ணிக்கை |
|---|---|
| நடத்தப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை | 1,336 |
| பெறப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 921 |
| சட்டவிரோத ஆட்சேர்ப்பு தொடர்பில் வெற்றிகரமான சோதனைகளின் எண்ணிக்கை | 25 |
| சட்டங்களை மீறியதற்காக அனுமதிப்பத்திரம் பெற்ற / அனுமதிப்பத்திரம் பெறாத தரப்பினருக்கு எதிராக நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 137 |
| சட்டங்களை மீறியதற்காக அனுமதிப்பத்திரம் பெற்ற / அனுமதிப் பத்திரம் பெறாத தரப்பினருக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட வழக்கு களுக்காக நீதிமன்றங்களில் / தொழில் நியாய சபைகளில் ஆஜரான தடவைகளின் எண்ணிக்கை | 4,121 |

மூலம் : விசேட புலன்விசாரணைகள் பிரிவு /சட்டப் பிரிவு - இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

**2.2.6 வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையை முன்னேற்றுதல்**

**1. இணையவழி தொழில் வங்கியில் பதிவுசெய்தல்**

வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை எதிர்பார்க்கின்ற மக்கள், இலங்கை வெளிநாட்டு வெலைவாய்ப்புப் பணியகத்தால் பராமரிக்கப்படும் இணையவழி தொழில் வங்கியில் பதிவு செய்வதற்கான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஆர்வலர்கள் பணியகத்தின் இணையத்தளம் அல்லது தலைமை அலுவலகம் அல்லது மாகாண அலுவலகங்கள் ஊடாக தனிப்பட்ட முறையில் பதிவு செய்ய முடியும். அத்தகைய பதிவானது, தொழில் வங்கியில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து அதிகபட்சம் இரண்டு ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும். வெளிநாட்டு வேலைவாய்ப்பு களுக்கு பொருத்தமான விண்ணப்பதாரர்களைக் கண்டறிவதற்கு வெளிநாட்டு பணியாளர்களுக்கும், அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவரகங்களுக்கும் தொழில் வங்கி உதவுகின்றது.

| அட்டவணை 2.6 | தொழில் வங்கியூடாக வேலைவாய்ப்பு ஆர்வலர்களைப் பதிவுசெய்தல் - இ.வெ.வே.ப. |
|---|---|

| விபரம் | எண்ணிக்கை |
|---|---|
| பதிவுசெய்யப்பட்ட வேலைவாய்ப்பு ஆர்வலர்களின் எண். | 41,568 |
| பதிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளிலிருந்து தொழிலுக்காக புலம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை | 5,881 |

மூலம்: மனிதவலு வழங்கல் ரூ சேவைநாடுநர் பிரிவு - இ.வெ.வே.ப.

**2. இலங்கையர்களிடையே வெளிநாட்டு வேலைவாய்ப்பை ஊக்குவிப்பதற்காக அனுமதிப்பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரகங்களின் பங்கேற்புடன் மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.**

**3. பிரதேச செயலகங்கள், தொழிற்பயிற்சி நிறுவகங்கள், தொழிநுட்பக் கல்லூரிகள் ஆகியவற்றின் உதவியுடன் வெளிநாட்டு வேலை வாய்ப்பு விண்ணப்பதாரர்கள் மற்றும் தொழிற்பயிற்சி பெறுபவர்கள் மத்தியில் வெளிநாட்டு வேலைக்கான சட்டரீதியானதும், பாதுகாப்பானதுமான புலம் பெயர்வு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் பணியகத்தின் பிராந்திய அலுவலகங்களால் நடத்தப்படுகின்றது.**

**4. பல்வேறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்புத் திட்டங்களில் இனங்காணப்பட்ட வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஆர்வலர்களுக்கு அனுமதிப்பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஆட்சேர்ப்பு மூலம் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான வாய்ப்புகளை எளிதாக்குவதற்கு பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் நேர்காணல்களை நடத்துவதற்கு ஒழுங்கமைத்தலானது பணியகத்தின் பிராந்திய அலுவலகங்களால் நடத்தப்படுகின்றது.**

5. **வேலையாளர்களுக்கு அதிக வருமானம் கிடைக்க வாய்ப்புள்ள நாடுகளுடன் (உ.ம். தென் கொரியா, யப்பான், இஸ்ரேல்) வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கான உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுதல்.**

6. **அனுமதிப்பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரகங்களால் வெளிநாட்டு வேலை தேடுபவர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடைமுறையையும், வேலையாளர்களின் சொந்த வழிகள் மூலம் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான பதிவினையும் எளிதாக்குதல்.**

7. **குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்துடன் இணைந்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், புலம்பெயர் வேலையாளர்கள் தாமதமின்றி கடவுச்சீட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக இலங்கை குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்தில் விசேட கருமபீடமொன்றைத் தாபித்துள்ளது.**

### 2.2.7 பொருளாதார அபிவிருத்திக்கான தொழிற்றுறை அமைதியைப் பாதுகாத்தல்

தொழில் திணைக்களத்தின் தொலைநோக்கு, சர்வதேசரீதியில் போட்டித்தன்மையான பொருளாதாரத் திற்கு நிலையான தொழிற்றுறை அமைதியுடனான நாடொன்று என்பதாகையால், தொழிற்றுறை அமைதியைப் பேணுவது இத்திணைக்களத்தின் அடிப்படையானதும், மிகவும் முக்கியமானதுமான செயற்பாடாகும்.

இந்த நோக்கத்திற்காக, திணைக்களமானது, பல முக்கிய செயற்பாடுகளை, அதாவது தொழில்வழங்குநர் களுக்கும் பணியாளர்களுக்கும் இடையிலான உரையாடலைப் பேணுதல், வேலைத்தளங்களை பரிசோதித்தல், நியதிச்சட்ட உரிமைகள் மறுப்பு தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல், தொழில்துறை பிணக்குகளைத் தீர்த்தல், விபத்துக்கள் அற்ற வேலைத் தளங்களை உறுதி செய்தல் மற்றும் வேலையாளர்களின் தொழில்சார் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு சட்ட நடவடிக்கை எடுத்தல் போன்றவற்றை ஆற்றுகின்றது..

1. **தொழில்வழங்குநர் மற்றும் பணியாளர் ஆகிய இரு தரப்பினர்களுக்கும் இடையில் கலந்துரையாடலைப் பேணுதல்**

நாடளாவியரீதியில் காணப்படுகின்ற பகுதியளவிலான அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக, தொழில் திணைக்களம் இரு தரப்பினருக்கும், அதாவது அந்த துறைகளின் தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களுக்கும், அதேபோன்று தங்களது கடமைகளை நிறைவேற்றுவதில் தொழில் சட்டங்கள் குறித்து விழிப்புடன் இருக்க வேண்டியவர்களுக்கு அரச துறை நிறுவனங்களின் அலுவலர்களுக்கும், விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்து நடத்தியிருந்தது.


**அட்டவணை 2.7** 2022.01.01 இலிருந்து 2022.12.31 வரை நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் - தொழில் திணைக்களம்

| நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றிய பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சமூக கலந்துரையாடலை ஊக்குவித்தல் | மனித வள அபிவிருத்தி பிரிவி னால் நடாத்தப்பட்ட சமூக கலந்துரையாடல் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் | 167 | 9489 |
| | மாவட்ட மற்றும் உபதொழில் அலுவல கங்களினால் நடத்தப்பட்ட சமூக கலந்துரையாடல் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் | 51 | 1904 |
| | வலய சமூகத் தள நிகழ்ச்சித் திட்டங்கள்(சூம் தொழில்நுட்பம் ஊடாக) | 11 | 1100 (දළ වශයෙන්) |
| தொழிலற்றுறைப் பாதுகாப்பை ஊக்குவித்தல் | மாவட்ட தொழிற்சாலைப் பரிசோதனை பொறியியல் அலுவல கங்களால் பிராந்தியரீதியாக நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் விரிவுரைகள் | 107 | 4370 |

| | | | |
|---|---|---|---|
| தொழில்சார் சுகாதாரத்தை ஊக்குவித்தல் | தொழில் வழங்குனர்கள், பணியாளர்கள் மற்றும் மருத்துவ மாணவர் களுக்காக தொழில்சார் சுகாதாரப் பிரிவினால் நடத்தப்பட்ட விழிப் புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் | 289 | 2380 |
| பெண்கள் மற்றும் இளம் நபர்களின் தொழில்சார் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் சிறுவர் தொழிலை இல்லா தொழித்தல். | தனியார் துறையின் பெண் பணியாளர் களுக்காக பெண்கள் மற்றும் சிறுவர் களுக்கு ஏற்புடைய தான தொழில் சட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | 16 | 716 |
| | சிறுவர் தொழில் தொடர்பில் நன்னடத்தை அலுவலர்கள், தொழில் அலுவலர்கள் மற்றும் பொலிஸ் அலுவலர்களை ஒருங்கிணைக்கும் நிகழ்ச்சித்திட்டம் | 04 | 180 |
| | அனைத்து பிரதேச செயலகங்களின் சிறுவர் அபிவிருத்தி அலுவலர்கள், சிறுவர் சங்கங்களின் அலுவலர்கள், சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர் கள், பாடசாலை சிறுவர் பாதுகாப்பு குழுக்களின் அலுவலர்கள் மற்றும் கிராம அலுவலர்களுக்கான விழிப் புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | 52 | 2600 |
| **மொத்தம்** | | **697** | **21,639** |

## 2. தொழில் பரிசோதனைகளை நடத்துதல்

2022 ஆம் ஆண்டில் தொழில் திணைக்கள அலுவலர்களால் நடத்தப்பட்ட பரிசோதனைகளின் விபரங்கள் வேலைத்தளத்தில் வேலையாளர்களது நியதிச்சட்ட உரிமைகளைப் பாதுகாப்பதற்காக விதிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகள் பின்பற்றப்படுகின்றனவா என்பதை பரிசோதிப்பதற்கும், தொழில் தருநர்களுக்கும் பணியாளர்களுக்கும் இடையே குறைகளை நிவர்த்தி செய்வதனுடனும், சுமூகமான உறவை ஏற்படுத்துவதற்கும் வழிவகுக்கும் வகையில் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதனுடனும் இணங்குபவை பின்வருமாறு.





**விளக்கப்படம் 2.1** 2022 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட தொழில் பரிசோதனைகள்

மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களின் தொழில் அலுவலர்களால் பரிசோதனைகள் நடத்தப் பட்டு, அவற்றின் தரத்தை செம்மைப்படுத்துவதனைத் தொடர்ந்து, தொழில் பரிசோதனை அறிக்கைகள் மூலம் வழங்கப்பட்ட விரிவான தகவல்களைப் பெறுகின்ற நோக்கத்துடன், தொழில் பரிசோதனை அறிக்கைகளைத் திருத்துவதற்கு 2022 ஆம் ஆண்டில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. திருத்தப்பட்ட படிவங்களை போதுமான எண்ணிக்கையில் அச்சிட்டதன் பின்னர், அவை 2023 ஆம் ஆண்டிலிருந்து பரிசோதனை நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**3. நியதிச்சட்ட உரித்துக்களை மீறுவது தொடர்பான முறையீடுகளைத் தீர்த்தல் மற்றும் தொழிற் றுறைப் பிணக்குகளைத் தீர்த்தல்**


நியதிச்சட்ட சட்டங்களை மீறுதல் மற்றும் தொழிற்றுறை அமைதிக்கு சாத்தியமான மீறல்கள் தொடர்பாக பணியாளர்களால் அல்லது தொழிற்சங்கங்களால் தலைமை அலுவலகம், மாவட்ட அலுவலகங்கள் மற்றும் உப அலுவலகங்களில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. இதேபோன்று, முறைப்பாடுகள் மீதான விசாரணையில் அல்லது திணைக்களத்தின் ஒரு பிரிவினால் அல்லது தொழில் அலுவலகத்தால் நடத்தப்பட்ட நிறுவனரீ தியான விசாரணையொன்றில் திருப்தியடையாத நபர்களால் முறையான விசாரணைக்காக தொழில் ஆணையாளர் அதிபதியிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் தேவைகளுக்கு ஏற்ப மீள்விசாரணை செய்யப்பட்டிருந்தது.

**2018 முதல் 2022 வரை நியதிச்சட்ட உரித்துக்களை மீறியமை தொடர்பான முறைப்பாடுகளைப் பெறுதலும் தீர்த்தலும்**




வரைவு 2.3 — 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை தொழிற்றுறைப் பிணக்குகள் மற்றும் நியதிச்சட்ட மீறுதல் தொடர்பான முறைப்பாடுகளை பெறுதல் மற்றும் அவற்றுக்குத் தீர்வுகள்

குறிப்பு - பிராந்திய தொழில் அலுவலகங்களின் 2022 ஆம் ஆண்டின் முறைப்பாடுகள் பற்றிய தரவு தற்போதும் பெறப்பட்டு வருவதுடன், இதுவரை பெறப்பட்ட தகவல்களின்படி வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு காலப்பகுதியில் பெறப்பட்ட முறைப்பாடுகளுக்கான தீர்வுகள் மற்றும் முந்தைய ஆண்டுகளில் தீர்க்கப்படாத முறைப்பாடுகளுக்கான தீர்வுகள் ஆகியவை இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.




**வரைபு 2.4** முதல் 2022 வரை தொழிற்றுறைப் பிணக்குகள் பற்றி முறைப்பாடுகளைப் பெறுதல் மற்றும் அதற்கான தீர்வுகளைக் காணுதல்.


குறிப்பு - பிராந்திய தொழில் அலுவலகங்களின் 2022 ஆம் ஆண்டுக்கான முறைப்பாடுகள் பற்றிய தரவு தற்போதும் பெறப்பட்டு வருவதுடன், இதுவரை பெறப்பட்ட தகவல்களின்படி வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு காலப்பகுதியில் பெறப்பட்ட மேன்முறையீடுகளுக்கான தீர்வுகள் மற்றும் கடந்த ஆண்டுகளில் தீர்க்கப்படாத மேன்முறையீடுகளுக்கான தீர்வுகள் ஆகியவை இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேலேயுள்ள வரைபடங்களிலிருந்து காணக்கிடைக்கின்றவாறு, தொழிற்றுறை பிணக்குகள் மற்றும் நியதிச்சட்ட உரிமைகளை மீறுதல் தொடர்பாக பெறப்படுகின்ற முறைப்பாடுகள் குறைவடைந்து செல்கின்ற போக்குக் காணப்படுகிறது. தொழில் திணைக்களம் நடத்துகின்ற பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களில் தரம் மற்றும் அளவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதன் காரணமாக தொழில் தருநர்களுக்கும் பணியாளர்களுக்கும் இடையிலான சமூகக் கலந்துரையாடலை ஊக்குவித்ததன் விளைவாக பிணக்குகள் மற்றும் முறைப்பாடுகளின் எண்ணிக்கையில் சரிவு ஏற்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

தொழில் திணைக்களத்தால் பெறப்பட்ட முறைப்பாடுகள் / மேன்முறையீடுகளை ஒழுங்குபடுத்துவதற்கும் தீர்ப்பனவுகளை விரைவுபடுத்துவதற்கும், தொழில் முறைப்பாடுகள் / பிணக்குகளைத் தீர்ப்பதில் நிலையான செயற்பாட்டு நடவடிக்கைமுறை (ஸ்ஓபீ) உருவாக்கப்பட்டிருந்தது. 2021 நவம்பர் மாதம் முதல், அனைத்து தொழில் அலுவலகங்களும் முறைப்பாடுகளை விரைவாகத் தீர்ப்பதற்காக இதைப் பயன்படுத்துகின்றன.

### 4. பணிப் பகிஷ்கரிப்பினைத் தீர்ப்பதற்கான தலையீடுகள்

பணிப் பகிஷ்கரிப்பு செயற்பாட்டிற்கு வழிவகுக்கக்கூடிய நிலைமையொன்று காணப்பட்டால், திணைக்கள அலுவலகள் நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், பணிப் பகிஷ்கரிப்பு ஆரம்பிக்கப்பட்டால், பிணக்கினைத் தீர்ப்பதற்குத் தேவையான தலையீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2022 முதல் காலாண்டில் அறிவிக்கப்பட்ட பணிப் பகிஷ்கரிப்புகளின் விபரங்கள் பின்வருமாறு.




**விளக்கப்படம் 2.2** 2022 ஆம் அண்டில் அறிவிக்கப்பட்ட பணிப் பகி'கரிப்பு பற்றிய விபரங்கள்

### 5. கூட்டு ஒப்பந்தங்களுக்கு தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகிய இரு தரப்பினரையும் ஊக்குவித்தல்

தொழில் பிணக்குகளைத் தீர்ப்பதற்கான வழிமுறையாக கூட்டு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதன் ஊடாக, தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகிய இருவருக்கும் நிரந்தரத் தீர்வு வழங்கப்படு கின்றது என்பதுடன், அவை தொழில் சட்டங்கள் மூலம் வழங்கப்படும் உரிமைகள் மற்றும் சலுகைகளை விட அதிக சலுகைகளைப் பெறுவதற்கு பணியாளர்களுக்கு உதவுகின்றன. அதேபோன்று, கூட்டு ஒப்பந்தங்களை நோக்கி நகர்வதற்கு சமூகக் கலந்துரையாடல் மூலம் அதிக உந்துதலை ஏற்படுத்துவதற்கு திணைக்களம் முயற்சிக்கின்றது. இதன்படி, 2022 ஆம் ஆண்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 23 கூட்டு ஒப்பந்தங்கள் உட்பட 2022.12.31 இல் நடைமுறையிலுள்ள மொத்த கூட்டு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை 194 ஆகும்.

### 6. நடுத்தீர்ப்புச் செயற்பாடுகைகளை நடத்துதல்

தொழில் அலுவலகங்களின் தலையீட்டால் அல்லது திணைக்களத்தின் கைத்தொழில் உறவுகள் பிரிவின் நேரடி தலையீட்டினால் தீர்க்க முடியாத பிணக்குகள், தொழில் நீதிமன்றமொன்றில் நடுத்தீர்ப்புக்கு பரிந்துரைக்கப்படுவதுடன், 2022 ஆம் ஆண்டில் 93 கட்டாய நடுத்தீர்ப்புக்கு அனுப்பப்பட்டு, 93 இற்கும் தீர்ப்புகள் வழங்கப்பட்டிருந்தன.

### 7. தொழிற்சங்கங்களின் பதிவு

அனைத்து தொழிற்சங்கங்களும் தொழில் திணைக்களத்தின் தொழிற்சங்க பதிவாளரிடம் பதிவு செய்வது கட்டாயமானதாகும். இதன்படி, 2022 ஆம் ஆண்டில் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட மொத்த தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 143 ஆகும். 2022.12.31 இல் உள்ள செல்லுபடியாகும் தொழிற்சங்கங்களின் மொத்த எண்ணிக்கை 205ஆகும்.

## 2.2.8 தொழில் நியமங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல்

தனியார் துறையால் பணிக்கமர்த்தப்பட்ட வேலையாளர்களின் நலன்புரி மற்றும் பணிப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக கொள்கைகள், நியமங்கள் மற்றும் பணி நிபந்தனைகளை வகுத்தமைத்து, இற்றைப்படுத்துதல் மற்றும் சட்டப் பயனுறுதியை வழங்குதல் ஆகியவை திணைக்களத்தின் முதன்மையான செயன்முறையாகும். இதன்படி, 2022 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.


### 1. சம்பளச் சபைகளின் குறைந்தபட்ச வேதனங்களை இற்றைப்படுத்துதல்

**அட்டவணை 2.8** சம்பளச் சபைகளின் குறைந்தபட்ச வேதனங்களை இற்றைப்படுத்துதல்


| தொ. இ | சம்பளச் சபை | முதலாவது கூட்டம் நடைபெற்றது | கருத்துக்கள் கோரப்பட்டன | சம்பளங்கள் திருத்தப்பட்டுள்ளன |
|---|---|---|---|---|
| 01. | கட்டிடத் தொழில் | | ✓ | |
| 02. | வெதுப்பகத் தொழில் | | | ✓ |
| 03. | மெத்தைகள் மற்றும் தும்பு ஏற்றுமதி தொழில் | | | ✓ |
| 04. | ஆடைத் தயாரிப்புத் தொழில் | | ✓ | |
| 05. | பின்னலாடை தயாரிக்கும் தொழில் | ✓ | | |
| 06. | பீங்கான் பொருட்கள் உற்பத்தி தொழில் | | ✓ | |
| 07. | கல் மற்றும் கல் உடைத்தல் தொழில் | | ✓ | |
| 08. | கறுவாத் தொழில் | | ✓ | |
| 09. | மோட்டார் வாகனப் போக்குவரத்து தொழில் | | ✓ | |
| 10. | சினிமாத் துறை | | ✓ | |
| 11. | கடற்படை போக்குவரத்து மற்றும் தொழிற்பாட்டு சேவைகள் | | | ✓ |

| | | |
|---|---|---|
| 12. | பற்றிக் கைத்தொழில் | ✓ |
| 13. | முற்பள்ளித்தொழிற்றுறை | ✓ |
| 14. | பீடி தயாரிக்கும் தொழில் | ✓ |
| 15. | தோட்ட வளர்ப்பு, பழ விவசாயம் மற்றும் ஏற்றுமதி தொழில் | ✓ |


**2. 05 நாள் வேலை வாரத்திற்கு அனுமதி வழங்குதல்**





**3. கூட்டு ஒப்பந்தங்களின் சட்டசெல்லுபடியாந் தன்மையைப் பரிசீலித்தல்**





**4. சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டம் மற்றும் கடைகள் மற்றும் அலுவலக பணியாளர் சட்டம் ஆகியவற்றின் கீழ் வேதனத்திலிருந்து கழிப்பனவுகளுக்கு மேற்கொள்ளப்பட்ட கோரிக்கை களுக்கு அனுமதி வழங்குதல்**



5. **சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டம் மற்றும் கடைகள் மற்றும் அலுவலக பணியாளர் சட்டம் ஆகியவற்றின் கீழ் தண்டப்பணங்களை உருவாக்குவதற்காக பெறப்பட்ட கோரிக்கைகளுக்கு அங்கிகாரம் வழங்குதல்**




6. **சட்டவாக்கங்கள் பற்றி மக்களாலும் பல்வேறு நிறுவகங்களாலும் மேற்கொள்ள விசாரணை களுக்கு விளக்கங்கள் மற்றும் உரைபெயர்ப்புகளை வழங்குதல்**




### 2.2.9 பணியாளரின் தொழில்சார் பாதுகாப்பிற்கான சிரிய பணிச்சூழலை உறுதி செய்தல்

மின்சாரம், வெப்பம், காற்றழுத்தம், அதிக ஒளி அல்லது ஒலி காரணமாக தொழிற்சாலைகளில் பணியாற்றும் வேலையாளர்களுக்கு உடல் காயங்கள் மற்றும் மரணம் கூட ஏற்படும் அபாயம் காணப்படுவதுடன், இத்தகைய விபத்துகளைக் குறைப்பது திணைக்களத்தின் முதன்மையான பொறுப்புகளிலொன்றாகும்.

இலங்கையின் தொழிற்சாலைகளில் பணிபுரியும் வேலையாளர்களின் தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலன்புரி தொடர்பான பிரதான சட்டம், 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டமும், அதன் கீழ் நிறைவேற்றப்பட்ட ஒழுங்குவிதிகளும் ஆகும்.

விபத்து அற்ற பணிச்சூழலை உறுதி செய்வதற்காக தொழில் திணைக்களம் பிரதானமாக பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

**2022.01.01 முதல் 2022.12.31 வரை நடத்தப்பட்ட செயற்பாடுகள்**




2022 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட புதிய தொழிற்சாலைகளின் எண்ணிக்கை = 881

2022.12. 31 இல் தொழிற்பாட்டிலுள்ள தொழிற்சாலைகளின் மாத்த எண்ணிக்கை = 33,056

(2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில், 1261 தொழிற்சாலைகள் புதிய ஒழுங்குவிதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்துடன்,2022.12.31 இல் புதிய ஒழுங்கு விதிகளின் கீழ் பதிவுசெய்யப்பட்ட தொழிற்சாலை களின் மொத்த எண்ணிக்கை 3222)




பரிசோதிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்ட வரைபடங்களின் எண்ணிக்கை = 275



பரிசோதிக்கப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை = 3,274



அறிக்கையிடப்பட்ட மரணத்தை ஏற்படுத்தும் விபத்தும் விபத்துக்களின் எண்ணிக்கை = 66

அறிக்கையிடப்பட்ட மரணத்தை ஏற்படுத்தாத விபத்துக்கள் = 1260



அதிக ஆபத்துள்ள இயந்திர பரிசோதனைகள் / ஒழுங்குபடுத்தல்களின் எண்ணிக்கை = 11,669

### 2.2.10 பணியாளரின் தொழில்சார் ஆரோக்கியத்தை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

வேலைத்தளங்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, வேலைத்தளத்தில் உடல்நலப் பிரச்சினைகள் அல்லது விபத்துகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்பதை அறிவியல் முறைகளைப் பயன்படுத்தி மதிப்பீடு செய்வதும், அத்தகைய விபத்துகளைத் தடுக்க எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் தொழிலாளர் துறையின் பொறுப்பாகும். அதன்படி, பின்வரும் செயற்பாடுகள் 2022.01. 01 ஆம் திகதி முதல் 2022.12.31 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருந்தன.

| விளக்கப்படம் 2.3 | பணியாளரின் தொழில்சார் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் |
|---|---|

சூழல் அளவீடுகளின் எண்ணிக்கை 148

சூழல் அளவீடுகளின் கீ ழ் பரிசோதிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை
ஒளி அடர்த்தி = 2620
ஒலிஇரைச்சல் 520

காற்று வேகம் = 435
WBGT சுட்டி, "Dry bulb" வெப்பம், "Wet bulb" வெப்பம், "Globe" 425 ஒவ்வொன்றும் வெப்பநிலை மற்றும் ஈரப்பதத்திற்கானது

பௌதீக பரிசோதனைகளின் எண்ணிக்கை = 1413



தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார ஆய்வு களின் எண்ணிக்கை = 170

720 ஊசே.நி பயனாளிகள் மற்றும் 240 ஊ.ந.பொ.நி பயனாளிகள் தொடர்பாக மருத்துவ சபையால் முடிவுகள் வழங்கப்பட்டுள்ளன.

ஊசே.நி மற்றும் ஊ.ந.பொ.நி கோரல் அலுகூல விண்ணப்பதாரிகளுக்கு மருத்துவ சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் எண்ணிக்கை = 30


### 2.2.11 பணிக்கமர்த்தப்பட்டுள்ள பெண்கள் மற்றும் இளைஞர்களின் தொழில்சார் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் சிறுவர் தொழிலை இல்லாதொழித்தல்

வேலைத்தளங்களில் பெண்களை உள்ளடக்குகின்ற தொழில் சட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் பெண்களின் உழைப்பின் உற்பத்திப் பங்களிப்பை ஊக்குவிப்பதும், அவற்றை காலத்திற்குகாலம் மீளாய்வு செய்வதன் மூலம் அத்தகைய சட்டங்களுக்குத் தேவையான திருத்தங்களை பரிந்துரைப்பதும் திணைக்களத்தின் முதன்மைப் பொறுப்புகளிலொன்றாகும்.

இதேபோன்று, அனைத்து அக்கறைதாரர்களின் பங்களிப்புடன் சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பது, 18 வயதுக்குக் குறைந்த சிறுவர்களுக்கு பிரயோகிக்கத்தக்க தொழில் சட்டத்தை அமுல்படுத்துவது மற்றும் நிலவுகின்ற சமூகப் பிரச்சினைகளுக்கு பொருத்தமாக காணப்படுகின்ற சட்டங்களில் திருத்தங்களை பரிந்துரைப்பது ஆகியவை இத்திணைக்களத்தின் பிரதான பொறுப்புகளாகும்.


இதன்படி, 2022.01.01 ஆம் திகதியிலிருந்து 2022.12.31 ஆம் திகதி வரை பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**1. சிறுவர் தொழில் பற்றிய முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்துதல்**





**விளக்கப்படம் 2.4** சிறுவர் தொழில் பற்றிய முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள்

**2. இரவில் பெண்களைப் பணிக்கமர்த்துவதற்கு ஏற்புடையதான சேவை நிபந்தனைகளை மீறுவது தொடர்பான முறைப்பாடுகளை விசாரித்தல்**




**விளக்கப்படம் 2.5** இரவில் பெண்களைப் பணிக்கமர்த்துவதுதொடர்பான நிபந்தனைகளை மீறுவது பற்றிய முறைப்பாடு களை விசாரித்தல்

### 3. இரவில் பெண்களைப் பணிக்கமர்த்துவதற்கான அனுமதியை வழங்குதல்




### 4. கம்பஹா, களுத்துறை, பதுளை மற்றும் காலி மாவட்டங்களை சிறுவர் தொழிலற்ற வலயங்களாகப் பிரகடனப்படுத்துவதற்காக அத்தகைய மாவட்டங்களுக்கு குழுக்களை நியமித்து, செயல் திட்டங்களை தயாரித்தல்.

கம்பஹா, பதுளை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களுக்கான பிரதேச குழுக் கூட்டங்களை நடாத்தியதன் பின்னர், செயற்றிட்டத்தை உருவாக்குவது தொடர்பான ஆரம்ப கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருந்தன. அதன் பின்னர், பிரதேச செயலகங்கள் ஊடாக மாவட்டத்திலுள்ள 18 வயதுக்குக் குறைந்த சிறுவர்கள் பற்றிய தகவல் சேகரிப்பு 2 ஆவது கட்டமாக மேற்கொள்ளப்பட்டது. மேலும், காலி, பதுளை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களுக்கான சிறுவர் அபிவிருத்தித் திட்டங்களின் உருவாக்கம் இறுதி வடிவத்தைப் பெற்றுள்ளது. இதன்படி, காலி மாவட்டத்திலுள்ள 22 பிரதேச செயலகங்களில் 17 பிரதேச செயலகங்களிலும், பதுளை மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலகங்களிலும் மற்றும் கம்பஹா மாவட்டத்திலுள்ள 13 பிரதேச செயலகங்களில் 03 பிரதேச செயலகங்களிலும் செயலமர்வுகள் நடத்தப்பட்டிருந்தன. களுத்துறை மாவட்டத்திற்கான பூர்வாங்க கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளதுடன், அதற்கேற்ப எதிர்கால செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

### 5. சிறுவர் தொழில் அல்லது சிறுவர் தொழிலால் பாதிக்கப்படக்கூடிய குடும்ப சிறுவர்களின் பாதுகாப்பை மேம்படுத்துதல்

தொழில் திணைக்களத்தினால் மலிபன் பிஸ்கட் உற்பத்தியாளர்களுடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில், எதிர்கால பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கத்துடன், நாடு முழுவதிலிமிருந்து சிறுவர் தொழில் அல்லது சிறுவர் தொழிலால் பாதிக்கப்படக்கூடிய சிறுவர்களைக் கொண்ட தெரிவு செய்யப்பட்ட 50 குடும்பங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக "நிதாஹஸ் ரண் தருவோ நிதியம்" ஊடாக தேவையான உபகரணங்களையும், நிதி உதவிகளையும் வழங்கும் திட்டத்தின் ஆரம்ப கட்டமாக வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது.

**அட்டவணை 2.9** பொருளாதார சிரமங்கள் காணப்படுகின்ற தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களின் சிறுவர்களுக்கு அனுகூலங்களை வழங்குதல்

| நிகழ்ச்சித்திட்டம் | நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட மாவட்டம் | அனுகூலங்கள் வழங்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| முதலாவது | மாத்தறை | 4 குடும்பங்கள் |
| இரண்டாவது | அனுராதபுரம்<br>பொலநறுவை | 6 குடும்பங்கள் |
| மூன்றாவது | கொழும்பு | 4 குடும்பங்கள் |
| நான்காவது | குருணாகல் | 5 குடும்பங்கள் |
| ஐந்தாவது | இரத்தினபுரி | 2 குடும்பங்கள் |

இதன்படி, 2022 ஆம் ஆண்டில் சிறுவர் தொழில் அல்லது சிறுவர் தொழிலால் பாதிக்கப்படக்கூடிய பாடசாலை செல்கின்ற வயதுடைய 21 சிறுவர்களுக்கு அனுகூலங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், அவர்களின் கல்வியின் தொடர்ச்சியை உறுதி செய்தது, 21 சிறுவர்களுக்கு மாதாந்தம் 7,500 ஷரூபா பெறுமதியுடைய புலமைப்பரிசில் வழங்கப்பட்டிருந்தது.

### 6. சர்வதேச சிறுவர் தின நிகழ்வு

சர்வதேச சிறுவர் தின நிகழ்ச்சி மலிபன் கோல்ட் மேரி "நிதஹஸ் ரன் தருவோ" நிதியத்தின ஒத்துழைப்புடன் 2022.10.06 ஆம் திகதி தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் கௌரவ மனுஷ நாணாயக்கார அவர்களின் தலைமையில் 'மெஹேவர பியெச' கட்டிடத்தின் புதிய கேட்போர் கூடத்தில் நடைபெற்றிருந்தது.

இதேபோன்று சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த 28 சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் / புத்தகத் தொகுதிகள் வழங்கும் நிகழ்ச்சி 2022.10.07 ஆம் திகதி மேல் மாகாண பிரதித் தொழில் ஆணையாளர் அலுவலகத்தில் இடம்பெற்றிருந்தது. கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த 25 சிறுவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் / புத்தகத் தொகுதிகள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம், 2022.10.08 ஆம் திகதி கம்பஹா மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றிருந்தது.

இதற்கு மேலதிமாக, "மலரின் மொட்டுக்கள் கண்ணீர் சிந்தும்போது – சிறுவர் தொழிலை இல்லாதொழிப்போம்" என்ற தலைப்பிலான சிங்கள மொழி ஆவணப்படம் தேசிய தொலைக்காட்சியில் 2022.10.02 ஆம் திகதி இரவு 7.30 மணிக்கு ஒளிபரப்பப்பட்டது. தமிழ் மொழி நிகழ்ச்சி 2022.10.01 ஆம் திகதி மதியம் 2.00 மணிக்கு 'ஐ' அலைவரிசையில் ஒளிபரப்பப்பட்டிருந்தது.

### 2.2.12 பணியாளர்களின் சமூகப் பாதுகாப்பு

1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதியமானது, நாட்டின் பகுதியளவிலான அரச மற்றும் தனியார் துறைகளிலுள்ள தொழிலாளர்களுக்கு பாதுகாப்பான ஓய்வூதியத்தை உறுதி செய்யும் கொள்கை நோக்கத்துடன் தொழில் திணைக்களத்தால் நிருவகிக்கப்படுகின்றது. இந்த நிதியமானது, தொழில் திணைக்களத்தால் நிருவகிக்கப்படுவதுடன், மத்திய வங்கியின் நாணய சபை அதன் நிதி முகாமைத்துவத்திற்கு பொறுப்பாக வுள்ளது. காலத்திற்கு காலம் திருத்தங்களுக்கு அமைவான இந்தச் சட்டத்தின் கீழ் ஆற்றப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் கடமைகள் பின்வருமாறு.

- ஊழியர் சேமலாப நிதியத்தில் நிறுவனங்களைப் பதிவுசெய்தல்
- ஊழியர் சேமலாப நிதியத்தில் உறுப்பினர்களைப் பதிவுசெய்தல்
- உதவுதொகைகளைச் செலுத்தத் தவறிய தொழில்தருநர்களிடமிருந்து உதவு தொகைகளை அறவிடுதல்
- பணியாளர்களுக்கான அனுகூலக் செலுத்துவதற்கான கொடுப்பனவுக் கட்டளைகளை வழங்குதல்
- அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதியத்தைக் கண்காணித்தல்.


### 1. ஊழியர் சேமலாப நிதியத்தில் நிறுவனங்கள் மற்றும் உறுப்பினர்களைப் பதிவுசெய்தல்

ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் கீழுள்ள அனைத்து தொழில்வழங்குநர்களும் நிதியத்தில் பதிவு செய்தல் வேண்டும். ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் கீழுள்ள அனைத்து பணியாளர்களுக்கும் உறுப்பினர் எண்களை ஒதுக்குவது மற்றும் அவர்களை நிதியத்தில் பதிவு செய்வது தொழில்வழங்குநரின் பொறுப்பாகும் என்பதுடன், இச்செயன்முறை தொழில் திணைக்களத்தால் கண்காணிக்கப்படுகின்றது.

இதன்படி, பணியாளர்களைப் பதிவுசெய்வதற்காக திணைக்களத்திற்கு வருகை தரும் வாடிக்கையாளர் களின் செயற்பாடுகளை எளிதாக்கும் வகையில், ஊழியர் சேமலாப நிதிய விண்ணப்பங்களை ஒப்படைப்பதற்கான நேரத்தை ஒதுக்குவதற்காக தொழில் திணைக்களம், 2022.09.01 ஆம் திகதி யிலிருந்து ஊழியர் சேமலாப நிதிய சந்திக்கும் முகாமைத்துவ முறைமையை அறிமுகப்படுத்தியிருந்தது

| வரைபடம் 2.5 | ஊழியர் சேமலாப நிதிய சந்திக்கும் முகாமைத்துவ முறைமை ஊடாக ஊழியர் சேமலாப நிதிய விண்ணப்பங்களைக் கையளிப்பதற்கான சந்திப்புகளுக்காக முன்பதிவு செய்த பணியாளர்களின் எண்ணிக்கை – செப்டெம்பர் மாதத்திலிருந்து. |
|---|---|


**புதிய முறைமையூடாக சந்திப்புக்களுக்கு நேரம் ஒதுக்கிய தடவைகள்**




## 2. ஊழியர் சேமலாப நிதிய அனுகூலக் கொடுப்பனவு

2022.01.01 முதல் 2022.12.31 வரை ஊழியர் சேமலாப நிதியத்தின் அனுகூலங்களைப் பெற்ற மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை 166,110 என்பதுடன், அதன் வகைப்பாடு பின்வரும் வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ளது.


**2022.01.01 முதல் 2022.12.31 வரை ஊழியர் சேமலாப நிதியத்தின் அனுகூலங்களைப் பெற்ற மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை**




| வரைபடம் 2.6 | 2022.01.01 முதல் 2022.12.31 வரை ஊழியர் சேமலாப நிதியத்தின் அனுகூலங்களைப் பெற்ற மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|

ஊழியர் சேமலாப நிதிய அனுகூல கொடுப்பனவு செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக கடந்த ஆறு ஆண்டுகளில் தொழில் திணைக்களத்தால் கைக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பின்னணியில், பணியாளர்களுக்கான ஊழியர் சேமலாப நிதிய கொடுப்பனவு செயற்பாடுகளிலும், 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் காலாண்டின் இறுதியில் 43% இலி ருந்து 66மு அதிகரிப்பினைப் பதிவுசெய்து, 14 நாட்களுக்குள் செலுத்தப்பட்ட நபர்களின் சதவீதத்திலும் படிப்படியான முன்னேற்றம் தெளிவாகக் காட்டுகின்றது. இதன்படி, அனுகூல கொடுப்பனவினைச் செலுத்துவதில் வினைத்திறன் அதிகரித்துள்ளது.

**ஊழியர் சேமலாப நிதிய அனுகூல கொடுப்பனவுக்காக எடுக்கப்பட்டநேரம்- 2017 முதல் 2022 வரை**





**வரைபடம் 2.7** ஊழியர் சேமலாப நிதிய அனுகூல கொடுப்பனவுக்காக எடுக்கப்பட்டநேரம்- 2017 முதல் மூன்றாம் காலாண்டு வரை

**உதவுதொகைகளை செலுத்தத் தவறிய தொழில்வழங்குநர்களுக்கு அறிவித்தல்களை அனுப்புதல்**

நிர்ணயித்தவாறு உதவுதொகைகளைச் செலுத்தத் தவறிய தொழில்வழங்குநர்களுக்கு முதல் அறிவித்தல்கள் மற்றும் சிவப்பு அறிவித்தல்கள் வழங்கப்படுவதுடன், அத்தகைய அறிவிப்புகளுக்கு முறையாக பதிலளிக்கப்படவில்லை என்றால், சட்டரீதியான நடவடிக்கை எடுக்கவும், மேலதிக அறவீட்டுடன் உதவுதொகைகளை அறவிடுவதற்கும் அவற்றை கணக்கில் வைப்பிலிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

**அட்டவணை 2.10** 2022.01.01 முதல் 2022.09.30 வரை அறிவித்தல்கள் அனுப்பப்பட்டது பற்றிய விபரம்

| அனுப்பப்பட்ட முதலாவது அறிவித்தல்களின் எண்ணிக்கை | முதலாவது அறிவித்தல் மூலம் அறவிடப்பட்ட தொகை | அனுப்பப்பட்ட சிவப்பு அறிவித்தல்க-ளின் எண்ணிக்கை | சிவப்பு அறிவித்தல் மூலம் அறவிடப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 10,428 | மில்லியன் ஷரூபா 7614 | 8,409 | மில்லியன் ஷரூபா 5230 |
|  |  |  |  |

### 3. அங்கீகரிக்கப்பட்டசேமலாப நிதியங்களை மேற்பார்வையிடுதல்

2022.12.31 இலுள்ளவாறு ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதியத்துடன் கூடிய 117 நிறுவனங்கள் மொத்தமாக 88,627 உறுப்பினர்களுடன் உள்ளன.

### 2.2.13 வேலையாளர்களின் தொழில்சார் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டப் பாதுகாப்பு


திணைக்களம் வேலையாளர்களின் தொழில்சார் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பல சட்டங்களைச் செயற்படுத்துகின்றது. இதன்படி, தொழில் திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய அத்தகைய சட்டவாக்க ஏற்பாடுகள் ஒத்த முறையில் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்வதற்காக, அத்தகைய மீறல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதன் மூலம் வேலையாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன.

இதன்படி, 2022.01.01 முதல் 2022.1231 வரை திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.11** நீதிமன்றங்களால் நீதிசார் நடவடிக்கைமுறைச் செயலாற்றுகை - 2022.01.01 முதல் 2022.1231

| நீதிமன்றம் | 2022 ஆம் ஆண்டுக்கு முன்கொணரப்பட்ட மீதி | 2022 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 2022.12.31 இல் நிறைவுசெய்யப்பட்ட வழக்குகள் |
|---|---|---|---|
| மேல் நீதிமன்றம் | 119 | 17 | 31 |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | 252 | 107 | 35 |
| உயர் நீதிமன்றம் | 110 | 27 | 44 |
| மாவட்ட நீதிமன்றங்கள்/ வர்த்தக உயர் நீதிமன்றங்கள் | 216 | 11 | 20 |
| நீதவான் நீதிமன்றங்கள் | 98 | 82 | 74 |

**2022.01.01 முதல் 2022.12.31 வரை நீதவான் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளும், அகற்றப்பட்டவையும்**




**வரைபடம் 2.8** நீதவான் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட மற்றும் அகற்றப்பட்ட வழக்குகள்

குறிப்பு - பிராந்திய தொழில் அலுவலகங்களின் 2022 ஆம் ஆண்டுக்கான முறைப்பாடுகள் பற்றிய தரவு தற்போதும் பெறப்பட்டு வருகின்றது, இதுவரை பெறப்பட்ட தகவல்களின்படி வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது.

கீழ்க்கண்டவாறு சட்டங்களைத் திருத்துவதற்கும், புதிய சட்டங்களை உருவாக்குவதற்கும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுக்கு உதவுதல்.

1. புதிய சட்டமூலங்களை மற்றும் ஒழுங்குவிதிகளை வரைதல்
2. தற்போதைய சட்ட நிலைமையை பகுப்பாய்வு செய்தல் மற்றும் உரிய அவதானிப்புகளை மேற்கொள்ளுதல்.
3. தற்போதைய நிலைமையை மற்றும் தேவைப்பாட்டினை ஆய்வு செய்து புதிய சட்டங்களை வகுத்தமைப்பதற்கான அவதானிப்புகளை வழங்குதல்.

### 2.2.14 சேவை வினைத்திறனையும், வேலையாளர்களின் நலன்புரியினையும் செம்மைப் படுத்துவதற்காக தொழில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற விசேட செயற்பாடுகள்

**1. தொழில்தருநரின் / பணியாளரின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக முறையான பாதுகாப்புக் குழுக்களை தாபித்தல்**

தொழில்தருநர் / பணியாளர்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக முறையான பாதுகாப்புக் குழுக்களை தாபித்தல் - தொழில் திணைக்களத்தின் ஒருங்கிணைப்புடன், பாதுகாப்பு மற்றும் சுகாதார குழுக்களை ஊக்குவிப்பதன் மூலம் தொழில்தருநர் / பணியாளர்களின் பாதுகாப்பை மேம்படுத்து வதற்கான முன்னோடித் திட்டம் அவிசாவளை முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் ஆரம்பிக்கப்பட்டது. வலயத்தில் முறையான பாதுகாப்புக் குழுக்களின்மை அவதானிக்கப்பட்டதால், ஒவ்வொரு தொழிற்சாலையையும் ஆய்வு செய்து பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டன. 2022.12.31 இலுள்ளவாறு, முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திலுள்ள 2 தொழிற்சாலைகளில் முறையான பாதுகாப்புக் குழுக்கள் நிறுவப் பட்டிருந்தன.

இதேபோன்று, 2022.10.11 ஆம் திகதி நடைபெற்ற தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் குறித்த தேசிய நிகழ்ச்சியில், இணையவழி மூலம் பாதுகாப்புக் குழுக்களை அமைப்பதற்காக கௌரவ தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரின் தலைமையின் கீழ் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதன்படி, 2021.12.31 இலுள்ளவாறு, நாடளாவியரீதியில் 241 பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**2. சர்வதேச நிறுவனங்கள் மற்றும் நாடுகளுடன் தொழில் துறை தொடர்பான உறவுகளை மேம்படுத்துதல்**

- “தொழில் பரிசோதனைக்கான கள வழிகாட்டி“ என்பதன் திருத்தம் மற்றும் “புதிய திருத்தங்களை கட்டிணைக்கின்ற தொழில் சட்டங்களின் தொகுப்பை மீள்பதிப்பு செய்வதற்கு சர்வதேசதொழில் தாபனத்தின் தலைமையின் கீழ் இரண்டு குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தன. இதன்படி, ‘தொழில் சட்டங்களின் தொகுப்பு’ என்ற ஆங்கில மொழி வரைவு தயாரிக்கப்பட்டு, இத்தொகுப்பினை அச்சிடுவதற்கு நிதி உதவி கோரி சர்வதேச தொழில் தாபனத்தின் கோரிக்கை விடப்பட்டுள்ளது. “தொழில் பரிசோதனைக்கான கள வழிகாட்டி“ என்ற ஆங்கில மொழி வரைவு, சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, சர்வதேச தொழில் தாபனத்தின் அனுசரணையில் பதிப்பிடப்படுகின்றன.

- சர்வதேச தொழில் தாபனத்தின் நிதி அனுசரணையின் கீழ், தொழில் திணைக்களத்தின் பிரதான சேவைகளில் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தலா 30 குறும்படங்கள் தயாரிக்கப்பட்டு திணைக்களத்தின் உத்தியோக பூர்வ ‘யூ ரியூப்’ அலைவரிசையில் வெளியிடப்பட்டிருந்தன. இந்த வீடியோக்கள், ஊழியர் செமலாப நிதியம், தொழில்துறை உறவுகளின் சட்டக் கட்டமைப்பு, பெண்கள், சிறுவர்கள் மற்றும் இளம் நபர்களின் வேலைவாய்ப்பு தொடர்பான சட்ட விடயங்கள் மற்றும் தொழில் நியமங்கள் பற்றிய தகவல்களை வழங்குகின்றன.

- 2022 ஆம் ஆண்டு யூலை 19 ஆம் திகதி அமெரிக்க அரச திணைக்களத்தால் வெளியிடப்பட்ட அமெரிக்காவின் 2022 ஆம் ஆண்டின் ஆட்கடத்தல் (TIP) அறிக்கையைத் தயாரிப்பதில் அரச துறை அக்கறைதாரராக தேவையான தகவல் களை வழங்குவதற்காக திணைக்களம் தனது உதவியை வழங்கியிருந்தது. சொல்லப்பட்ட அறிக்கையின்படி, 2021 ஆம் ஆண்டில் கண்காணிப்புப் பட்டியல் நிலை நாடுகளின் பட்டியலில் நிலை 2 இல் தொடர்ந்தும் நிலைத்திருந்த இலங்கை 2022 ஆம் ஆண்டில் 2 ஆம் நிலை நாடுகளின் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது. இது இலங்கையின் மட்டத்தில் முன்னேற்றத்தைக் குறிக்கின்றது. மேற்படி அறிக்கையை உருவாக்குவதற்கு

உறுதுணையாக இருந்த நிறுவனங்களைப் பாராட்டும் வகையில் பாதுகாப்பு அமைச்சு ஏற்பாடு செய்திருந்த வைபவத்தில், தேவையான தகவல்களை வழங்கி தொழில் திணைக்களம் வழங்கிய ஆதரவு பாராட்டப்பட்டிருந்தது.

- ரஷ்ய கலாசார நிலையத்தின் நிதி உதவியுடன் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் இறந்த பத்து பணியாளர்களின் பத்து பள்ளி மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டிருந்தன. இந்த நிகழ்ச்சித்திட்டம் ரஷ்ய கூட்டமைப்பின் நிதியுதவியுடன் எதிர்வரும் ஆண்டுகளிலும் தொடருமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**3. காகிதப் பயன்பாட்டைக் குறைக்கின்ற அதே வேளையில் சிக்கனமான, விரைவான அகத் தொடர்பாடல் முறையாக 'ஸ்லாக் அப்ளிகே'ன்' என்பதனை ஊக்குவித்தல்**

காகிதப் பாவனையைக் குறைக்கின்ற, தபால் செலவைக் குறைக்கின்ற அதேவேளையில் திணைக்களம் பற்றிய உள் விழிப்புணர்வை திணைக்கள அதிகாரிகளுக்கு விரைவாக எடுத்துச் செல்வதற்கு கடமை தொடர்பான தொடர்பாடல்களின் உள் மாதிரியொன்றாக 'ஸ்லாக் அப்ளிகே" என்பதனைப் பயன்படுத்தும் அரச துறை நிறுவனங்களில் திணைக்களம் முன்னணியில் உள்ளது.

**2.2.15 தொழில் திணைக்களத்தின் அகத் தொடர்பாடல் செயற்பாடுகள்**

**1. வெளியீடுகள்**

தொழில் துறை தொடர்பான விழிப்புணர்வினை மக்களிடையே ஏற்படுத்துவதற்காகதொழில் திணைக்களத்தால் பின்வரும் வெளியீடுகள் வெளியிடப்பட்டிருந்தன.

- 'பிரைம் வேர்க்' சஞ்சிகை

தொழில் சட்டங்கள் பற்றிய அறிவை விரிவுபடுத்துதல், தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களிடையே கலந்துரையாடலை விருத்திசெய்வதன் மூலம் தொழிற்றுறை அமைதியை பேணும் குறிக்கோளுடன் 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த இதழின் மூன்றாவது தொகுதி 2022 யூன் மாதத்தில் "மனப்பான்மை" என்ற கருப்பொருளின் கீழ் வெளியிடப்பட்டு, திணைக்களத்தின் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யக் கூடியவகையில் இ-வடிவில் பதிவிடப்பட்டிருந்தது.

- பணிபுரிந்த மணித்தியாலங்களின் எண்ணிக்கை மற்றும் தொழில் செலவு பற்றிய கணக்கெடுப்பு

இந்த கணக்கெடுப்பின் மூலம், நாட்டின் அபிவிருத்தி உத்திகளை வகுப்பதற்குத் தேவையான தரவுகள், தொழில் செலவு, பணி புரிந்த மணித்தியாலங்களின் எண்ணிக்கை மற்றும் பொதுவான வருவாய் ஆகியவற்றின் அடிப்படையில் பெறப்படுகின்றன. இது, அரச மற்றும் தனியார் துறைகளில் முடிவெடுப்பதனையும், திட்டங்களை உருவாக்குவதனையும் இயலச்செய்து, தொழில்வழங்குநர்கள் மற்றும் பணியாளர்களின் முன்னேற்றத்திற்காக வடிவமைக்கப்பட்ட திட்டங்களுக்குத் தேவையான தகவல்களை வழங்கச் செய்கின்றது. 2020 ஆம் ஆண்டு தொடர்பில், பணி புரிந்த மணித்தியாலங்களின் எண்ணிக்கை மற்றும் தொழில் செலவு குறித்த அறிக்கை 2022ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

- தொழில் புள்ளிவிபர வருடாந்த அறிக்கை - 2020 - 2021

தொழிலாளர் துறையுடன் தொடர்புபட்ட கொள்கை திட்டங்களை வகுத்தமைத்து செயற்படுத்து வதற்கும், தரவு பயனாளிகளுக்குத் தேவையான தரவுகளை வழங்குவதற்கும் தேவையான தரவுகளை வெளியிடும் நோக்கத்துடன், 2020 மற்றும் 2021 தொழில் புள்ளிவிபரங்கள் அறிக்கை தொகுக்கப்பட்டு, வெளியிடப்பட்டது.

**2. திணைக்களத்தின் உத்தியோகபூர்வ சமூ ஊடகச் செயற்பாடுகள்**

பொதுமக்களுக்கு இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குவதற்காக, திணைக்களம் உத்தியோகபூர்வ யூடியூப் அலைவரிசை, முகப் புத்தகப் பக்கம் மற்றும் ஒரு 'ரூவீட்டர் கணக்கு ஆகியவற்றைப் பராமரித்து வருகின்றது.

| | |
|---|---|
| YouTube Channel | Subscribers: 859 / Number of Videos included : 118 |
| Facebook Page | Followers: 2,900 |
| Twitter | Followers: 56 |

## 3. திணைக்களத்தின் இணையத்தளத்தைப் இற்றைப்படுத்துதல்

மக்கள் சேவைகளை, பல்வேறு சட்டங்களை, கட்டளைகளை மற்றும் தொழில்வழங்குநர்களால் கவனம் செலுத்த வேண்டிய சம்பளச் சபைகளின் முடிபுகள் அகியவற்றைப் பெறுவதற்குத் தேவையான மாதிரி விண்ணப்பங்கள் மற்றும் படிவங்கள் போன்ற அத்தகைய ஆவணங்கள் புதிய சேவைகள், ஊடக வெ ளியீடுகள், விலைமனுக்களுக்கான கோரல் போன்றவை திணைக்களத்தின் றறற.டயடிழரசனநிவ.பழஎ.டம என்ற இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதுடன், தேவையான போது, தகவல்கள் இணையத்தில் பதிவேற்றம் செய்யப்படுகின்றபோது கிரம்மாக இற்றைப்படுத்தப்படுகின்றது. திணைக்களத்திற்கான புதிய இணையத்தளத்தை வடிவமைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டிறுதிக்குள், இணையத்தளத்தின் பிரதான வார்ப்புருவின் மேலோட்டப் பார்வை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

## 4. ஊடக நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களில் திணைக்களத்தின் பங்கேற்பு

- ”களத்திரய கதைபாஹா” கலந்துரையாடல் நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக 2022.07.11 ஆம் திகதி சரண தொலைக்காட்சியால் ஒளிபரப்பப்பட்ட ”தொழில் வழங்குநர்கள் மற்றும் பணியாளர்களின் நிருவாகப் பொறுப்புகளும் கடமைகளும்” என்ற தலைப்பின் கீழ் தொழில் ஆணையாளர் அதிபதி பங்குபற்றியிருந்தார்.

- சர்வதேச சிறுவர் தொழில் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு 2022.06.12 ஆம் திகதி ஒளிபரப்பப்பட்ட சிறுவர் தொழில் ”இரிதா அயுபோவான்” நிகழ்ச்சியில் தொழில் ஆணையாளர் அதிபதி மற்றும் தொழில் ஆணையாளர் (பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகாரங்கள்) ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

- ஊடக அமைச்சு, தேசிய அபிவிருத்தி ஊடக நிலையத்தின் “இசிடிசி“ குழுமம் மற்றும் அரசாங்க தகவல் திணைக்களம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்த “இசிடிசி பெரமக“ கலந்துரையாடல் நிகழ்ச்சித்திட்டத்தின் 2022.09.26 ஆம் திகதிய பதிப்பு ”அரச சேவைகளை ஒழுங்குபடுத்துவதற்கு தொழில் திணைக்களத்தினால் எடுக்கப்பட்ட புதிய நடவடிக்கைகள்” என்ற தொனிப்பொருளில் தொழில் ஆணையாளர் (கைத்தொழில் பாதுகாப்பு) மற்றும் தொழில் ஆணையாளர் (ஊ.சே.நி) ஆகியோரின் பங்கேற்புடன் நடைபெற்றிருந்தது.

## 5. முக்கிய நினைவு தினங்களை நடத்துதல்

- சர்வதேச மகளிர் தினம் 2022

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தொழில் திணைக்களத்தினால் மகளிர் தினக் கொண்டாட்டம் கட்டுநாயக்க ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தின் 100 பெண் பணியாளர்களுக்காக 2022.03.09 ஆம் திகதி தொழில் அமைச்சர் தலைமையில் முதலீட்டுச் சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றிருந்தது.

- சர்வதேச சிறுவர் தினக் கொண்டாட்டம்

சர்வதேச சிறுவர் தின நிகழ்ச்சி ‘மலிபன் கோல்ட் மாறி’ நிறுவனத்தின் “நிதஹசே ரன் தருவோ” நிதியத்துடன் இணைந்து 2022.10.06 ஆம் திகதி கௌரவ தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனு‘ நாணாயக்கார அவர்களின் தலைமையில் ‘மெஹேவர பியெச கட்டடத்தின் புதிய கேட்போர் கூடத்தில் நடைபெற்றிருந்தது.




புகைப்படங்களின் 2.3 நீகு நியமன மேலாண்மை அமைப்பு தொடங்குதல்

இதேபோன்று சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த 28 சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் / புத்தகப் தொகுதிகள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் 2022.10.07 ஆம் திகதி மேல் மாகாண பிரதி தொழில் ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்றிருந்தது. கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த 25 சிறுவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் / புத்தகத் தொகுப்புகள் 2022.10.08 ஆம் திகதி கம்பஹா மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றிருந்தது.

மேலும், “மலர் மொட்டுக்கள் கண்ணீர் சிந்தும்போது – சிறுவர் தொழிலை இல்லதொழிப்போம்” என்ற சிங்கள ஊடக ஆவணப்படம் 2022.10.02 ஆம் திகதி தேசிய தொலைக்காட்சியில் இரவு 7.30 மணிக்கு ஒளிபரப்பப்பட்டிருந்ததுடன், தமிழ் மொழி நிகழ்ச்சி 2022.10.01 ஆம் திகதி மதியம் 2.00 மணிக்கு ‘I’ அலைவரிசையில் ஒளிபரப்பப்பட்டுருந்தது.

- சிறுவர் தொழிலுக்கு எதிரான உலக தினம்

சிறுவர் தொழிலுக்கு எதிரான உலக தினத்தை முன்னிட்டு, மொபிடெல், டயலொக், ஹட்ச் மற்றும் எயர்டெல் மொபைல் தொடர்பாடல் வலையமைப்புகளின் பாவனையாளர்களுக்கு 2022.06.12 ஆம் திகதி சிங்கள, ஆங்கில மற்றும் தமிழ் மொழிகளில் சிறுவர் தொழிலை இல்லதொழிப்பது குறித்த குறுஞ்செய்தி அனுப்பப்பட்டது.

இதற்கு மேலதிகமாக, சிறுவர் தொழிலுக்கு எதிரான செயற்பாட்டின் ஒரு பகுதியாக 2022.06.12 ஆம் திகதி தேசிய தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட “இரிதா ஆயுபோவான்” நிகழ்ச்சி மூலம் சிறுவர் தொழில் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

### 2.2.16 தொழில் வழிகாட்டல், தொழில் சந்தை தகவல் மற்றும் அரச வேலைவாய்ப்பு சேவை செயற்பாடுகள் ஆகியவற்றைப் பராமரித்தல்

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களமானது, நாட்டில் மனிதவள அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவத்துக்கு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது.

#### 1. தொழில் வழிகாட்டல் செயற்பாடுகள்

நாட்டின் மனித வளங்களின் மொத்த ஆற்றலை நாட்டின் வளர்ச்சிக்கு பயனுறுதிவாய்ந்ததாகவும், வினைத்திறனுடனும் வழிநடத்துகின்ற அதேவேளை, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் சந்தையுடன் ஒத்திசைந்து மனித வளத்தை உருவாக்கும் குறிக்கோளுடன், தொழில் வழிகாட்டல் சேவைகள் வழங்கப்படுகின்றன. இந்த தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு, உளவியல் சோதனைகள், திறன் சோதனைகள், எழுத்து மற்றும் செய்முறை சோதனைகள், நேர்காணல்கள், பல்வேறு அவதானிப்பு சோதனைகள் போன்ற சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள், தனிப்பட்ட ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல், அடிப்படை விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், பயிற்சிசெயலமர்வுகள் மற்றும் நடைமுறை செயற்பாடுகள் மூலம் தொழில் வழிகாட்டுதல் திட்டங்கள் தனித்தனியாகவும், கூட்டாகவும் மற்றும் குழுக்களாகவும் நடத்தப்படுகின்றன.

**அட்டவணை 2.12** தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்- மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்

| | நிகழ்ச்சித்திட்டம் / செயற்பாடு | 2022.01.01 முதல் 2021.12.31 வரை | | பயனாளிகள் |
|---|---|---|---|---|
| | | பௌதீகம் | நிதி (‘ரூபா மில்.) | |
| தொழில் சந்தைக்கு மிகவும் பொருத்தமான வேலைவாய்ப்பு திறன்களுடன் மனித வளங்களை உருவாக்குதல் | | | | |
| 1. | மாவட்ட தொழில் சந்தையை நடத்துதல் | 80 | | 22,723 |
| | மாவட்ட வாழ்க்கைத் தொழில் சந்தையை நடத்துதல் | 43 | 2.500 | 4,845 |
| | தொழில்முனைவோர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் | 33 | | 1156 |
| | விளம்பர வீடியோக்களை உருவாக்குதல் | 4 | 0.217 | |

| | | | | |
|---|---|---|---|---|
| தொழில் சந்தை தகவல் ஆய்வு | | | | |
| 2. | கள ஆய்வினை நடத்துதல் | 20 | 0.197 | |
| | தொழில் சந்தை தகவல் பற்றிய தெளி வூட்டல் அமர்வுகளை நடத்துதல் | 10 | 0.092 | |
| | கள ஆய்வின் அடிப்படையில் வீடியொக்களை வழங்குதல் | 100% | 0.307 | |
| | மாவட்ட மனித வள விபரங்களை உருவாக்குதல் | 100% | 0.870 ஷரூபா மாவட்டங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது | |
| தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகளை நடத்துதல் | | | | |
| 3. | தரம் 9 மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகளை நடத்துதல் | 1869 | 2.077 | 55,100 |
| | க.பொ.த (சா.த) தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டம் | 2406 | | 60,506 |
| | க.பொ.த (உ.த) தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டம் | 1151 | | 31,365 |
| | கையேடுகளை அச்சிடுதல் மற்றும் தன்னியக்க நுண்ணறி உற்றறிதல் பண்பாற்றல் சோதனைகள் | 100% | 0.822 | |
| | வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தை நடத்துதல் | 1 | 0.995 | |
| | ‘லைவ் ரோக்’ நிகழ்ச்சித்திட்டம் | 70 | | 23,688 |
| அரச வேலைவாய்ப்பு சேவை | | | | |
| 4. | வேலை தேடுபவர்களின் பதிவு | | | 59,758 |
| | வேலை வெற்றிடம் பற்றிய பதிவு | | | 33,885 |
| | வேலை தேடுபவர்களை வேலைகளுக்குப் பரிந்துரைத்தல் | | | 37,151 |
| | வேலை தேடுபவர்களுக்கு வேலை வழங்குதல | | | 9,606 |
| 5. | சுறுசுறுப்பான தொழில் சந்தைக்காக உள்ளக முகாமைத்துவ தகவல் முறைமை யைத் தாபித்தல் | 80% | 0.641 | |
| 6. | கைநூல்களைப் பதிப்பிடுதல் | 100% | 0.257 | 300 |
| 7. | வட மாகாணத்தில் தொழில் வாய்ப்பு மற்றும் சுயதொழில் வழிகாட்டல் ஊடாக பொருளாதார நடவடிக்கைகளில் அங்கவீனமுற்றவர்களின் பங்களிப்பை மேம்படுத்து வதற்கு உதவுதல் (சதொ.தா) | | | |
| 8. | தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்துவதற்காக 04 குறும் வீடியோக்களைத் தயாரித்து, அவற்றை திணைக்கள இணையத்தளத்தில் பதிவேற்றுதல். | | | |
| 9. | தொழில் வழிகாட்டல் அலுவலர்களின் நன்மைக்காக கைநுல்களை தயாரித்தல் | | | |

## 2. 2022 ஆம் ஆண்டில் நிதி ஏற்பாடுகளின்றி நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்காக கணக்கிடப் பட்ட நிதிப் பெறுமதியை மாற்றுதல்

**அட்டவணை 2.13** நிதி ஏற்பாடுகளின்றி நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் – மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்

| தொ. இல. | நிகழ்ச்சித்திட்டம் | நிதி ஏற்பாடு (அ) வின் கீழ் நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டிருந்தால் பயனாளி ஒருவருக்கான செலவு | பயனாளிகளின் எண்ணிக்கை (ஆ) | கணிக்கப்பட்ட நிதிப் பெறுமதி (அ) * (ஆ) |
|---|---|---|---|---|
| 01 | பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் | 200.00 | 15,346 | 3,069,200.00 |
| 02 | சுயதொழில் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம் | 200.00 | 3346 | 669,200.00 |
| 03 | தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 200.00 | 286 | 57,200.00 |
| 04 | பிரதேச தொழில் சந்தை | 200.00 | 3912 | 782,400.00 |
| 05 | ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 200.00 | 933 | 186,600.00 |
| 06 | வேலை தேடுபவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 200.00 | 6,724 | 1,344,800.00 |
| 07 | தொழில்முனைவோர் மேம்பாட்டு ஒரு நாள் நிகழ்ச்சித்திட்டம் | 200.00 | 1,840 | 368,000.00 |
| 08 | ‘லைவ் ரோக்’ நிகழ்ச்சித்திட்டம் | 200.00 | 23,688 | 4,737,600.00 |
| **மொத்தம்** | | | **56075** | **11,215,000.00** |

## 3. தொழிலாளர் சந்தை தகவல்

**அட்டவணை 2.14** தொழிலாளர் சந்தை தகவல் வெளியீடு

| தொ. இல. | நிகழ்ச்சித்திட்டம் | பௌதீக முன்னேற்றம | நிதி முன்னேற்றம் | நிதிப் பொழிப்பு (‘ரூபா) | |
|---|---|---|---|---|---|
| | | | | ஒதுக்கப்பட்ட தொகை (‘ரூபா) | செலவுற்ற தொகை (‘ரூபா) |
| 01 | பல்வேறு தலைப்புகளில் 20 கள ஆய்வுகளைத் தயாரித்தலும், இணையத் தளத்தில் பதிவேற்றுதலும் | 100% | 98.5% | 200,000 | 197,019 |
| 02 | பல்வேறு துறைகளில் உள்ள வேலை வாய்ப்புக்களை இனங்காணுவதற்காக பல்வேறு தொழில் வல்லுனர்களின் பங்களிப்புடன் 10 தெளிவூட்டல் அமர்வுகளை நடாத்துதல் மற்றும் அவற்றின் அறிக்கைகள் குறித்து உரிய நிறுவனங்களுக்கு விளக்கமளித்தலும், அதனை திணைக்கள இணையத் தளத்தில் வெளியிடுதலும். | 100% | 85.47% | 108,000 | 92,310 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 03 | கள ஆய்வு அறிக்கைகள் மற்றும் தெளிவூட்டல் அமர்வு அறிக்கைகளின் அடிப்படையில் 10வீடியோக்களை உதயாரித்தல் | 100% | 61.51% | 500,000 | 307,528 |



**புகைப்படங்களின் 2.4** கொரிய மனிதவள அமைச்சகத்தின் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்

## 4. மனித வளங்கள் முகாமைத்துவம் மற்றும் சர்வதேச உறவுகள்

**அட்டவணை 2.15** மனித வளங்கள் முகாமைத்துவம் மற்றும் சர்வதேச உறவுகள்–மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்

| பிரிவு | நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் |
|---|---|
| தேசிய மனித வளங்கள் மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கைச் செயற்பாடுகள் | 1. தேசிய மனித வளங்கள் மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கையை அமுல்படுத்துவதற்காக உரிய துறைகளுடன் ஒருங்கிணைத்தல்.<br>2. இலங்கை பெண்களின் தொழில் பங்களிப்பை அதிகரிக்கும் நோக்கில் தினப் பராமரிப்பு சேவையை மிகவும் நம்பகத் தன்மையுடனும் வினைத்திறனுடனும் கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்தி நடவடிக்கை எவ்வாறு எடுக்கப்படுதல் வேண்டும் என்பது குறித்து பெண்கள், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சுடன் கலந்துரையாடல்களை நடாத்துதல்.<br>3. திணைக்கள இணையதளத்தில் கட்டுரைகளை வெளியிடுதல்<br>4. திணைக்கள அலுவலர்களுக்கு கடமைகளை நிறைவேற்றும் கலப்பு முறையை அறிமுகப்படுத்துதல். |

| | |
|---|---|
| | 5. அரச சேவையின் பதவியணியை மறுசீரமைப்பதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கு அரச அலுவலர்களை அனுப்புவதற்கான வேலைத்திட்டத்திற்கு பொருத்தமான கருத்துருப் பத்திரத்தை சமர்ப்பித்தல்.<br><br>6. இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சினால் நடத்தப்பட்ட 'இளைஞர்கள் புதுமைப்படுத்தலாம்' போட்டியின் தொழில்நுட்ப மற்றும் கண்டுபிடிப்புத் துறை தொடர்பான விண்ணப்பங்களை மதிப்பிடுவதற்கான 'இளைஞர்கள் புதுமைப்படுத்தலாம்' மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர் பிரதிநிதிகளின் தலைமையில் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் |
| தகவல் தொழில்நுட்பச் செயற்பாடுகள் | 1. தொழில் சந்தை தகவல் முறைமையொன்றுனை தாபிப்பதற்காக கொரியா அரசாங்கத்தால் செயல்படுத்தப்படுகின்ற திட்டத்திற்கு தொழில்நுட்ப உதவி வழங்கப்பட்டது. (ஆவணப்படுத்தல் வேலை மற்றும் கூட்டங்களில் பங்குபற்றுதல்)<br><br>2. அமைச்சினால் வடிவமைக்கப்படுகின்ற முகாமைத் தகவல் முறைமை தொடர்பில் தகவல்களை வழங்குதல் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். |
| | 3. திணைக்களத்தின் இணையத்தளம் தொடர்பான இற்றைப்படுத்தல் செயற்பாடுகளை மேற்கொள்வது மற்றும் ப்ரோகான்ஸ் லிமிடெட் (டெவலப்பர்) மற்றும் ஐஊவுயு உடன் இணைந்து பணியாற்றுதல்.<br><br>4. மாவட்ட அலுவலர்களிடமிருந்து வேலை தேடுபவர்களின் இற்றைப்படுத்தப்பட்ட விபரங்களைப் பெறுவதற்கு இணையவழி முறையை உருவாக்குதல்.<br><br>5. இணையவழி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான வசதிகளை வழங்குதல்<br><br>6. திணைக்களத்தின் சமூக ஊடகங்களை மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல். (முகநூல், லைன்ட் இன் மற்றும் ரிக்டோக்).<br><br>7. திணைக்களத்தின் 80மூ கடமைகளை இணையவழி மூலம் மேற் கொண்டு வளாகத்தை தாள்கள் அற்றதாக்குதல்.<br><br>8. திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் ஒவ்வொரு பிரிவினால் பயன்படுத்தப்பட்ட டெஸ்க்டொப் கணினிகள் மற்றும் மடிக் கணினிகளின் மற்றும் மனித வள முகாமைத்துவம் மற்றும் சர்வதேச உறவுகள் பிரிவின் பொருட்களின் பார்-கோடிங் செயன்முறையை நடத்துதல். |

| | | |
|---|---|---|
| சர்வதேச உறவுகள் | 1. | மாற்றுத்திறனாளி சமூகத்தினருக்கு வேலை வாய்ப்பு வழங்கும் வேலைத்திட்டத்தின் வட மாகாண பூர்வாங்க வைபவத்தை நடத்துவது சர்வதேசதொழில் தாபனத்தின் ஒருங்கிணைப்புடன் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. |
| | 2. | தகவல் மூலோபாயத் திட்டமிடல் முறைமை (ISP) 2022, தொழில் சந்தை தகவல் முறைமையை நிறுவும் நோக்கத்துடன் கொரிய குடியரசின் KEIS நிறுவனத்துடன் இணைந்து நிறுவப்பட்டது. |
| | 3. | வேலைவாய்ப்புக் கொள்கையை செயற்பாட்டு நிலைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், வேலைவாய்ப்புக் கொள்கை மற்றும் மனிதவள அபிவிருத்தி ஆகியவற்றுடன் தொடர்புடைய உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் தற்போதுள்ள உறவுகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. |
| | 4. | கோவிட்-19 தொற்றினால் பாதிக்கப்பட்ட இலங்கை புலம்பெயர் வேலையாளர்களை உற்பத்தி வேலைகளை நோக்கி வழிநடத்தவும், திறன் மேம்பாட்டு பயிற்சிகள் மற்றும் மென் திறன்களை மேம்படுத்தவும் அவர்களை தொழில் முனைவோர்களாக மாற்றவும், சர்வதேச தொழில் தாபனத்துடன் இணைந்து ஒரு திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் கீழ், 9763 பயனாளிகளுக்குத் தேவையான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு, தேசிய இளைஞர் படை மற்றும் சிறிய அளவிலான வணிக மேம்பாட்டுப் பிரிவு ஆகியவற்றுடன் இணைந்து செயற்படுத்தப்பட்ட இந்தத் திட்டம் 2022.10.31 ஆம் திகதி நிறைவடைந்தருந்தது. |
| | 5. | சர்வதேச தொழில் தாபனத்துடன் இணைந்து கிழக்கு மாகாணத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதற்கான நிகழ்ச்சித் திட்டத்திற்கு வெளி நிறுவன அலுவலர்களின் இயலளவை கட்டியெழுப்புவதற்கும், மற்றும் மாற்றுத்திறனாளிகளை 2022 டிசெம்பர் முதல் 2023 மார்ச் வரை வேலைவாய்ப்பை நோக்கி வழிநடத்தும் திட்டத்தை நடத்துவதற்குத் திட்டமிடுதல். |
| | 6. | யப்பானில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு வெற்றிடங்களை இலக்காகக் கொண்டு தேசிய இளைஞர் படையுடன் இணைந்து யப்பானிய மொழிப் பயிற்சித் திட்டங்களை ஆரம்பித்தல். |

## 5. அரச தொழில் வாய்ப்புச் சேவை

- எதிர்கால பணியாளர்கள் மற்றும் வேலை வாய்ப்புகள் காணப்படுகின்ற நிறுவனங்களை பதிவு செய்து, அத்தகைய நிறுவனங்களில் காணப்படுகின்ற வெற்றிடங்களுக்குப் பொருத்தமான, வேலை தேடுபவர்களுக்கு பொருத்தமான வேலைவாய்ப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- தலைமை அலுவலகத்தின் அரச வேலைவாய்ப்புப் பிரிவினால் 'வாட்ஸ்அப்' குழுமத்தால் சிலுமின, லங்காதீப, சண்டே ஒப்சேவர், வீரகேசரி (தமிழ்) வார இறுதிச் செய்திப் பத்திரிகைகளில் வெளியாகின்ற வேலை வாய்ப்புகளைப் பகிரங்கப்படுத்துதல் மற்றும் வேலை தேடுபவர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குதல். இதன் விளைவாக, 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், செய்தித்தாள்களை கொள்வனவு செய்வதற்கு செலவழிக்கப்பட்ட ஒரு இலட்சம் 'ரூபாவுக்கும் அதிகமான

பணத்தைச் சேமிக்க முடிந்திருந்தது.

- தனியார் துறையில் தொழில் வாய்ப்புக்களுக்காக சனாதிபதி அலுவலகத்தினால் உரிய மாவட்ட அரச தொழில் வாய்ப்பு சேவை நிலையங்களுக்கு முன்வைக்கப்பட்ட 495 வேலைவாய்ப்பு கோரிக்கைகளுக்கு அனுப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், அதன் முன்னேற்றம் சனாதிபதி செயலகத்திற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

- தனியார் துறையில் தொழில் வாய்ப்புக்களுக்காக பிரதமர் அலுவலகத்தினால் உரிய மாவட்ட அரச தொழில் வாய்ப்பு சேவை நிலையங்களுக்கு முன்வைக்கப்பட்ட 386 வேலைவாய்ப்பு கோரிக்கைகளுக்கு அனுப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், அதன் முன்னேற்றம் சனாதிபதி செயலகத்திற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

- பெற்றோர்கள், ஆசிரியர்கள், இளம்நபர்கள், சுயதொழில் செய்பவர்கள் மற்றும் தொழில் முனைவோர் ஆகியோரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 'சூம்' தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி 'லைவ் ரோக்' என்ற அறிவுசார் தொடர் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் மற்றும் இந்த நிகழ்ச்சித்திட்டம் வாரத்தின் ஒவ்வொரு நாளும் இரவு 8.00 முதல் 9.00 மணி வரை பல்வேறு துறைகளில் தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட நிபுணர்களின் பங்கேற்புடன் நடத்தப்பட்டிருந்தது.

- முன்னணி தனியார் துறை நிறுவனங்கள், தேசிய மற்றும் பிராந்திய வர்த்தக சம்மேளங்கள் மற்றும் வணிக குழுக்களுடன் ஒத்துழைப்பை ஏற்படுத்துதல் மற்றும் தற்போதிருக்கின்ற வெற்றிடங்களுக்கு வேலை தேடுபவர்களை அனுப்புவதற்கான விசேட தொடர் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல்.

- இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட அரச தொழில்வாய்ப்புச் சேவைச் செயற்பாடுகளை மிகவும் பயனுறுதிவாய்ந்ததாகவும், வினைத்திறனுடையதாகவும் மாற்றுவதற்கு தனியார் துறையுடன் (ஜோன் கீல்ஸ்) அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான செயலமர்வை நடாத்துதல்.

- வேலை தேடுபவர்களுக்கு தொழில் பயிற்சி கற்கைநெறிகள் மற்றும் வேலை வாய்ப்புகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் கிடைக்கின்ற வாய்ப்புகளை நோக்கி அவர்களை வழிநடத்துதல்.

- உள்நாட்டு வேலை வாய்ப்புகள் மற்றும் தொழிற்கல்வி கற்கைநெறிகள் மற்றும் பாடங்களுடன் தொடர்புடைய பிரச்சினைகள் குறித்து மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவுடன் கலந்துரையாடல்களை நடத்துதல் மற்றும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

- 2022 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டிலிருந்து (ஒக்டோபர், நொவம்பர் மற்றும் டிசெம்பர்) மாவட்ட தொழில் சந்தை, பிரதேச தொழில் சந்தை மற்றும் வாழ்க்கைத் தொழிற் சந்தை ஆகியவை அரச தொழில்வாய்ப்புச் சேவைப் பிரிவினால் நடத்தப்பட்டிருந்ததுடன், இந்த காலப்பகுதியில் 20 மாவட்ட தொழில் சந்தை நிகழ்ச்சித்திட்டங்களையும், 12 வாழ்க்கைத் தொழிற் சந்தை நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

- 2020 ஆம் ஆண்டில் க.பொ.த (சா.த) பரீட்சைக்குத தோற்றிய பின்னர், க.பொ.த உயர் தரத்திற்கு தகமையற்ற சுமார் 80,000 மாணவர்களில் பதிலிறுத்த 30,000 மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டல்நெறிகள், தொழில் வழிகாட்டுதல்கள் மற்றும் தொழிலுக்கமர்த்தல்கள் வழங்கப் பட்டிருந்தன.

## 6. தொழில் சந்தை நிகழ்ச்சித்திட்டம்

**அட்டவணை 2.16** தொழில் சந்தை நிகழ்ச்சித்திட்டம்- மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு

| தொ.இ | மாவட்டம் | பங்குபற்றிய நிறுவனங்களின் எண்ணிக்கை | பங்குபற்றிய தொழில் நாடுநர்களின் எண்ணிக்கை | பொருத்தமான தொழில்களின் எணிக்கை | வேலை வாய்ப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 01 | காலி | 16 | 1257 | 644 | 644 |
| 02 | யாழ்ப்பாணம் | 42 | 734 | 510 | 15 |
| 03 | மாத்தளை | 5 | 82 | 65 | - |
| 04 | மன்னார் | 8 | 36 | 11 | 7 |
| 05 | மட்டக்களப்பு | 5 | 128 | 40 | 5 |
| 06 | புத்தளம் | 37 | 2000 | 750 | - |
| 07 | மாத்தறை | 13 | 167 | 138 | - |
| 08 | களுத்துறை | 9 | 217 | - | 16 |
| 09 | புத்தளம் | 52 | 1550 | 598 | - |
| 10 | கொழும்பு | 15 | 92 | 150 | 28 |
| 11 | குருணாகல் | 20 | 750 | 315 | 204 |
| 12 | பொலநறுவை | 14 | 262 | - | - |
| 13 | பதுளை | 16 | 427 | 395 | 21 |
| 14 | கம்பஹா | 12 | 202 | 125 | - |
| 15 | கண்டி | 10 | 125 | 82 | - |
| 16 | வவுனியா | 11 | 33 | 14 | 3 |
| 17 | மொனறாகலை | 6 | 85 | 46 | 13 |
| 18 | இரத்தினபுரி | 10 | 71 | - | - |
| மொத்தம் | | **301** | **8218** | **3883** | **956** |

## 7. வாழ்க்கைத்தொழில் சந்தை நிகழ்ச்சித்திட்டம்

| தொ.இ | மாவட்டம் | பங்குபற்றிய நிறுவனங்களின் எண்ணிக்கை | பங்குபற்றிய பயிலுநர்களின் எண்ணிக்கை | பயிற்சிக்கு அனுப்பப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | அம்பாறை | 7 | 192 | 43 |
| 2 | அம்பாந்தோட்டை | 10 | 142 | 119 |
| 3 | திருகோணமலை | 10 | 173 | 118 |
| 4 | மாத்தளை | 3 | 32 | 32 |
| 5 | புத்தளம் | 1 | 480 | - |
| 6 | யாழ்ப்பாணம் | 5 | 164 | 30 |
| 7 | கேகாலை | 10 | 82 | 12 |
| 8 | கிளிநொச்சி | 8 | 208 | - |
| 9 | மட்டக்களப்பு | 4 | 29 | 14 |
| 10 | பொலநறுவை | 8 | 262 | - |
| 11 | வவுனியா | 19 | 395 | - |
| மொத்தம் | | **85** | **2159** | **368** |

8. மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட ஏனைய நிகழ்ச்சித் திட்டங்கள்

| தொ. இ. | செயற்பாடு | முன்னேற்றம் |
|---|---|---|
| 01 | ஒவ்வொரு சிறுவருக்கும் தொழில் வழிகாட்டல்நெறி உரிமை எண்ணக்கருப் பத்திரத்தை நடைமுறைப்படுத்துதல் | வேகமாக மாறிவருகின்ற உலகத்தில் வேலை உலகத்திற்கு பயனுள்ள தனிநபரொருரை உருவாக்கு வது அவசியம் என்பதால் ஒவ்வொரு சிறுவரும் தங்கள் வாழ்க்கையில் கல்விசார், வாழக்கைத் தொழில்சார் முடிவுகளை எடுப்பதற்கு அவர்களுக்கு உதவுதல் வேண்டும். எனவே ஒவ்வொரு சிறுவரும் தங்கள் வாழ்க்கையில் முறையான கல்விசார், தொழில்சார் முடிவுகளை எடுப்பதில் தொழில் வழிகாட்டலை வழங்குவதற்கான ஒரு முன்மொழிவு உருவாக்கப்பட்டுள்ளது. |
| 02 | தொழில் பிரதான பரிசோதனையின் தன்னியக்கம் மற்றும் பல் நுண்ணறி உற்றறிதல் பண்பாற்றல் சார்ந்த கோட்பாடு சோதனைகள் ஆகியவற்றை இணையவழி நடத்துவதற்கு முடிந்தமை | இந்த சேவையை பௌதீகரீதியில் வழங்குவதில் கணிசமான செலவு ஏற்படுவதால், செலவைக் குறைத்து உற்பத்தித்திறனை அதிகரிக்கும் அதே நேரத்தில் அதிக எண்ணிக்கையிலானவர்களுக்கு நன்மைகளை வழங்குவதற்காக இது வடிவமைக் கப்பட்டுள்ளது. |
| 03 | அடிக்கடி வினவப்படுகின்ற வினாக்கள் | தொழில் வழிகாட்டலுடன் தொடர்புபட்டுள்ள பல்வேறு துறைகள் தொடர்பான கல்விசார், தொழில்சார் தகவல்கள் பற்றிய மாணவர்களின் அறிவை மேம்படுத்தும் நோக்கில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன. |
| 04 | ஸ்கில்ஸ் ஸ்கான் கிளினிக் திட்டம் | இந்த நிகழ்ச்சித்திட்டம், அரச துறை அலுவலர்களின் பிள்ளைகள், க.பொ.த (உ/த) தகைமையைப் பெறத் தவறிய பிள்ளைகள் மற்றும் ஏனைய வாடிக்கையாளர்களுக்கு கல்வி மற்றும் தொழில் ரீதியான தீர்மானங்களை எடுப்பதற்கு உதவுவதற்காக வடிவமைக் கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டின் முதல் இரண்டு வாரங்களில் நடத்தப்படவுள்ள இந்த வேலைத் திட்டத்தின் ஆரம்ப ஏற்பாடுகள் நிறைவு செய்யப் பட்டுள்ளன. |
| 05 | நாடளாவிய ரீதியில் தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | ஆய்வாண்டு காலப்பகுதியில் 1,156 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன. |



புகைப்படங்களின் 2.5 ஐக்கிய இராச்சியத்தின் தொழிற்சங்க உறுப்பினர்களுடன் சந்திப்பு

### 2.2.17 சிறந்த தொழில் துறை உறவுகளுக்காக முத்தரப்பு அக்கறைதாரர்களுக்கு அறிவூட்டுதல்


1. தொழில் சட்டம், தொழிற்றுறை உறவுகள் மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய ஆய்வு

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம், வேலையாளர்களின் அறிவு, மன்னபான்மை மற்றும் திறன்களை விரிவுபடுத்துவதற்காக தொழில் துறை உறவுகள் மற்றும் மனித வள முகாமைத்துவம் பற்றிய டிப்புளோமா கற்கைநெறிகளை நடத்துகின்றது. இந்நிறுவகம் தனியார் துறை மற்றும் பகுதியளவிலான அரச துறையிலுள்ள பணியாளர்கள், தொழில்வழங்குநர்கள் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்களின் இயலளவை வளர்ப்பதற்குத் தேவையான கல்வி மற்றும் பயிற்சி வாய்ப்புகளை வழங்குகின்றது. இதற்குமேலதிகமாக, இந்த நிறுவகம் தொழில் கற்கைகள் குறித்த குறுகிய கால கற்கைநெறிகளையும், சான்றிதழ் கற்கைநெறிகள்ளையும் நடத்துகின்றது.

**அட்டவணை 2.17** பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் – தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்

| | நிகழ்ச்சித்திட்டங்களின் வகைகள் | திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | டிப்புளமோ கற்கைநெறிகள் | 6 | 6 |
| 02 | சான்றிதழ் கற்கைநெறிகள் | 12 | 11 |
| 03 | வெளிச்செல்லும் பயிற்சி கற்கை நெறிகள் | 1 | 0 |
| 04 | பயிற்சி செயலமர்வுகள் | 2 | 2 |
| 05 | ஒரு நாள் நிகழ்ச்சித்திட்டங்கள் | 40 | 37 |
| 06 | இரண்டு நாள் நிகழ்ச்சித் திட்டங்கள் | 19 | 12 |
| 07 | மூன்று நாள் நிகழ்ச்சித்திட்டங்கள் | 4 | 1 |
| 08 | தனிப்பயனாக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் | 12 | 37 |
| 09 | சீரிய வேலை நிகழ்ச்சித் திட்டங் களின் கீழான நிகழ்ச்சித்திட்டங்கள் | 3 | 8 |

- **பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்தான வருமானம்**




**வரைபடம் 2.9** பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்தான வருமானம் - தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்

- **பரீட்சைகள்**

நிறுவனம்சார் தேவைப்பாட்டின் பேரில், தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம், அரச துறை கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் அதேபோன்று தனியார் துறை நிறுவனங்களின் கோரிக்கையின் பேரில் பதவியினர் ஆட்சேர்ப்பு பரீட்சைகள், வினைத்திறன்காண் தடைப்பரீட்சை மற்றும் மதிப்பீடு, பதவி உயர்வுக்கான பரீட்சைகள் நடத்துகின்றது. 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில், இந்நிறுவகம் 34 பரீட்சைகளை நடத்தியுள்ளதுடன், வெளி நிறுவனங்களுக்காக நடத்தப்பட்ட பரீட்சை மூலம் 7.5 மில்லியன் 'ரூபா வருமானம் கிடைத்திருந்தது. இந்த பரீட்சைகளில் கலந்து கொண்ட பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 2153 ஆகும்.

**அட்டவணை 2.18** 2022 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட பரீட்சைகளின் விபரங்கள்

| | 2021.12.31 இலுள்ளவாறு | 2022.12.31 இலுள்ளவாறு |
|---|---|---|
| நடத்தப்பட்ட பரீட்சைகளின் எண்ணிக்கை | 42 | 34 |
| பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை | 3690 | 2153 |
| மொத்த வருமானம் | **7,226,466.01** | **7,582,972.90** |

### 2.2.18 தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துதல்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, வேலைத்தளங்களில் தொழில்சார் விபத்துக்களைக் குறைக்கும் குறிக்கோளுடன், தொழில்சார் பாதுகாப்பு அலுவலர்களுக்கு பயிற்சி யளிப்பதற்காக தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான டிப்புளோமா கற்கைநெறிகள், சான்றிதழ் கற்கைநெறிகள் மற்றும் பல கற்கைநெறிகளை நடத்துகின்றது.

வேலைத்தளத்தின் பாதுகாப்பு மற்றும் சகாதாரத்தை உறுதி செய்வதற்காக, காற்றின் தர ஆய்வு, புகை வெளியெற்ற பரிசோதனை, தொழிற்சாலைகளுக்குள் தூசி மட்ட ஆய்வு, ஒலி அளவு மற்றும் பூகோள வெப்பநிலை ஆய்வு போன்ற அத்தகைய சூழல்சார் அளவீடுகள் நடத்தப்படுவதுடன், ஆபத்து அளவை மதிப்பிடுவதற்கு மதிப்பீடுகளும் நடத்தப்படுகின்றன. 2022 ஆம் ஆண்டில் 181 இடர் மதிப்பீட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 12.03 மில்லியன் 'ரூபா மொத்த வருமானம் ஈட்டப்பட்டிருந்தது.

இதற்குமேலதிகமாக, கேட்கும் ஆற்றல் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை, வேலையிலீடுபடுவதற்கான உடற்தகுதி மதிப்பீடு, நுரையீரல் தொழிற்பாட்டு பரிசோதனை, கண் பார்வைப் பரிசோதனைகள் போன்ற அத்தகைய மருத்துவ பரிசோதனைகளும் நடத்தப்படுகின்றன.

2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் முன்னேற்றம் கீழே அட்வணைப்படுத்தப் படுகின்றது.




**புகைப்படங்களின் 2.6** தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார மாநாடு

| அட்டவணை 2.19 | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தைச் செம்மைப்படுத்துவதற்காக நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்- தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் |
|---|---|

| | கற்கைநெறி | நடத்தப்பட்ட கற்கைநெறிகளின் எண்ணிக்கை | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை | நிதி முன்னேற்றும் (ரூ.மில்.) |
|---|---|---|---|---|
| 01 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய டிப்புளோமா கற்கைநெறி | 4 | 97 | 11.51* |
| 02 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய சான்றிதழ் கற்கைநெறி | 4 | 125 | 5.20 |
| 03 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய அடிப்படைக் கற்கைநெறி | 3 | 45 | 0.54 |
| 04 | நிறைவேற்றுத்தர தர அலுவலர்களுக் கான விசேட கற்கைநெறி | 5 | 75 | 1.19* |

* தற்போது நடைபெறுகின்ற கற்கைநெறிகளுக்காக செலுத்தப்பட்டுள்ள தவணைக்கட்டணங்கள் உள்ளடங்கலானது.

வேலையாளர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை உறுதிசெய்து, மேம்படுத்தும் குறிக்கோளுடன், ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் மாதத்தின் இரண்டாவது வாரத்தை தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரமாக அமைச்சரவை குறித்தொதுக்கியுள்ளது. இதற்கு இணையாக, தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார மாநாடு, தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தால் 2022 நொவம்பர் மாத்த்தில் நடத்தப்பட்டது, இது தொழில்வழங்குநர்கள் மற்றும் பணியாளர்களின் தொழில் பாதுகாப்பை பேணி. மேம்படுத்துவதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிபுணத்துவ வள ஆளர்களின் பங்கேற்புடன் நடத்தப்பட்டிருந்தது.

தொழில்சார் பாதுகாப்பு கருத்தரங்கு 2022 நெவம்பர் 17 ஆம் திகதி கொழும்பு கலதாரி ஹோட்டலில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார முகாமைத்துவ முறைமையினூடாக பாதுகாப்பை வெற்றிகொள்ளுதல்" என்ற தொனிப்பொருளில் இலங்கை தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 350 இற்கும் மேற்பட்டவர்களின் பங்கேற்புடன் இடம்பெற்றிருந்தது. இந்நிகழ்வின் பிரதான நோக்கம், பணியாளர்களின் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை உத்தரவாதப்படுத்துவதற்காகவும், சுகாதார நியமங்கள் பற்றிய புரிதலை மேம்படுத்துவதற்காகவும் இலங்கையிலும் ஏனைய நாடுகளிலும் புதிய தொழில்நுட்பம் மற்றும் புதிய முறைகளைப் பின்பற்றுவது தொடர்பில் பங்குபற்றியவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.

சர்வதேச தொழில் தாபனத்தின் நிதி அனுசரணையுடன், நிறுவகத்திற்கு 6,264,500/- 'ரூபா வருவாயை ஈட்டித்தந்த தேயிலை / தென்னை / இறப்பர் பெருந்தோட்டங்களில் பணிபுரிகின்ற வேலையாளர்களின் தொழில்சார் பாதுகாப்பு குறித்து ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு, அறிக்கயொன்று சமர்ப்பிக்கப் பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக, பின்வரும் விசேட நிகழச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன.

| அட்டவணை 2.20 | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை செம்மைப்படுத்துவதற்காக நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்-தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் |
|---|---|

| | கற்கைநெறி | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை | நிதி முன்னேற்றும் ('ரூ.) |
|---|---|---|---|
| 01 | கொழும்பு மாநகர சபையின் தொழில்நுட்ப அலுவலர்களுக்கான சான்றிதழ் கற்கைநெறி | 30 | 727,500.00 |
| 02 | கொழும்பு மாநகர சபையின் பொறியியல் அலுவலர்களுக்கான சான்றிதழ் கற்கைநெறி | 15 | 202,500.00 |
| 03 | கொழும்பு மாநகர சபையின் சிற்றூழியர் களுக்கான சான்றிதழ் கற்கைநெறி | 600 | 3,150,000.00 |

| | | | |
|---|---|---|---|
| 04 | முதலீட்டுச் சபையின் நிறைவேற்றுத்தர அலுவலர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு கற்கைநெறி (சீரிய வேலை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்) | நிறைவேற்று அலுவலர் | 3,454,500.00 |
| 05 | சுராடோ' நிறுவகத்தின் ஒருங்கிணைப்புடன் நடத்தப்பட்ட பணிப்பெண்களுக்கான தொழில் சார் பாதுகாப்பு சான்றிதழ் கற்கைநெறி | 261 | 1,305,000.00 |

### 2.2.19 தொழில் திணைக்களத்தின் மனித வள மேம்பாடு

பதவியினரின் தேவைப்பாடுகளை இனங்காணுதல், தேவைகளுக்கேற்ப ஆட்சேர்ப்புச் செய்தல், அலுவலர் பதவி உயர்வு, வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகளை நடத்துதல், செயலாற்றுகை மதிப்பீடு, வேதன உயர்வு வழங்குதல், அலுவலர்கள் இடமாற்றம், அலுவலர்களின் ஓய்வு, லீவு மற்றும் ஒழுக்காற்று பிரச்சனைகளை கையாளுதல் போன்ற அத்தகைய வழமையான பதவியினர் நிருவாக தொழிற்பாடுகள். திணைக்களத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.

உள்நாட்டு பயிற்சி திட்டங்களுக்காக 2022 ஆம் ஆண்டிற்கு 5,800,000.00 ‘ரூபா ஏற்பாடு பெறப்பட்டிருந்தது. இதில், செலவீனமானது, மொத்த ஒதுக்கீட்டில் 92மூ ஆக 2022.12.31 ஆம் திகதியளவில் 5,311,943 ‘ரூபாவாகும். இதன் விபரங்கள் ஆறாவது பத்தியில் கொடுக்கப்பட்டுள்ளன.

### 2.2.20 தொழில் திணைக்களத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி

நாடு முழுவதும் பரந்து வாழ்கின்ற தொழில் சமூகத்திற்கு மிகவும் பயனுறுதிவாய்ந்த சேவையை வழங்கும் நோக்கத்துடன், அதன் தலைமை அலுவலகம் மற்றும் நாடளாவிய ரீதியிலுள்ள பிராந்திய தொழில் அலுவலகங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை விருத்திசெய்வதற்கு தொழில் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.


இதன்படி, புதிதாக நிருமாணிக்கப்பட்ட பதுளை மற்றும் ஹட்டன் தொழில் அலுவலகக் கட்டிடங்கள் அலுவலக பணிகளுக்காக 2022 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது.

### 2.2.21 தொழில்சார் விபத்துகளுக்கு நட்டஈடு வழங்குதல்

தொழிலில் ஈடுபட்டுகொண்டிருக்கையில் காயம் அடைந்த வேலையாளர்கள், தொழிலின் தன்மை காரணமாக நோய்களால் பாதிக்கப்படுபவர்கள் மற்றும் வேலைத்தளங்களில் விபத்துக்களால் இறக்கின்ற வேலையாளர்களை சார்ந்திருப்பவர்களுக்கு வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்தினால் நட்டஈடு வழங்கப்படுகின்றது.


**1. 2022 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட மரணத்தை ஏற்படுத்தும் மற்றும் மரணத்தை எற்படுத்தாத விபத்துகளின் எண்ணிக்கை**

**அறிக்கையிடப்பட்ட மரணத்தை ஏற்படுத்தும் விபத்துக்கள் எண்ணிக்கை - 180**




**வரைபடம் 2.10** அறிக்கையிடப்பட்ட மரணத்தை ஏற்படுத்தும் விபத்துகளின் எண்ணிக்கை

அறிக்கையிடப்பட்ட மரணத்தை ஏற்படுத்தும் மற்றும் மரணத்தை ஏற்படுத்தாத விபத்துகளின் எண்ணிக்கை - 182




**வரைபடம் 2.11** அறிக்கையடப்பட்ட மரணத்தை ஏற்படுத்தும் விபத்துக்கள் மற்றும் மரணத்தை ஏற்படுத்தாத விபத்துக்கள்

**2. 2022 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட மரணத்தை ஏற்படுத்தும் விபத்துக்கள் மற்றும் மரணத்தை ஏற்படுத்தாத விபத்துக்கள்**

**அட்டவணை 2.21** அபாயகரமான மற்றும் உயிரிழக்காத விபத்துகளின் தன்மை பதிவாகியுள்ளது

| துறை | மரணத்தை ஏற்படுத்தும் விபத்துக்கள் | மரணத்தை ஏற்படுத்தாத விபத்துக்கள் |
|---|---|---|
| உயரமான இடங்களிலிருந்து விழுதல் | 30 | 16 |
| இலத்திரனியல் | 10 | 02 |
| தீ / இரசானப் பொருட்கள் கழிவுகள் | 02 | 03 |
| தொழிற்சாலை இயந்திரங்கள் மற்றும் பிற இயந்திரங்கள் | 07 | 79 |
| வீதி பத்துக்கள் | 48 | 16 |
| விலங்குகளிடமிருந்து | 04 | 01 |
| நழுவுதல்/விழுதல் அல்லது மோதுதல் | 04 | 30 |
| பொருட்கள் கீழே விழுவதால் ஏற்படும் விபத்துகள் | 21 | 11 |
| நீர் | 05 | 01 |
| சுகயீனங்கள் / ஏனையவை | 49 | 23 |
| **மொத்தம்** | **180** | **182** |


**3 2022 ஆம் அண்டில் மரணத்தை ஏற்படுத்தும் விபத்துக்களின் மற்றும் மரணத்தை ஏற்படுத்தாத விபத்துக்களின் தன்மை**

**அட்டவணை 2.22** மரணத்தை ஏற்படுத்தும் விபத்துக்களின் மற்றும் மரணத்தை ஏற்படுத்தாத விபத்துக்களின் தன்மை

| துறை | விபத்துக்களின் எண்ணிக்கை |
|---|---|
| தற்காலிக சிறு காயங்கள் | 66 |
| எரி காயங்கள் | - |

| | |
|---|---|
| விரல்களை இழத்தல் | 19 |
| எலும்பு முறிவுகள் | 27 |
| கை துண்டிக்கப்படுதல் / உள்ளங்கையின் ஒரு பகுதி | 14 |
| முதுகெலும்புகள் / முதுகுத் தண்டுவடத்தில் ஏற்படும் பாதிப்புகள் | 09 |
| கால்விரல்கள் / கால்கள் இழப்பு | 24 |
| கண்களுக்கு பாதிப்பு | 08 |
| ஏனையவை | 15 |
| **மொத்தம்** | **182** |

## 4. சுற்று நீதிமன்றங்கள் மூலமான விபத்துக்களின் எண்ணிக்கை




**வரைபடம் 2.12** சுற்று நீதிமன்றப் பிரதேசத்தால் அறிக்கையிடப்பட்ட விபத்துக்களின் எண்ணிக்கை

## 5. நட்டஈட்டுக் கொடுப்பனவில் முன்னேற்றம்

**அட்டவணை 2.23** இழப்பீடு நடவடிக்கைகளின் முன்னேற்றம்

| செயற்பாடு | பௌதீகம் | | நிதி ('ரூபா. மில்.) | |
|---|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்ட எண். | உண்மையான எண். | எதிர்பார்க்கப்பட்ட எண். | உண்மையான எண். |
| மரணத்தை ஏற்படுத்தும் மற்றும் மரணத்தை ஏற்படுத்தாத விபத்துகள் குறித்து நிறைவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 300 | 385 | 120 | 183.1 |
| உடன்படிக்கைகள் | 80 | 61 | 7 | 9.1 |
| பராயமடையாதோர் சார்பாக திறக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | 100 | 129 | 20 | 49.7 |
| விடுவிக்கப்பட்ட பராயமடையாதோர் கணக்குகளின் எண்ணிக்கை | 150 | 184 | 20.2 | 31.8 |

### 2.2.22 அரச மற்றும் தனியார் துறைகளின் ஆக்கத்திறனை ஊக்குவித்தல்

தேசிய உற்பத்தித்திறன் செயலகம் இலங்கையின் அரச மற்றும் தனியார் துறைகளில் மிகவும் திறமையான மற்றும் தரமான சேவையை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட ஆக்கத்திறன் ஊக்குவிப்புத் திட்டத்தை செயற்படுத்துகின்றது. வாடிக்கையாளர்கள் நிறுவனத்தின் வளாகத்திற்குள் செலவழிக்கும் நேரத்தைக் குறைப்பதற்குப் பொருத்தமான வழிமுறைகளை வகுத்ததன் மூலம் நிறுவனத்தின் பயனுறுதியையும், வினைத்திறனையும் மேம்படுத்துதல், வாடிக்கையாளர் சேவை செயன்முறைகளைப் பகுப்பாய்வு செய்தல், மேலும் திருப்திகரமான மற்றும் பயனுள்ள வாடிக்கையாளர் சேவை செயன்முறைகளை மேம்படுத்துதல், நுகர்வோர் மற்றும் பணியாளர் திருப்தி பற்றி கணக்கெடுப்பு நடத்துதல், உயர் முகாமைத்துவம் மற்றும் பதவியினர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தி, சிரேஷ்ட முகாமைத்துவத்தின் செயன்முறை திருத்தங்களுடன் அறிக்கையை சமர்ப்பித்தல். 2022 ஆம் ஆண்டில் நிறுவனம் அடைந்த முன்னேற்றம் கீழே காட்டப்பட்டுள்ளது.

- உற்பத்தித்திறன் குறித்த டிப்புளோமா கற்கைநெறி

நாடளாவியரீதியில் அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் 54 பணியாளர்களின் பங்களிப்புடன் ஒரு வருட டிப்புளோமா கற்கைநெறி நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. கற்கைநெறி, விரிவுரைகள், களக் கல்விசார் வருகைகள், ஆசிய உற்பத்தித்திறன் தாபனத்தால் நடத்தப்படும் இணையவழி கற்கைநெறிகள், இறுதித் தவணைப் பரீட்சை மற்றும் திட்டங்கள் தொடர்பான செய்முறை பயிற்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. கற்கைநெறியை வெற்றிகரமாக நிறைவுசெய்தவர்களுக்கான டிப்புளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு 2022.12.14 ஆம் திகதி இலங்கை ஆதாரமன்ற நிறுவகத்தில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளர் தலைமையில் நடைபெற்றது.

- புதிய உற்பத்தித்திறன் அபிவிருத்தி அலுவலர்களுக்கான பயிற்சியாளர்களின் பயிற்சி திட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டமானது, தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தில் புதிதாக இணைக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு செய்முறை மற்றும் கோட்பாட்டு அறிவை வழங்குதல் மற்றும் அவர்களின் மனோபாவத்தையும், திறன்களையும் அபிவிருத்தி செய்தல் போன்ற குறிக்கோள்களுடன் நடத்தப்பட்டது. கற்கை நெறியின் 40 நாள் காலப்பகுதியில், பல்வேறு விடயங்கள் பற்றிய அறிவு வழங்கப்பட்டதுடன், தகுதியான 146 அலுவலர்களுக்கு 2023.01.18 ஆம் திகதி சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

- பாடசாலை மாணவர்களுக்கான உற்பத்தித்திறன் மற்றும் தரமான




புகைப்படங்களின் 2.7 தேசிய பட்டியலில் விருது விழா தேசிய உற்பத்தித்திறன் விருதுகள்

முகாமைத்துவம் பற்றிய சான்றிதழ் கற்கைநெறியை நடத்துதல்

பதுளை, காலி, மாத்தறை, குருணாகல், கேகாலை, கண்டி, மாத்தளை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் இந்த கற்கைநெறி நடத்தப்பட்டிருந்ததுடன், 2022 ஆம் ஆண்டில் 2542 மாணவர்கள் கற்கை நெறியைப் பின்பற்றியிருந்தனர். இந்த நிகழ்ச்சித்திட்டங்களில் பாடசாலை சமூகத்தை ஈடுபடுத்து வதன் மூலம் உற்பத்தித்திறன் ஆசாரமொன்றாக உருவாக்கப்பட முடியுமாகையால், அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களை ஊக்குவிப்பது அவசியமானதாகும்.

- சிறிய அளவிலான தொழில் முயற்சியாளர் அபிவிருத்தித் திட்டம்

இந்த நிகழ்ச்சிதிட்டம் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் சிறிய அளவிலான தொழில் முயற்சியாளர் சமூகத்தை வலுப்படுத்துவதனூடாக பொருளாதார செயன்முறையை பலப்படுத்தும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்தும் இருபது (20) தொழில்முயற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, தற்போது தேசிய உற்பத்தித்திறன் செயலகத்துடன் 6620 குடும்பங்கள் கைகோர்த்துள்ளன. 2022 ஆம் ஆண்டில் முப்பத்தி ஒன்பது (39) பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டிருந்ததுடன், சமூக பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் நிலைமைகளை மேம்படுத்துவதன் மூலம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எதிர்வரும் ஆண்டுகளில் எடுக்கப்படும்.

- **ஆசிய உற்பத்தித்திறன் தாபனத்தின் பங்களிப்புடன் கருதிட்டங்களை நடைமுறைப்படுத்துதல்**

**அட்டவணை 2.24** ஆசிய உற்பத்தித்திறன் தாபனத்தின் பங்களிப்புடன் நடைமுறைப்படுத்துதல் கருதிட்டங்கள்

| கருத்திட்டத்தின் பெயர் | கருத்திட்டக் காலப்பகுதி | மதிப்பிடப்பட்ட கருத்திட்டத்தின் செலவினம் (அமெரிக்க டொலர்) |
|---|---|---|
| மஹியங்கனை ஆதார வைத்தியசாலையில் கோவிட் பரிசோதனை ஆய்வுகூடத்தைத் தாபித்தமை | 5 மாதங்கள் | 68,435 |
| தெல்தெனிய வைத்தியசாலைக்கு தரமான முகாமைத்துவ எண்ணக் கருவினை அறிமுகப்படுத்துதல். | 7 மாதங்கள் | 21,565 |
| பதுளை மாவட்டத்தில் உயர்தர இயற்கை உரங்களை உற்பத்தி செய்து பயன்படுத்துதல் | 1 வருடம் | 40,000 |
| புத்துருவாக்கத்தின் மூலம் உற்பத்தியை அதிகரித்தல் | 4 மதாங்கள் | 25,000 |
| இயலுமை அபிவிருத்தி ஊடாக நிலையான உணவு மதிப்பு சங்கிலிகளுக்கான உணவு பாதுகாப்பு மற்றும் தரத்தை மேம்படுத்துதல் | 1 வருடம் | 50,000 |
| மொத்தம் | | 205,000 |

- **தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் வைபவத்தை நடத்துதல்**

தேசிய உற்பத்தித்திறன் விருது வழங்கும் வைபவம் – 2020 ஆம் ஆண்டு முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பெற்ற 269 பேருக்கு விருது வழங்கும் வைபவம் கௌரவ பிரதம அமைச்சரின் தலைமையில், கௌரவ தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் அவர்களினதும், ஏனைய பிரமுகர்களினதும் பங்கேற்புடன் 2022.12.15 ஆம் திகதி அலரிமாளிகையில் நடைபெற்றிருந்தது. விசேட திறமை மற்றும் திறமைக்கான வெற்றியாளர்களுக்கு விருதுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கும் நிகழ்வு மாகாண மட்டத்தில் நடைபெற்றருந்தது.

### 2.2.23 வேலையாளர்களின் நலன்புரி

தொழில் சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான நலன்புரித் திட்டங்களை சிரம வாசனா நிதியம் நடத்துகின்றது. இந்த நலன்புரி திட்டங்களின் ஒரு பகுதியாக, கண் சிகிச்சை, மருத்துவ முகாம்கள், புலமைப்பரிசில்கள் மற்றும் இறந்த வேலையாளர்களின் பிள்ளைகளுக்கான பாடசலை உபகரணங்கள், வாழ்வாதார

உதவிக்கான தொழில்நுட்ப கல்வி மற்றும் ஏனைய நலன்புரி செயற்பாடுகள் நாடளாவியரீதியில் நடத்தப்படுகின்றன.

நிதியத்தின் முக்கிய வருமான மூலமான லொத்தர் விற்பனையில் ஏற்பட்ட சரிவு, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் பொருளாதார வீழ்ச்சியால் நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலை ஆகியவற்றின் விளைவாக சிரம வாசனா நிதியத்தின் வருமானம் வேகமாக வீழ்ச்சியடைந்தது. 2022 ஆம் ஆண்டில் நிதியமானது, உகந்த நிலையை எட்டியிருக்கவில்லை. இதன்படி, 2022 ஆம் ஆண்டிற்கான திட்டமிடப்பட்ட வேலைத் திட்டங்கள் பணிப்பாளர் சபையின் அறிவுறுத்தல்களின்படி மீளாயப்பட வேண்டியிருந்தது.

## I. விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

தொழில் விபத்துக்களைத் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, கடந்த காலங்களில் விபத்துகள் நடந்த தொழிற்சாலைகளை இனங்கண்டதைத் தொடர்ந்து, பயிற்சி செயலமர்வுகள் மற்றும் பணியிட பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் விடயம் தொடர்பில் நிபுணத்துவம் பெற்ற பொறியியலாளர்களால் நடத்தப்பட்டிருந்தன.

தொழில் சட்டவாக்கங்கள் குறித்து பணியாளர்களால் அதேபோன்று நிறுவனங்களின் உரிமையாளர்களால் எதிர்கொள்ளப்பட்ட பிரச்சனையான நிலைமைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், அனுபவம்வாய்ந்த வளவாளர்களைக் கொண்டு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்கள் நடத்தப்பட்டிருந்தன.

2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில், 1100 தொழிலாளர்களுக்கு அறிவூட்டி, அத்தகைய 28 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்டிருந்ததுடன், இந்த நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கு செலவிடப்பட்ட தொகை சுமார் 585,101.66 ‘ரூபாவாகும்.

## 2. நலன்புரி நிகழ்ச்சித்திட்டமீ

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், வேலையாளர்களின் குடும்பங்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் குறைந்த வருமானம் பெறும் வேலையாளர் குடும்பங்களின் கல்வி கற்கின்ற பிள்ளைகளுக்கான கல்வி உதவிகள் விஸ்தரித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இத்திட்டத்தின் மூலம் 1720 பிள்ளைகளுக்கு 8,707,733/- ‘ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன.



**புகைப்படங்களின் 2.8** குறைந்த வருமானலாபீ தொழிலாளர் குடும்பங்களுக்கு பள்ளி உபகரணங்கள் வழங்கப்படுகின்றன

3. மரணத்தை ஏற்படுத்தும் விபத்து புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டம், தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துகளால் இறந்த அல்லது நிரந்தர அங்கவீன முற்ற வேலையாளர்களின் பிள்ளைகளுக்காக செயற்படுத்தப்படுகின்றது. தொழிற்சாலை பரிசோதனைப் பொறியாளர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மற்றும் தொழிற்சாலை, வேலைத்தளங்கள் அல்லது பணிபுரியுமிடங்களில் ஏற்படும் தொழில் விபத்துக்கள் பற்றி வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்தால் பெறப்பட்ட விபரங்களின் அடிப்படையில் பயனாளிகள் இனங்காணப்படுவதுடன், 3 முதல் 25 வயதுக்குட்பட்ட பிள்ளைகள், அதாவது பாடசாலைக் கல்வி முதல் பல்கலைக்கழகக் கல்வி வரை நிலையான வைப்புத்தொகை 50,000.00 ‘ரூபா மற்றும் கல்விக்குத் தேவையான உபகரணங்கள் உள்ளடங்கலான இந்தத் திட்டத்தின் கீழ் உரித்துடையவர்கள்.

நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் நடைபெற்றிருக்க வில்லை என்பதுடன், பாடசாலை உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக பயனாளிகளுக்கு பாடசாலை உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான பணம் அவர்களின் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. பாடசாலை உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான உண்மையான பில் நிதியத்தினால் பெறப்பட்டதன் பின்னர், நிலையான வைப்புச் சான்றிதழ் மற்றும் பாடசாலை காலணிக்கான வவுச்சர் பயனாளிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. 2022 ஆம் ஆண்டில், பெற்ற 68 புலமைப்பரிசில்கள் பெற்றவர்களுக்கு 4,081,883.75 ‘ரூபா செலவில் அனுகூலங்கள் வழங்கப்பட்டிருநதன.

4. சட்ட உதவி நிகழ்ச்சித்திட்டம்

பணியாளர்கள் நியாயமற்ற வகையில் பணிநீக்கம் செய்யப்பட்டால், முன் அறிவித்தலின்றி நிறுவனங்கள் மூடப்பட்டால் மற்றும் வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளரிடம் முறைப்பாடு செய்யப்பட்டால் அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக இந்த நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

அதன் கீழ் 2022 ஆம் ஆண்டிற்காக நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் கீழே தரப்படுகின்றன.

**அட்டவணை 2.25** சிரம வாசனா நிதியத்தால் வழங்கப்பட்ட சட்ட உதவி

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை | மொத்தச் செலவு (‘ரூபா) |
|---|---|---|
| சட்ட உதவி | 38 | 938,761.85 |
| சட்ட உதவி மேன்முறையீடு மற்றும் மீளாய்வு | 02 | 30,000.00 |
| சட்ட உதவிப் புலமைப்பரிசில்கள் | 15 | 147,150.00 |

5. மருத்துவ உதவிக்கான நிகழ்ச்சித்திட்டம்

பணிபுரியும் போது தொழில்சார் நோய் / தொழில்துறை நோயால் பாதிக்கப்பட்ட பணியாளர்களுக்காக இந்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதுடன், 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 280,000.00 ‘ரூபா தொகை மருத்துவ உதவி தொகை எட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது.


6. சுத்திகரிப்புத் திட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டம், பதுளை மாவட்டத்தை இலக்காகக் கொண்டு நடாத்தப்பட்டிருந்ததுடன், தெரிவு செய்யப்பட்ட குறைந்த வருமானம் பெறுகின்ற வேலையாளர் குடும்பங்களின் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக 147 கட்டிடங்களை நிருமாணிப்பதற்காக சிரம வாசனா நிதியம் 2,774,705.00 ‘ரூபா தொகை செலவுற்றிருந்தது.

7. சிரம வாசனா நிதியத்தின் வளர்ச்சி

சிரம வாசனா நிதியத்தின் வருமானத்திற்கான பிரதான மூலம், சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்தப்படுகின்ற “ஜாதிக சம்பத” லொத்தர் சீட்டெழுப்பு என்பதுடன், உயர் பரிசுப் பணங்களை வழங்கு கின்ற ஏனைய போட்டி லொத்தர்களுடன் ஒப்பிடும்போது “ஜாதிக சம்பத” லொத்தரின் விற்பனை குறைந்த அளவில் காணப்படுகின்றது.

இந்த நிலைமை நிதியத்தின் வளர்ச்சியை பாரியளவில் பாதிக்கும் என்பதால், விளம்பரம் மற்றும் விற்பனை ஊக்குவிப்புச் செயற்பாடுகளை தீவிரப்படுத்த முடிவு செய்யப்பட்டிருந்தது. மேலும், வாடிக்கையாளர்கள் இணையவழி மூலம் சீட்டுக்களை வாங்கக்கூடிய வகையில் எளிதான வழிமுறைகளை திட்டமிடுவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.




வரைபடம் 2.13 சிரம வாசனா நிதியத்தின் வளர்ச்சி

8. சிரம வாசனா நிதியத்தின் விசேட சாதனைகள்

- ஐஎஸ்ஓ சர்வதேச தரச் சான்றிதழைப் பெற்றமை -2016
- கணினிமயமாக்கப்பட்ட தகவல் முறைமையைத் தாபித்தல்
- சிறந்த ஆண்டறிக்கைகள் மற்றும் கணக்குகளுக்கான போட்டியில் மூன்றாவது இடத்தைப் பெற்றமை-2019
- தேசிய உற்பத்தித்திறன் மதிப்பீட்டு சான்றிதழை வென்றமை





புகைப்படங்களின் 2.9 பதிவு செய்யப்பட்ட வேலை தேடுபவர்களை வெளிநாட்டு வேலைகளுக்கு அனுப்புதல்

### 2.2.24 வெளிநாட்டு தொழிலுக்கு வேலையாளர்களை அனுப்புதல்

வரையக்கப்பட்ட தனியார் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரகம், வெளிநாட்டு தொழிலுக்கு பணியாளர்களை அனுப்புகின்றது. 2022 ஆம் ஆண்டில் முகவரகத்தினூடாக தொழிலுக்காக புலம்பெயர் வேலையாளர்களின் எண்ணிக்கை 324 ஆகும்.

**புலம்பெயர் வேலையாளர்களின் எண்ணிக்கை- 2022**




வரைவு 2.14 வரையக்கப்பட்ட தனியார் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரகத்தினூடாக தொழிலுக்காக புலம்பெயர்ந்த வேலையாளர்களின் எண்ணிக்கை

**தொழில் துறை காரணமாக புலம்பெயர்ந்த வேலையாளர்களின் எண்ணிக்கை**

**அட்டவணை 2.26** தொழில் துறை காரணமாக புலம்பெயர்ந்த வேலையாளர்களின் எண்ணிக்கை

| இல. | தொழில் துறை | மொத்தம |
|---|---|---|
| 1 | வீட்டு வேலையாளர் | 117 |
| 2 | பராமரிப்பாளர் | 2 |
| 3 | மீன் வெட்டுபவர் | 11 |
| 4 | பஸ் நடத்துநர் | 5 |
| 5 | வெதுப்பகர் | 10 |
| 6 | உணவு கையாளுபவர் | 7 |
| 7 | சலவை செய்பவர் | 2 |
| 8 | தொழிலாளி | 2 |
| 9 | விவசாயத் தொழிலாளி | 17 |
| 10 | பொறுப்பாளர் | 3 |
| 11 | சமயற்காரர் | 5 |
| 12 | சமயற்காரர் (வீடு) | 0 |
| 13 | வீட்டுப் பராமரிப்பாளர் | 18 |
| 14 | சமயற்காரர் (மேற்கத்தேயம்) | 4 |

| இல. | தொழில் துறை | மொத்தம |
|---|---|---|
| 15 | கைவினைஞர் | 15 |
| 16 | சாரதி | 5 |
| 17 | மீன் வளர்ப்பவர் | 2 |
| 18 | ஜுகி இயந்திர இயக்குநர் | 33 |
| 19 | இயந்திரம் பழுதுபார்ப்பவர் | 2 |
| 20 | சுத்திகரிப்பாளர் | 16 |
| 21 | சமையலறை பணியாளர் | 1 |
| 22 | சமையலறை உதவியாளர் | 1 |
| 23 | விநியோகிப்பவர் | 37 |
| 24 | தாதி | 2 |
| 25 | வீட்டு உதவியாளர் | 1 |
| 26 | இலத்தின | 1 |
| 27 | சொக்லேட் பொதி செய்பவர் | 2 |
| 28 | வளைவு அலுவலர | 3 |
| | **மொத்தம்** | **324** |

## 2.25 சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டம்

இலங்கை அபிவிருத்திப் பாதையில் செல்ல வேண்டுமானால், சீரிய வேலை ஊக்குவிக்கப்பட வேண்டியிருக்கின்றது. சீரிய வேலை, சுதந்திரம், சமத்துவம், சமூகப் பாதுகாப்பு மற்றும் மனித கௌரவம் ஆகியவற்றின் சூழலொன்றில் ஆக்கத்திறனுள்ள பணியைப் பாதுகாப்பதற்கு ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம வாய்ப்புகளை பேணுகின்றது. சீரிய வேலையுடன் தொடர்புபடுகின்ற முக்கிய காரணி , வெறுமனே வேலை உருவாக்கம் எதிர்பார்க்கப்படுவதில்லை என்பதுடன், உருவாக்கப்படும் வேலைகள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருத்தல் வேண்டும். சீரிய வேலை நான்கு பிரதான ஆக்கக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டது: வேலை உருவாக்கம், ஊக்குவிப்பு மற்றும் தேசிய உற்பத்தித்திறன், வேலையில் உரிமைகள், சமூகப் பாதுகாப்பு, சமூகக் உரையாடல். இந்த 4 முக்கிய கூறுகளுக்கு மேலதிகமாக, உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் மற்றும் பாலின சமத்துவத்தை உறுதி செய்யும் பாடப் பகுதிகளை உள்ளடக்கிய திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

சீரிய வேலைத் திட்டத்தின் கீழ், பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பின்வரும் நிறுவனங்களுக்கு 14.95 மில்லியன் ‘ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.27** சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் - 2022

| | நிறுவனம் | தேறிய ஏற்பாடு (‘ரூபா) | பயன்படுத்திய தொகை (‘ரூபா) | செலவின விகிதம் |
|---|---|---|---|---|
| 01 | தொழில் திணைக்களம் | | | |
| i | பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகாரப் பிரிவு | 4,202,034.00 | 2,213,902.80 | 52.68% |
| ii | மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவு | 1,423,010.00 | 1,315,215.00 | 92.42% |
| iii | கைத்தொழில் பாதுகாப்புப் பிரிவு | 125,000.00 | 125,000.00 | 100% |
| iv | தொழிற்றரப் பிரிவு | 375,000.00 | - | - |
| v | திட்டமிடல், ஆராய்ச்சி,பயிற்சி மற்றும் வெளியீடுகள் பிரிவு | 2,189,405.20 | 489,405.20 | 22.35% |
| | | **8,314,449.00** | **4,143,523.20** | **49.83%** |
| 02 | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் | 3,500,000.00 | 3,454,500.00 | 98.7% |
| 03 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் | 3,136,000.00 | 3,059,500.00 | 97.56% |
| | **மொத்தம்** | **14,950,449.00** | **10,657,523.20** | **71.28%** |

## 2.2.24 திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள்

### 1. அமைச்சுசார் அலுவலகம்

I. இந்த அமைச்சு, நடைமுறைப் பிரச்சினையொன்றில் வருடாந்தம் அறிவுசார் கருத்தரங் கொன்றினை ஏற்பாடு செய்வதுடன், அதில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளின் பொழிப்பினை உள்ளடக்கிய சஞ்சிகையொன்றினை வெளியிடுகின்றது. இதன்படி, 2022 ஆம் ஆண்டில், “முறைசாரா துறை வேலையாளர்களின் விடியல்“ என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரைகள் கோரப்பட்டு, தொழில் துறையில் ஆழ்ந்த அறிவைக் கொண்ட நிபுணர்கள் குழுவினால் ஆய்வுக் கட்டுரைகள் மதிப்பீடு செய்ததன் பின்னர், அவை சஞ்சிகையாக வெளியிடப்படும்.

II. தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களால் வழங்கப்படும் சேவைகளை பொதுமக்களுக்கு அருகில் கொண்டு செல்வதற்காக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரின் எண்ணக்கருவில் “பூகோள சந்தை -2022” நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டம் 2022 ஒக்டோபர் 15 மற்றும் 16 திகதிளில் காலி சமனல மைதானத்தில் மொத்தமாக 9,750 பேர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டுருந்ததுடன், இந்த நடமாடும் சேவை காலி மாவட்டத்தில் நடைபெற்ற போதிலும், 14% பேர் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்பது பொதுமக்களின் சேவைகளைப் பெறுவதற்கான அவசியத்தையும் ஆர்வத்தையும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

III. சீரிய வேலை நிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான அனைத்து ஒருங்கிணைப்பு செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதனு பற்றிய முன்னேற்றம் 2.2.25 இன் கீழ் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

IV. இலங்கை தொழிற் செய்திமடலை வெளியிடுவது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் கையாளுதல். தொழிற் செய்திமடலை தற்போது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வெளியிடப்படுகின்றது என்பதுடன், ஆய்வாண்டு காலப்பகுதிக்காக, தொடர் இலக்கம் 72 இன் தொகுதி I வெளியிடப்பட்டுள்ளதுடன், தொடர் இலக்கம் 72 இன் தொகுதி II I வெளியிடுவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

V. அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளை உள்ளடக்கிய வருடாந்த செயற்றிட்டத்தை தயாரித்து அதனை உரிய தரப்பினருக்கு அனுப்புதல். வரவுசெலவுத் திட்டத்தின் அடிப்படையிலற்ற திற்கமைவாக வருடாந்த செயற்றிட்டத்தை தயாரித்து, அதை செயற்படுத்துதலும், மற்றும் மாதாந்த முன்னேற்ற மதிப்பாய்வுகளை நடத்துதல்.

VI. தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் நியதிகளின்படி, சனாதிபதி செயலகம், நிதி அமைச்சு, திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களம் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களம் ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன் மாதாந்த மற்றும் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

VII. 2021 ஆம் ஆண்டில் அமைச்சினால் அடையப்பெற்ற முன்னேற்றத்தை விபரிக்கின்'ற வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைத் தயாரித்தல்.

VIII. 2023 ஆம் ஆண்டிற்கான அமைச்சின் வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகளின் அங்கீகாரத்துக்காக நடத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்திற்கான முன்னேற்ற அறிக்கையைத் தயாரித்தல்.

### 2. திணைக்களத்தின் செயற்பாடுகளை கண்காணிப்பதன் மூலம் இலக்குகளை நோக்கி வழிநடத்துதல்

2022 ஆம் ஆண்டிற்கான திணைக்களத்தின் வருடாந்த செயற்திட்டம் தயாரிக்கப்பட்டு, அதன் கீழ் இலக்குகளை அடைவதற்கு திணைக்களத்தின் அனைத்து பிரிவுகளாலும்,

பிராந்திய அலுவலகங்களாலும் கையாளப்பட்ட முறைகள் மற்றும் அது தொடர்பான முன்னேற்றமும் மீளாய்வு செய்யப்பட்டது. இதன்படி, ஒவ்வொரு மாதமும் தொழில் ஆணையாளர்களின் மாதாந்தக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, ஒவ்வொரு பிரிவின் முன்னேற்றம் மற்றும் பிரிவுகளின் செயல்பாடுகளை மேற்கொள்கையில் எழுகின்ற பிரச்சினைகள் பற்றி எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இதேபோன்று, மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்கள் மூலம் ஆண்டு இலக்குகளை எய்துவது கண்காணிக்கப்பட்டிருந்தது. 2021.12.31 வரையிலான காலப்பகுதிக்கான பிராந்திய அலுவலகங்களின் முன்னேற்ற ஆய்வுக் கூட்டம் 2022.03.30 ஆம் திகதி முன்னாள் தொழில் அமைச்சர் தலைமையில் நடைபெற்றிருந்தது.

### 2.2.27 நிருவாக மற்றும் தாபனச் செயற்பாடுகள்

- இந்த அமைச்சு 2022 சனவரி முதல் டிசம்பர் 31 வரை 43 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்துடன், அவற்றில் 39 தொடர்பில் அமைச்சரவை முடிவுகள் பெறப்பட்டிருந்தன.

- யூலை வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதன் கீழ், 65 வயதை எட்டிய 38 யூலை வேலைநிறுத்தக்காரர்களுக்கு ஒரு முறை நிவாரண உதவித்தொகையை வழங்குவதற்கான பரிந்துரைகள் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

- ஆய்வாண்டு காலப்பகுதியின்போது, 580 பொது முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்துடன், அவை அனைத்தும் தேவையான நடவடிக்கைகளுக்காக உரிய பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அந்த பிரிவுகளிலிருந்து 251 பதிலிறுத்தல் அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன.

- தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஏழு (07) கோரிக்கைகள் பெறப்பட்டு, அவை அனைத்தினதும் பற்றிய தகவல்கள் வழங்கப்பட்டன.

- அமைச்சின் 200 அலுவலர்கள் பல்வேறு நிறுவனங்களால் நடத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. தனிநபர் கோப்பு முகாமைத்துவம், கருத்திட்ட அறிக்கைகளைத் தயாரித்தல், வெளிச்செல்லும் தலைமை மற்றும் ஆளுமை விருத்தி பயிற்சி செயலமர்வுகள் மற்றும் பட்டப் பிற்படிப்பு பட்டங்கள் போன்ற அத்தகைய பல்வேறு விடயங்கள் மீது இந்தப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் காணப்பட்டிருந்தன.

- அமைச்சின் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவில் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி அலுவலர்களுக்கான பயிற்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. தற்போதுள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் மற்றும் குடும்ப பின்னணி அறிக்கைகள் குறித்த புதிய சுற்றறிக்கை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த பயிற்சி நிகழ்ச்சிதிட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன. பயிற்சியாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சியொன்றும் நடத்தப்பட்டிருந்தது.

- வெளிநாட்டு புலமைப்பரிசில்கள், பயிற்சி செயலமர்வுகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிதிட்டங்களில் இந்த அமைச்சு மற்றும் தொழில் திணைக்களத்துடன் இணைந்துள்ள நிறுவனங்களின் அலுவலர்கள் பங்குபற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2022 சனவரி முதல் டிசம்பர் வரை நாற்பத்தேழு (47) அலுவலர்கள் வெளிநாட்டு பயிற்சி கற்கைநெறிகள் மற்றும் பயிற்சி செயலமர்வுகளில் இணைந்திருந்தனர்.

இதற்கு மேலதிகமாக, ஆய்வாண்டு காலப்பகுதியில் பின்வரும் தாபனச் செயற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன.

| அட்டவணை 2-28 | தாபனச் செயற்பாடுகளின் முன்னேற்றம் | |
|---|---|---|
| தொ.இல. | செயற்பாடுகள் | முன்னேற்றம் |
| 01 | பாராளுமன்றத்தில் வாய்மொழி கேள்விகளுக்கான பதில்கள் | 23 |
| 02 | பொது மேன்முறையீட்டுக் குழுவுக்கு அறிக்கைகள் அனுப்பப்பட்டமை | 14 |
| 03 | ஆண்டு அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தமை | 08 |
| 04 | ஆண்டு அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தமை | 07 |
| 05 | அமைச்சரவை விஞ்ஞாபனத்துக்கான அவதானிப்புகள் | 15 |

**2.2.28 அமைச்சின் நிதிச் செயலாற்றுகை**


அரச கொள்கைகளுக்கு இணங்க இந்த அமைச்சுக்கும், அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் 2021 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்ட நிதி மூலங்களை வினைத்திறனுடன், பயனுள்ளவகையிலும் மற்றும் சிக்கனமாகவும் நிருவகிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

| அட்டவணை 2.29 | திறைசேரி ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல் | | |
|---|---|---|---|
| | நிறுவனம் | மீண்டெழும்செலவினம் ('ரூ) '000 | மூலதனச் செலவினம் ('ரூ) '000 |
| 1. | அமைச்சுசார் அலுவலகம் | | |
| | தொழில் பிரிவு | 218,936 | 10,910 |
| | வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவு | 701,244 | 139,780 |
| 2 | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் | 11,686 | 3,301 |
| 3 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் | 4,489 | 1,605 |
| 4 | வேலையாளர் நட்ட ஈட்டு ஆணையாளர் அலுவலகம் | 37,272 | 1,624 |
| 5 | தேசிய உற்பத்தித்திறன் செயலகம் | 524,637 | 15,906 |
| | **மொத்தம்** | **1,498,264** | **173,126** |
| 6 | தொழில் திணைக்களம் | 2,298,071 | 280,211 |
| 7 | மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் | 499,476 | 20,739 |
| | **மொத்தம்** | **4,295,811** | **474,076** |

**2.2.29 அகக் கணக்காய்வுச் செயற்பாடுகள்**

அகக் கணக்காய்வு விடயப்பரப்பு, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் அதாவது தொழில் திணைக்களம், வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம், தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், சிரம வாசனா நிதியம், தேசிய உற்பத்தித்திறன் செயலகம், மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரகம் ஆகியவற்றின் அகக் கணக்காய்வு நடவடிக்கைகளையும், விசேட விசாரணை களையும் நடத்துகின்ற பொறுப்பை உள்ளடக்குகின்றது,

**கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் மற்றும் நடத்தப்பட்ட கணக்காய்வு விசாரணைகள்**




| | தொழில் மற்றும்வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு | தொழில் திணைக்களம் | தொழில் கற்கைகள் நிறுவகம் | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் | வேலையாளர் நட்டுஈட்டு ஆணையாளர் அலுவலகம் | தேசிய உற்பத்தித்திறன் செயலகம் | மனித வலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் | இலங்கை வெ ளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் | ஒஇலங்கைவெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரகம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 2 | 2 |
| நடத்தப்பட்ட கணக்காய்வு விசாரணைகளில் எண்ணிக்கை | 3 | 16 | 1 | 2 | 0 | 5 | 0 | 1 | 0 |

வரைபடம் 2.15 உள் தணிக்கை நடவடிக்கைகளின் முன்னேற்றம்

குறிப்புகள்:

I. அனைத்து நிறுவனங்களுடனும் தொடர்புடைய தகவல்களை கூட்டிணைக்கின்ற 04 காலாண்டு களுக்கான காலாண்டு அறிக்கைகள் வழங்கப்படுகின்றன.

II. அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற அனைத்து நிறுவனங்களிடமிருந்தும் ஆண்டின் ஆரம்பத்தில் தகவல்கள் கோரப்பட்டு பூர்வாங்க அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது.

III. ஒவ்வொரு நிறுவனத்தின் கூட்டத்தின் முடிவிலும் உரிய கூட்டங்களின் கலந்துரையாடல் பிரமாணக் குறிப்புகள் மற்றும் கூட்டங்களின் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.